ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-14 | பாஞ்சஜன்யம் ஜுன்-2011-146 | ஒலி 7 |
|---|---|---|

## 1) மன்னுபுகழ் மணவாளமாமுனிவன் நூல் வெளியீடும், பாஞ்சஜன்யம் ஆசிரியருக்குப் பாராட்டு விழாவும்.

மதுரைப் பேராசிரியர் ஸ்ரீ.உ.வே. அரங்கராஜன் ஸ்வாமி அவர்களால் எளியநடையில் பிள்ளைலோகம் ஜீயரின் யதீந்த்ர ப்ரவணபிரபாவத்தை யொட்டி ஸ்ரீமணவாளமாமுனிகளின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர்தம் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ‘மன்னுபுகழ் மணவாளமாமுனிவன்’ என்ற நூல் 10.7.2011, ஞாயிற்றுக்கிழமை மதுரை கூடலழகர் ஸந்நிதியில் ஸ்ரீவில்லி புத்தூர் ஸ்ரீமணவாளமாமுனிகள் மடத்து வர்த்தமான ஜீயர் ஸ்வாமி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோப ராமானுஜ ஸ்வாமி திருக்கரங்களால் வெளியிடப் படவுள்ளது. அன்றையதினம் 18 பாகங்கள், 7 பகுதிகள், 7100 பக்கங்கள் கொண்ட திருவரங்கம் திருக்கோயில் வரலாற்றை எழுதி ஸ்ரீவைஷ்ணவ உலகத்திற்கு உபகரித்த பாஞ்சஜன்யம் ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் அவர்களுக்குப் பாராட்டு விழா ஒன்றும் நடைபெற உள்ளது. அறிஞர்கள் பலர் வருகை தந்து இந்த விழாவில் பங்கு கொள்ள உள்ளனர்.

ஆழ்வார்கள் மற்றும் பூர்வாசார்யர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரித்துக் கூறும் நூல்களுள் தலையாயதாகக் கொள்ளப்படுவது நம்பிள்ளையின் சீடரான பின்பழகராம் பெருமாள் சீயர் இயற்றிய 'ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்' என்னும் நூலாகும். இந்த நூல் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டது. நம்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றின் முற்பகுதியை விவரிப்பதோடு இந்நூல் முடிவடைகிறது.

நம்பிள்ளை வாழ்க்கை வரலாற்றின் பிற்பகுதி அவருடைய சிஷ்யரான வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை வைபவம், பிள்ளைலோகாசார்யர், அழகியமணவாளப் பெருமாள் நாயனார் ஆகியோருடைய வாழ்வும் பணியும், முகம்மதியர்களின் படை யெடுப்பின் விளைவாகப் பிள்ளைலோகாசார்யர் அழகிய மணவாளனை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு தெற்குநோக்கிச் சென்றபோது ஜ்யோதிஷ்குடி என்னும் ஊரில் பரமபதித்தது, அவருடைய அந்திம கால ஆணைகள், கூரகுலோத்தமதாஸர் திருவாய் மொழிப் பிள்ளையைத் திருத்திப் பணி கொண்டது, இதனிடையில் அழகியமணவாளனின் நெடும்பயணம், சங்கமகுல மன்னர் களின் எழுச்சி, அழகியமணவாளன் திருவரங்கத்திற்கு மீண்டும் எழுந்தருளியது, அழகியமணவாளப் பெருமாள் நாயனார் எனப்படும் ஸ்ரீமணவாளமாமுனிகள் திருவாய் மொழிப்பிள்ளையை ஆச்ரயித்தது, திருவாய்மொழிப் பிள்ளையின் அந்திமகாலத்தில் அவர் அழகியமணவாளப் பெருமாள் நாயனாருக்கு இட்ட பணிகள், அழகியமணவாளப் பெருமாள் நாயனார் திருவரங்கத்திற்கு எழுந்தருளி ஆசார்ய பீடத்தை அலங்கரித்தது, திவ்யதேசங்களில் வழிபாட்டு முறைகளை மீண்டும் நிலைநிறுத்தியது,

அழகியமணவாளப் பெருமாள் நாயனார் ஸந்யாஸாச்ரமம் ஸ்வீகரித்தது, பல்லவராயர் மடத்தை அவருக்கு இருப்பிடமாக நம்பெருமாள் அளித்தது, நம்பெருமாளுக்குத் திருவாய்மொழியின் ஆழ் பொருளை நம்பிள்ளை அருளிச் செய்த ஈட்டின் அடிப் படையில் 10மாத காலம் காலக்ஷேபம் சாதித்தது, சாற்று முறை யன்று நம்பெருமாளை ஒரு சிறு பாலகன் வடிவில் வந்து ஒப்புயர் வில்லாத ''ஸ்ரீசைலேச தயாபாத்ரம். . . .'' என்று தொடங்கும் தனியனை ஸமர்ப்பித்தது, ஸ்ரீமணவாளமாமுனிகளை ஆச்ரயித்த

சிஷ்யர்களின் பெருமை, கந்தாடை ராமானுஜமுனி வைபவம், ஸ்ரீமணவாளமாமுனிகள் அருளிச்செய்த உரை நூல்கள் மற்றும் க்ரந்தங்கள், மாமுனிகளின் பரமபதப்ராப்தி என பல்வேறு தலைப்புகளில் மிக நுண்ணிய செய்திகளை அளித்தவர் பிள்ளைலோகம்ஜீயர் ஆவார்.

இவர் இராமானுசரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் ''ராமானுஜார்ய திவ்ய சரிதை'' என்னும் நூலை எழுதியவர். இராமாநுசருடைய புநர் அவதாரமாகக் கொள்ளப்படும் ஸ்ரீமணவாள மாமுனிகளின் வாழ்க்கை வரலாற்றை ''யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம்'' என்னும் நூலில் விவரித்துள்ளார் பிள்ளை லோகம் ஜீயர். இந்த இரண்டு வரலாற்று நூல்களும் 16ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இயற்றப்பட்டவையாகும். அவை மணிப்பிரவாள நடையில் அமைந்திருப்பதால் அனைவராலும் எளிதில் படித்து அறிய இயலா திருந்த நிலையில் மதுரைப் பேராசிரியர் முனைவர். இரா. அரங்கராஜன் ஸ்வாமி 2004ஆம் ஆண்டு ''ராமாநுஜார்ய திவ்யசரிதை'' என்ற நூலின் எளிய தமிழாக்கத்தை ''காரேய் கருணை இராமானுசன்'' என்ற தலைப்பில் எழுதி வெளியிட்டார். இந்த நூல் பெரும் வரவேற்பைப் பெற்றது. காலத்தின் தேவைக் கேற்ப நூல்கள் எளிமைப்படுத்தி வெளியிடப்படாவிட்டால் பலர் அந்த நூல்களின் பெருமையை அறிவதற்கு வாய்ப்பில்லை.

ஸ்ரீமணவாளமாமுனிகளுடைய வாழ்க்கை வரலாறு ஸ்ரீவைஷ்ணவத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஓர் ஆசார்யனின் வரலாறாகும். அவதாரம் தொடங்கி அவதார ஸமாப்தி ஈறாக ஸ்ரீமணவாளமாமுனிகளின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் வைணவத்தின் ஏற்றமிகு வரலாறாகும். பிள்ளை லோகம் ஜீயர் உரையாசிரி யராக மட்டும் திகழவில்லை. கல்வெட்டுகள், வரலாற்றுப் பதிவேடுகள், களப்பணி ஆகிய வற்றின் அடிப்படையில் ''யதீந்த்ரப்ரவணப்ரபாவத்''தைப் படைத்துள்ளார். பல நுட்பமான செய்திகளைத் தன்னுள்ளே கொண்டது இந்த நூல். இவற்றையெல்லாம் தெள்ளத்தெளிய 147 தலைப்புகளில் தந்துள்ளார் ஸ்ரீ.உ.வே. அரங்கராஜன் ஸ்வாமி. இந்த நூலுக்கு 'மன்னுபுகழ் மணவாளமாமுனிவன்' என்ற தலைப்பினைத் தந்துள்ளார்.

நம்பிள்ளை ஈட்டினை ஆராய்ந்து ‘திருவாய்மொழிப் பேருரையாளர் நம்பிள்ளை உரைத்திறன்’ என்ற ஆய்வு நூலுக்கு முனைவர் பட்டம் பெற்றதோடு மட்டுமல்லாமல் இன்றும் பல ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கி வருபவர் ஸ்ரீ.உ.வே. அரங்கராஜன் ஸ்வாமி. வரலாற்று உணர்வு மிக்கவர். வரலாற்றுச்செய்திகள், கல்வெட்டுச் செய்திகள் ஆகியவற்றை இணைத்து குருபரம்பரை நூல்கள் வெளியிடப்படவேண்டும் என்ற பேரவா கொண்டவர். அதன் தாக்கத்தை ‘மன்னுபுகழ் மணவாளமாமுனிவன்’ என்ற இந்த நூலில் காணலாம்.

அழகியமணவாளன் தெற்கே சென்றபோது காளை யார்கோயில் எனப்படும் ஜ்யோதிஷ்குடியில் சிலகாலம் தங்கியி ருந்தார் என்று சிலர் இன்றும் கூறி வருகின்றனர். அந்தக் கூற்றினை மறுத்து ஜ்யோதிஷ்குடி என்பது ஆனை மலையின் வடக்குப்பகுதி அடிவாரத்தில் அமைந்துள்ளது என்றும், அங்கிருந்து திருமாலிருஞ் சோலை, பாலக்காடு, கோழிக்கோடு, உப்பங்கழிகளைத் தாண்டி முந்திரிக்காடு, திருக்கணாம்பி, மேலக்கோட்டை திருநாராய ணபுரம், திருமலைக்காடுகள் அதன்பிறகு திருமலை திருக் கோயிலைச் சென்றடைந்தார் என்பதை வரலாற்றுக் கண்ணோட்டத் தோடு மட்டுமல்லாமல் அந்தந்த இடங்களுக்கு நேரில் சென்று வரைபடங்களை தம்முடைய சீடரான மதனகோபால இராமானுச தாஸர் உதவி கொண்டு தயாரித்து இந்த நூலில் பின்னி ணைப்பாகத் தந்துள்ளார் நூலாசிரியர்.

திருவரங்கம் பெரியகோயிலில் 2ஆம் திருச்சுற்றான ராஜமகேந்திரன் திருச்சுற்று கிழக்குப்பகுதியில் அமைந்து உள்ள கல்வெட்டு எண் A.R.No. 55/1892 தரும் குறிப்பு களை இன்று தொல்பொருள் ஆய்வுத்துறையினர் வெளி யிட்டுள்ள ஆண்டறிக் கைகள் மூலம் அறிந்து கொள்கிறோம். ஆனால் இதுபோன்ற அரசு சார்ந்த அமைப்புகள் இல்லாத 16 ஆம் நூற்றாண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கல்வெட்டில் அமைந்துள்ள அனைத்து சொற் றொடர்களையும் தம்முடைய ‘யதீந்த்ர ப்ரவணப்ரபாவத்தில்’ தந்துள்ளார் என்பதைச் சுட்டிக் காட்டி தமது வரலாற்று உணர்வை வெளிப்படுத்தியுள்ளார் ஸ்ரீ.உ.வே. அரங்கராஜன் ஸ்வாமி. மேலும் வாணாதிராயர்கள், மற்றும் சம்புவரையர்களைப் பற்றிய

குறிப்புகள், கங்கா தேவியின் ‘மதுரா விஜயத்தில்’ குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகள், கந்தாடை ராமானுஜமுனி வரலாறு, திருமாலிருஞ் சோலை, திருமலை, காஞ்சிபுரம், திருக்குறுங்குடி ஆகிய திவ்ய தேசங்களில் மாமுனிகள் ஏற்படுத்தி வைத்த நிர்வாகச் சீர்திருத் தங்கள், திருநாராயணபுரத்தில் திருநந்தவன கைங்கர்யத்தை மேற்கொள்ளுவதற்கு அவர் செய்த ஏற்பாடுகள் ஆகியவற்றை விவரித்துள்ளார்.

வைணவ குருபரம்பரை நூல்களுக்கு விளக்கம் அளிப்போர்களும், அவற்றிற்கு விவரணம் எழுதுவோர் களும் பெருமளவில் வரலாறு மற்றும் கல்வெட்டுகள் தழுவிய செய்திகளைத் தருவதில்லை. இவற்றின் முக்கியத்து வத்தை வைணவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதே இதற்கு அடிப்படைக் காரணமாகும். அசைக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் அந்நூலாசிரியருக்கு வரலாற்று உணர்வு இன்றியமையாத தொன்றாகும்.

நமது ஸம்ப்ரதாயத்தில் வேதவேதாந்த நூல்கள் பரந்த அளவில் அமைந்துள்ளன. ஆயினும் புதிய அணுகு முறைகளைக் கொண்டு 21ஆம் நூற்றாண்டின் தேவைக் கேற்ப ஸம்ப்ரதாய அறிவினைப் புகட்டுவதற்குப் பெரும்பாலானோர் முன் வருவ தில்லை. ஓர் புதிய அணுகு முறையைக் கொண்டு வைணவர் களிடையே ஸம்ப்ரதாய அறிவைப் பரப்பவேண்டும் என்ற பரந்த சிந்தனையைக் கொண்டவர் ஸ்ரீ.உ.வே. அரங்கராஜன் ஸ்வாமி. ஸ்ரீமணவாளமாமுனிகளின் வாழ்க்கை வரலாற்றை ஒரு முழுமை யான வடிவில் இந்த நூலில் காணலாம். தெளிந்த நடை, எளிய தமிழ்ச் சொற்றொடர்கள், ஆங்காங்கே விளக்கக்குறிப்புகள், ஒரு தலைப்பிற்கும் மற்றொரு தலைப்பிற்கும் தரப்பட்டுள்ள தொடர்பு ஆகியவற்றால் மிகச் சிறந்த நூலாக ‘மன்னுபுகழ் மணவாள மாமுனிவன்’ திகழ்கின்றது.

‘அஷ்டதிக்கஜங்கள்’ என்று போற்றப்படும் ஆசார்ய பெருமக்கள் ஸ்ரீமணவாளமாமுனிகளை ஆச்ரயித்த நிகழ்ச்சி கள் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன இந்த நூலில். இத்தகைய

தொரு சிந்தனைக்கு விருந்தான நூலை எழுதி உபகரித்த ஸ்ரீ.உ.வே. அரங்கராஜன் ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து ஸ்ரீவைஷ்ணவ உலகத்திற்கு மேலும் மேலும் இதுபோன்ற நூல்களை எழுதி உபகரித்து வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று பெரியபெருமாள் பெரியபிராட்டியார் திருவடி களில் வேண்டி நிற்கின்றேன்.

436 பக்கங்கள் கொண்ட (டெமி 1/8) இந்த நூலின் விலை ரூபாய். 200/- வெளியீட்டு தினத்தன்று ரூபாய். 150க்கு சலுகை விலையில் இந்த நூல் விற்பனைக்கு அளிக்கப்படவுள்ளது. ஸ்ரீமணவாளமாமுனிகளின் முழுமையான வரலாற்று ஆதாரங் களோடு அறிந்து கொள்ள விழையும் அன்பர்களுக்கு பெரு விருந்தாக அமைந்துள்ளது இந்த நூல். ✸✸✸

## கண்டதும் கேட்டதும்

(1) வானமாமலை திவ்யதேசத்தில் மதுரை ஆடிட்டர் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீனிவாஸன் ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் 20.5.2011 வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. நாலாயிர திவ்யப்பிரபந்த ஸேவா காலத்துடன் நடைபெற்ற இந்த உத்ஸவத்தில் பாஞ்சஜன்யம் ஆசிரியர் ''ஸ்ரீமணவாளமாமுனிகள் வைபவம்'' என்ற தலைப்பில் 19/5 அன்று சொற்பொழிவாற்றினார். இந்தத் திவ்யதேசத்தில் மூலவருக்கு நித்யம் எண்ணெய்க்காப்புடன் திருமஞ்சனம் நடைபெறுகிறது. வானமாமலை ஜீயருடைய ஆதீனத்திற்கு உட்பட்டது இந்தத் திருக்கோயில். சென்னை உயர்நீதிமன்றத்தில் பணி புரிந்து ஓய்வு பெற்ற ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணன் ஸ்வாமியினுடைய புருஷகாரத்தால் அன்றையதினம் தெய்வநாயகனை மங்களாசாஸனம் செய்யக் கூடிய பேற்றினைப் பெற்றேன்.

2) 20.5.2011 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்று வந்த வைகாசி ப்ரஹ்மோத்ஸவத்தில் 6ஆம் நாள் உத்ஸவப் புறப்பாட்டில் பங்கு கொள்ளும் பேறு கிட்டிற்று. 6ஆம் நாள் உத்ஸவத்தில் தேவப் பெருமாளுக்கு கிருஷ்ணாவதார ஸேவை. சூர்ணாபிஷேகம். இன்று

காலை ஒரு பல்லாவில் (பானையில்) வைக்கப்பட்டிருக்கும் மஞ்சள் பொடியினால் மூலவர் உத்ஸவர் இருவருக்கும் சூர்ணா பிஷேகம் நடைபெறும். ஐந்து அல்லது ஆறாம் நாள் காலையில் லக்னம் பார்த்து தேருக்கான கலசம் எடுத்துக் கொண்டு போகப் படும். 6ஆம் நாள் மணவாளமாமுனிகளின் திருமூல நக்ஷத்ரமாக அமைந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் அன்று காலை திரும்பும் போது உபதேசரத்தினமாலை ஸேவிப்பர். வாஹன மண்டபத்தில் சாற்றுமுறை நடைபெறும். இந்த ஆண்டு 6ஆம் உத்ஸவத்தன்று மூலநக்ஷத்ரம் கூடியிருந்தது.

இந்த திவ்யதேசம் பூதத்தாழ்வார், பேயாழ்வார் மற்றும் திருமங்கையாழ்வார் ஆகியோர்களால் மங்களாசாஸனம் செய்யப் பட்டதும், திருக்கச்சிநம்பிகள், இராமானுசர், கூரத்தாழ்வான் வேதாந்தாசார்யர் மற்றும் மணவாளமாமுனிகள் ஆகியோரால் போற்றிப் பாடப்பட்டதுமாகும். இந்தப் பெருமாள் கண்டருளும் உத்ஸவங்கள் அதிலும் வருடாந்திர கருடோத்ஸவம், திருத்தேர் ஆகியவை இந்தியா முழுமையும் பெருமையுடன் பேசப்படுவதும், யாவராலும் காஞ்சிக்கு வந்து வணங்கப் படுவதுமாகும்.

ஆனாலும்கூட இங்கு ஸ்ரீவைஷ்ணவ சமுதாயத்தின் இரு பிரிவுகளான தென்கலை மற்றும் வடகலை வகுப்பினர் களிடையே உரிமைப்போராட்டம் சுமார் 200 வருடங்களாகத் தொடர்ந்து- அதாவது கி.பி.1711ஆம் ஆண்டு வடகலை தாதா சார்யர்கள் காஞ்சிக்கு வந்ததிலிருந்து ஏற்பட்டதான சண்டைகள், மற்றும் நீதிமன்ற வழக்குகள் மிகுந்து காணப்படுகின்றன. இத்தகைய உரிமைப் போராட்டங்கள் வடகலை வகுப்பினரால் தவறாகப் பிரசாரம் செய்யப்பட்டும், தங்களது செல்வாக்கைப் பயன் படுத்திச் செயல்பட்டும் வருகின்ற காரணத்தால் முடிவேயில்லாமல் சென்று கொண்டிருக்கிறது. பரம்பரை உரிமையேதுமில்லை என்று நீதிபதிகள் கூறிக் கொண்டே இருந்த போதும் தாதாசார்யர்களே கௌரவ தர்மகர்த்தா பதவியில் நீடிக்க அனுமதிக்கப் பட்டிருந்தி ருக்கின்றனர். பெரும்பாலானோர் இந்தத் திருக்கோயிலில் தென் கலையார்களுக்கு அமைந்துள்ள உரிமைகளைப் பற்றியும் கி.பி. 1711க்கு முன்பு இந்தக் கோயில் தென்கலையார் வசம்தான் இருந்தது

என்பது பற்றிய உண்மையும் சென்ற டையவில்லை. இன்றும் இந்தத் திருக்கோயிலில் பல இடங்களில் வடகலை திருமண்காப்பு சாற்றுப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலான கைங்கர்யங்கள் குறிப்பாக தேவப் பெருமாள் கேட்டு மகிழும் அருளிச்செயல் கோஷ்டியை அலங்கரிப்பவர்கள் தென்கலை யார்களே.

அன்றையதினம் காலை சுமார் 9 மணிக்கு நானூறுக்கும் மேற்பட்ட தென்கலையார்கள் திருவடி ஸந்நிதிக்கு அண்மையில் கூடியிருந்தனர். அவர்கள் அனைவரும் உபதேச ரத்தினமாலை ஸேவிப்பதற்காக அங்கே காத்திருந்தனர். அப்போது திருக் கோயிலின் உள்அமைந்துள்ள புஷ்கரிணியில் யாரோ விழுந்து தற்கொலை செய்து கொண்டுவிட்டதாகச் செய்தி பரவிற்று. அவ்வாறு ஒருவர் கோயிலுக்குள் தற்கொலை செய்து கொண்டு விட்டால் அந்தப் பிணத்தை மீட்டு உரிய புண்யாஹவாசனங்கள், ஹோமங்கள் ஆகியவற்றைச் செய்த பிறகே தேவப்பெருமாள் மேலைகோபுரம் வழியாக வாஹன மண்டபத்திற்கு எழுந்தருள முடியும்.

தீயணைப்புப் படையினர் மற்றும் பலர் புஷ்கரிணியில் பலமணிநேரங்கள் தேடியும் எந்தப் பிணமும் காணப்பட வில்லை. இது ஒரு வதந்தி என்று கூறி அவர்கள் சென்று விட்டார்கள். அதன்பிறகு சுமார் 11.30 மணிக்கு உபதேசரத்தின மாலை கோஷ்டி ஸந்நிதி வீதியில் நடைபெற்று வாஹன மண்டபத்தில் சாற்றுமுறை நடைபெற்றது. உபதேசரத்தின மாலை கோஷ்டி நடைபெறுவதை விரும்பாத விஷமிகள் சிலர் இதுபோன்ற புரளிகளைப் பரப்பவிட்டு அதில் ஒரு அலாதியான இன்பம் காண விழைந்தனர் போலும் என்று பொது மக்களிடையே ஓர் ஐயப்பாடு தோன்றியது. தேவப்பெருமாள் ஒருவரே உண்மையை அறிவார்!

தேவப்பெருமாள் வாஹன மண்டபம் சேர்ந்தபிறகு தென் கலை ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸந்நிதிக்கு எழுந்தருளி அங்கு உபதேசரத்தின மாலை கோஷ்டி நடைபெற்றது. சுமார் நானூறு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூடியிருந்தனர். அன்றையதினம் இரண்டு கோஷ்டிகள், காலையில் உபதேசரத்தின

மாலை கோஷ்டியும், மாலையில் திருவாய்மொழி நூற்றந்தாதி கோஷ்டியும் நடைபெறும். 20.5.2011 அன்று உபதேசரத்தின மாலையும், திருவாய்மொழி நூற்றந்தாதியும் மதிய கோஷ்டி யிலேயே ஸேவிக்கப் பெற்றன. இன்னொரு புரளி பரப்பி விடப் படும் முன்பு மாமுனிகள் ஸந்நிதியில் உபதேசரத்தினமாலை மற்றும் திருவாய்மொழி நூற்றந்தாதி ஸேவாகாலம் முழுமையாக நடைபெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அவை ஸேவிக்கப் பெற்றன. விசேஷ மான பிரஸாதங்கள் கோஷ்டியார் அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டன. காஞ்சிபுரத்தில் ஆழ்வார் ஆசார்யர்களுக்கு நடைபெறும் உத்ஸவங்களிலே மணவாளமாமுனி களுக்கு நடைபெறும் அவதார திருநக்ஷத்ர உத்ஸவம் மிகச் சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அருளாளப்பெருமாள்கோயில் எனப்படும் இந்த தேவராஜ ஸ்வாமி தேவஸ்தானம் தென்கலை திவ்யதேசமே என்பதற்கு அத்தாட்சியாக இக்கோயில் கருங்கல் கட்டிடங்களில் கருங் கற்களால் ஆன மதிள்களின் நடுப்பாகம், பாத்திரங்கள், வாஹனங்கள் ஆகியவற்றில் தென்கலைத் திருமண் காப்புகள் காணப்படுகின்றன. இத்தகைய திருமண்காப்புகளை நீதிமன்றங் களின் உத்தரவுப்படி, பட்டியல் எடுத்து கலெக்டர், நீதிபதிகள் ஆகியோரால் நேரில் வந்து பார்த்து உறுதி செய்யப்பட்டு நீதிமன்றக் குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இது ஒரு வடகலை கோயிலாக இருந்திருக்கக்கூடுமானால் தென்கலை மந்திரமாகிய ‘‘ஸ்ரீசைலேச தயாபாத்ரம்’’ ஸேவிக்கவோ, தென்கலை அத்யாபகமிராசுதாரர்கள் இருக்கவோ; மேலே குறிப் பிட்டுள்ளபடி கோயிலில் பல இடங்களிலும் தென்கலை திருமண் காப்புகள் இருக்கவோ; தாதாசார்யர்கள் தவிர மற்ற எல்லா தீர்த்த மிராசுடையவர்கள் வஸ்திரம் மற்றும் சாற்றுபடி கைங்கர்யம் தென்கலையார்களிடம் இருக்கவோ வடகலையார்கள் அனுமதித்தி ருக்கமாட்டார்கள். இத்தகைய திருமண்காப்புகள் மற்றும் மிராசு தார்கள் பண்டைய காலத்திலிருந்தேயிருப்பதை தொல்பொருள் இலாக்காக் குறிப்புகளும் வெளிப்படுத்துகின்றன.

3) சென்ற இதழில் அறிவித்தபடி சென்னை உயர்நீதி மன்ற மூத்த வழக்கறிஞரும், ஸம்ப்ரதாய வல்லுநருமான ஸ்ரீ.உ.வே. T.S. ராமஸ்வாமி அய்யங்காரின் சதாபிஷேக மஹோத்ஸவ உபந்யாஸத் தொடரில் 'திருக்குறுந்தாண்டகம்' என்ற தலைப்பில் 20.5.2011 அன்று பாஞ்சஜன்யம் ஆசிரியர் உரையாற்றினார்.

4) 24.5.2011, செவ்வாய்க்கிழமையன்று திருக்கண்ணங் குடி, திருக்கண்ணமங்கை, திருச்சேறை ஆகிய திவ்யதேசங் களுக்கு மங்களாசாஸன நிமித்தமாக விடை கொள்ள நேரிட்டது. தற்போது திவ்யதேசங்கள் பல ஆபத்துக்களை எதிர் நோக்கி யுள்ளன. குறிப்பாக அந்தந்த திவ்யதேசங்களில் திருவாராதனத்தை உரிய முறையில் மேற்கொள்வதற்கும், திருமடைப்பள்ளி கைங்கர்யத்தில் ஈடுபடவும் தகுந்த நபர்கள் கிடைப்பதில்லை. இந்து சமய அறநிலையத் துறை அந்தந்த கைங்கர்ய பரர்களுக்குரிய கணிசமான ஊதியத்தைக் கொடுப் பதற்கு முன்வருவதில்லை. நீண்ட பரப்பளவும் மண்டபங்கள் பலவற்றையும் கொண்ட திருக் கோயில்களைத் தினந்தோறும் திருஅலகிட்டு சுத்தம் செய்வதற்குக் கூட இயலுவதில்லை. ஸம்ப்ரோக்ஷணமான பிறகு சில மாதங் களிலேயே பறவைகள் மூலம் நடைபெறும் இனப் பெருக்கத்தால் அரச மரங்களும் ஆல மரங்களும் மதில்களில் துளிர்விட்டு அவற்றின் வேர்கள் மதிலைப் பிளந்திடும் அளவிற்கு சக்தி பெற்றனவாக அதில் ஊடுருவிச் செல்கின்றன. திருநந்தவனம் பாழ்பட்ட நிலையில் காணப் பட்டது. திருநந்தவனத்தின் ஒரு பகுதி சாம்பல் மற்றும் குப்பைகளால் மூடப்பட்டு ஒரு சிறு குன்று போல் காட்சியளிக்கிறது. டூரிஸ்ட் பஸ்களில் மின்னல் வேகத்தில் மங்களாசாஸனத்தை மேற்கொள்ளும் பக்தர்களே அவ்வப்போது வந்து செல்வர்.

திருக்கண்ணங்குடியில் புகழ்பெற்ற மகிழமரத்திற்குக் கீழ்ப்புறம் அமைந்துள்ள நெடிதுயர்ந்த மதிலின்மேல் பெரிய தொரு அரசமரம் காணப்படுகிறது. இதை உடனடியாக அப்புறப் படுத்தாவிட்டால் மதில் உடைந்து பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

5) திருக்கண்ணமங்கை திவ்யதேசம் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப் பெற்ற திருப்பதியாகும். இந்தத் திவ்யதேசத்தில் திருக்கண்ணமங்கையாண்டானின் திருவரசு திருக்கோயிலினுள் செண்பகத் திருவீதியில் அமைந்துள்ளது. நாதமுனிகளுடைய முக்கிய சிஷ்யர்களில் ஒருவரான இவர் திருக்கண்ணமங்கை என்னும் திவ்யதேசத்தில் அவதரித்தவர். பகவத் விஷயம் (4.6.8) அடையவளைந்தான் அரும்பத உரை:- ஸ்ரீவைஷ்ணவர்கள் அபிமானம் ஸீக்ரபலப்ரதம் என்றதுக்கு ஓர் ஐதிஹ்யம். ''திருக்கண்ணமங்கையாண்டான் பத்தராவி கைப்புடையிலே ஸ்வவ்யாபாரத்தை விட்டுக் கண்வளர்ந்தருளின போது அவருடைய சிஷ்யர், 'எமக்கினி கதி ஏது?' என்ன, 'நம்முடைய சமீபத்திலே இரும்' என்று அருளிச் செய்ய, அவர் அப்படியே செய்து அவருக்கு முன்பே பரமபதத்திற்குப் போனார். திருக்கண்ணமங்கையாண்டான் பின்பு மூன்றாம் நாளிலே திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

பகவத் விஷயம் (9.2.1):- திருக்கண்ணமங்கை யாண்டான் அங்கே ஒரு திருமகிழ மரத்தின் அடியிலே இருந்து சருகைத் திருவலகிடாநிற்க, கூட வாசித்து நாஸ்திகனா யிருப்பான் ஒருவன். ''பகவான் உபாயம், நாம் அநன்ய ப்ரயோஜனர். இபொழுது இந்த க்லேசத்துக்குப் பலமென்?'' என்ன, திருவலகிட்ட இடத்தையும் இடாத இடத்தையும் காட்டி, 'இவ்விடமும் அவ்விடமும் இருந்தபடி கண்டாய்க்கு ஒரு பலமில்லை என்று தோற்றியிருந்ததோ?' என்றான்.

திருமாலை 38ஆம் பாட்டு வ்யாக்யானம்:- (உன் கடைத் தலையிருந்து) திருக்கண்ணமங்கையாண்டான். ஒரு ஸம்சாரி தன் வாசலைப் பற்றிக் கிடந்ததொரு நாயை நலிந்த வனை வெட்டித் தானும் குத்திக் கொண்டபடியைக் கண்டு, 'ஒரு தேஹாத்மாபிமானியளவு இதுவானால் பரம சேதனன் யமாதிகள் கையில் நம்மை விட்டுக் கொடான்' என்று திருவாசலைப் பற்றிக் கிடந்தானிறே.

வார்த்தா மாலை 109ஆவது வார்த்தை:- உபாயத்தை

நிலையிட்டவர்கள் பிராட்டியும், த்ரௌபதியும் திருக்கண்ண மங்கையாண்டானும்.

ஸ்ரீவசனபூஷணம் சூர்ணை 80:- உபாயத்துக்குப் பிராட்டியையும், த்ரௌபதியையும், திருக்கண்ணமங்கையாண் டானையும் போலே இருக்கவேண்டும்.

ஸ்ரீவசனபூஷணம் சூர்ணை 82:- திருக்கண்ணமங்கை யாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்.

மேற்படி சூர்ணைக்கு மணவாளமாமுனிகள் வ்யாக் யானம். (திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான். அதாவது ஸ்வரக்ஷண ஹேதுவான ஸ்வவ்யாபாரங் களை விட்டானென்றபடி. ஒரு ஸேவகனுடைய நாயை, ஒரு ஸேவகன் அடிக்க, அவன் அது பொறாமல் அடித்தவனோடே எதிர்த்துப் பொருது அவனையுங் கொன்று தானும் குத்திக் கொள்வதாக இருக்கிறபடியைக் கண்டு ஒரு க்ஷுத்ரசேதனன் தன் அபிமானத் திலே ஒதுங்கினது என்னும் இவ்வளவுக்காகத் தன்னை அழிய மாறினபடி கண்டால் பரமசேதனன் அபிமானத் திலே ஒதுங்கினால் அவன் என்படுமோ? என்று ஸ்வரக்ஷண வ்யாபாரங்களையடைய விட்டு அந்த நாயோபாதியாகத் தம்மை அனுஸந்தித்துக் கொண்டு அப்போதே வந்து திருக்கண்ணமங்கையில் பத்தராவி திருவாசலில் கைப்புடையிலே (வாயிற்காவலர் தங்குமிடம்) புகுந்து கண் வளர்ந்தாரென்று ப்ரஸித்தமிறே.

திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச் செய்த நாச்சியார் திருமொழித் தனியன்.

**அல்லிநாட் டாமரை மே ல்ஆரணங்கின் இன்துணைவி**
**மல்லிநா டாண்ட மடமயில்-மெல்லியளாள்**
**ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை**
**வேயர் பயந்த விளக்கு.**

இந்த ஐதிஹ்ய நிர்வாகங்களாலும், ஆண்டாள் பாசுரங் கள்மீது கொண்ட ஆராத காதலாலும் திருக்கண்ணமங்கை

யாண்டான் திருக்கோயிலினுள் செண்பகத் திருவீதியில் திருநந்தவன கைங்கர்யத்தில் ஈடுபட்டு பரமபத ப்ராப்தியை அடைந்தார். ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்டு அவருடைய திருமேனி செண்பகத் திருவீதியின் வடபுறம் திருப்பள்ளிப் படுத்தப்பட்டது. அந்த இடத்தில் ஒரு நினைவுச் சின்னமும் எழுப்பப்பட்டுள்ளது. செண்பகப் பிராகாரம் தெற்குப் பகுதி 800 அடி நீளமும், சுமார் 120 அடி அகலமும் கொண்டது. அவ்வாறே வடக்குப் பகுதியும் அமைந்துள்ளது. மேற்குப் பகுதி 200 அடி நீளமும் 120 அடி அகலமும் கொண்டது. இந்தப் பிராகாரத்தில் வலம் வருவதற்கென ஸம்ப்ரோக்ஷணத்தின் போது சிமெண்ட் நடைபாதை அமைக்கப்பட்டது. இந்தப் பாதையின் இரு மருங்கிலும் அமைந்துள்ள வளமான பகுதியில் தற்போது பெருமளவில் ஊமத்தை, கள்ளி, பார்த்தீனியம், இலந்தை போன்ற காட்டுச் செடிகள் மண்டியுள்ளன. இவற்றை நீக்கி அந்த இடத்தில் திருத்துழாய் மற்றும் பத்தராவிப் பெருமானுக்குப் பாங்கான மலர்ச்செடிகளை நட்டுப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற அடியேனுடைய எண்ணத்தை தில்லை திருச் சித்ரகூடம் ஸ்ரீ.உ.வே. அ.வெ. ரங்காசார்யர் ஸ்வாமியிடம் தெரிவித்தேன்.

திருக்கண்ணமங்கையாண்டானுடைய திருநக்ஷத்ரம் ஆனி திருவோணமாகும். இதையொட்டி பெருமாள் ஆண்டான் அலங்காரத் திருமஞ்சனமும், திருவரசில் திருமங்கையாண் டானுக்குத் திருமஞ்சனமும் 19.5.2011 அன்று நடைபெற்றது. அன்றையதினம் திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி ஸ்வாமி முன்னிலையில் உரைக்கோவை ஒன்றும் நடைபெற்றது. அடியேனும் அதில் கலந்து கொள்வதாய் இருந்தது. சில தவிர்க்க முடியாத காரணங்களால் திருக்கண்ண மங்கைக்கு அன்றையதினம் செல்ல இயலவில்லை. ஸ்ரீ.உவே. அ.வெ. ரங்காசார்யர் ஸ்வாமியை 18.6.2011 அன்று தொடர்பு கொண்டபோது அவர், கோயம் புத்தூரிலிருந்து சுமார் 50 பாகவதோத்தமர்கள் திருக்கண்ண மங்கைக்கு வருகை தந்து ப்ராகாரத்தைத் தூய்மைப்படுத்தும் கைங்கர்யத்தைச் செய்து வருகின்றனர் என்றும், மற்றைய நந்தவன கைங்கர்யங்களையும் மேற்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள்

செய்யப்பட்டு வருகின்றன என்றும் தொலைபேசியில் தெரிவித்தார்.

6) திருச்சேறை திவ்யதேசத்திற்கு 8 ஆண்டுகளுக்கு முன் சென்றபோது ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸந்நிதியில் பாதுகாப்புக் கருதி மற்றைய கிராமப்புறங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தேவதாந்தரங்களுடன் பெருமாள் உபய நாச்சிமார்கள், ஆழ்வார் ஆசார்யர்கள் விக்ரஹங்களும் சேர்த்து வைக்கப்பெற்றிருந்தன. இதுகுறித்து அப்போது ஒரு தலையங்கம் பாஞ்சஜன்யம் இதழ் 40 (செப்டம்பர் 2002) எழுதப்பட்டது. சென்னை வாழ் அன்பர் ஒருவர் திருச் சேறையைச் சார்ந்தவர், இந்தத் தலையங்கத்தைப் கண்ணுற்ற பிறகு உடனடியாக மற்றொரு இடத்தைத் தகுந்த பாதுகாப்புடன் ஏற்படுத்தி அதில் தேவதாந்தரங்களை வைத்திடும் முயற்சியில் வெற்றி பெற்றார். தற்போது நூதனமாக சில ஆழ்வார் விக்ரஹங் களுடன் மணவாள மாமுனிகள் ஸந்நிதி பொலிவுற்று விளங்கு கிறது. தினந்தோறும் நித்யாநுஸந்தான கோஷ்டி அந்த இடத்தில் நடைபெறுகிறது. சாரநாதப் பெருமாளுக்கு ஓர் வாட்டம் வாராமல் கைங்கர்யங்களை மேற்கொண்டு வரும் அர்ச்சகர்களும் உள்ளூர் வாசிகள் சிலரும் திருக்கோயிலுக்கு அரணாக அமைந்துள்ளனர்.

✸✸✸

## திருக்குறுங்குடி பக்கம்நின்றார் இடிப்பு தொடர்பான வழக்கு.

திருக்குறுங்குடி அழகியநம்பிராயர் திருக்கோயிலில் ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் கோயில் கொண்டிருந்த மஹேந்திர கிரிநாதர் என்றழைக்கப்பட்டு வந்த ''பக்கம்நின்றார்'' ஸந்நிதி 2004ஆம் ஆண்டு, ஜூன் மாதம் இரவோடு இரவாக அந்த இடத்தி லிருந்து அகற்றப்பட்டதை எதிர்த்து திரு.கோ.சொக்கலிங்கம், ச.சுந்தரசுப்ரமணியன் ஆகிய இருவர் நாங்குனேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (வழக்கு எண். O.S.No.288/04) வழக்குத் தொடுத்திருந்தனர்.

இந்த வழக்கு சென்ற 6 ஆண்டுகளாகப் பல்வேறு நீதி மன்றங்களில் விசாரிக்கப்பட்டு 29-11-2010 அன்று சென்னை

உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் 2ஆவது மேல்முறையீட்டு மனுவின்மீது மாண்புமிகு நீதிபதி செல்வி. R.மாலா அவர்களால் இறுதித்தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பில் பக்கம் நின்றார் ஸந்நிதி இடிக்கப்படுவதற்கு முன்பு இருந்த நிலையில் மூன்று மாதத்திற்குள் பேரரருளாள ராமானுஜ ஜீயர் கட்டித்தரவேண்டும் என்றும், இந்த ஸந்நிதி இடிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது குற்றவியல் சட்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சென்னை உயர்நீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் திருக்குறுங்குடி ஜீயர் மேல்முறையீடு செய்துள்ளார். இவருக்கு டி.வி.எஸ். நிறுவனத்தின் பணபலமும் ஆள்பலமும் துணை சேர்ந்துள்ளது. இந்த வழக்கைத் தொடுத்த வரும், திருக்குறுங்குடியில் வாழ்ந்த வந்த சைவப்பெருமகனாரான திரு. சொக்கலிங்கம் இறைவனடி சேர்ந்துவிட்டார். சைவப் பெரு மக்கள் ஒன்றுகூடி சிவன் கோயில் இடிப்பிற்கு எதிரான வழக்கை உச்சநீதிமன்றத்தில் நடத்துவதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். உச்சநீதிமன்றத்தில் திருக்குறுங்குடி ஜீயர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் இதுகாறும் மற்றைய நீதிமன்றங்களில் முன்வைக்கப்படாத கோரிக்கைகள் இடம் பெற்றுள்ளன. உச்ச நீதிமன்றத்தில் திருக்குறுங்குடி ஜீயர் தொடுத்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ளன.

ஆயினும் பெயருக்கேற்றாற்போல் உச்சநீதிமன்றத்தில் வழக்காட வேண்டுமென்றால் குறைந்தது 3 லட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. இறைவனடி சேர்ந்த சொக்கலிங்கம் குடும்பத்தினர் அவருடைய ஆத்மா சாந்தியடைவதற்கு அவர் தொடுத்த இந்த வழக்கில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த அவருடைய உற்றார் உறவினர்கள் ரூபாய் 1 லட்சம் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளனர். சைவப் பெருமக்கள் ஒன்றுகூடி மேலும் 1 லட்சம் ரூபாய் நிதி திரட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ஸ்ரீவைஷ்ணவர்கள் பங்காக ரூபாய் 1 லட்சம் நிதி திரட்ட வேண்டும். திருக்குறுங்குடியில் ஆழ்வார் செய்த மங்களா சாஸனத்திற்கு மாறாக நம் ஜீயர் ஸ்வாமிகள்

நடந்து கொண்டதற்கும், தற்போது நடந்து கொள்வதற்கும் சமூகத்தின் எதிர்ப்பைத் தெரிவித்திட நம்முடைய ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த 'பிரமுகர்கள்' முன் வருவதில்லை. ''நரி இடப்பக்கம் போனால் என்ன, வலப்பக்கம் போனால் என்ன, நம்மைத் தீண்டாமல் போயிற்றே, சந்தோஷப்பட வேண்டும் என்று மன நிறைவு கொள்பவர்களே நமது சமூகத்தில் அதிக அளவில் காணப்படுகின்றனர். மற்றையோர் எல்லாம் ''இது எம்பெருமான் ஸங்கல்பம், இதில் நாம் தலையிடுவானேன்?'' என்ற எண்ணம் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். 1 சதவிகிதம் ஸ்ரீவைஷ்ணவர்களைத் தவிர உதட்டளவில்கூட ஆறுதல் தெரிவிப்பவர்கள் அற்றுப் போய்விட்டனர். இந்நிலையில் 1 லட்சம் ரூபாய் பண உதவியை எவ்வாறு பெறுவது?

மேலை நாட்டில் வாழ்வோர் பல அறக்கட்டளைகளுக்கு நிதி உதவி அளித்து வருகின்றனர். ஒரே ஊரில் ஆறு வேதபாடசாலைகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு பாடசாலையிலும் 10 வித்யார்த்திகளே படிக்கிறார்கள். இந்தப் பாடசாலையை நிர்வஹிப்பதற்கான பண உதவி பல்வேறு மேலைநாட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸ்தாபனங்களினால் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பாடசாலைக்கும், தனித்தனியே உபாத்யாயர், தங்குமிடத்திற்கான செலவு, உணவுக்கூட செலவுகள் போன்றவற்றை ஒன்று திரட்டி ஒருகுடைக்கீழ் கொண்டு வந்தால் லட்சக்கணக்கான ரூபாய்கள் மீதமாகும். அதைக் கொண்டு சமுதாயத்தை எதிர் நோக்கியிருக்கும் பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம்.

ஆனால் இவையெல்லாம் "Cry in wilderness" என்ற கணக்கில்தான் கொள்ள வேண்டும். ஆனால் திருக்குறுங்குடி வழக்கை நடத்துவதற்கு நம் சமூகத்தில் உள்ளோர் குறிப்பாக மேலை நாட்டில் உள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் பண உதவி செய்திட முன்வரவேண்டும். அவ்வாறு விருப்ப முள்ளோர் ''திவ்யதேச பாரம்பரியப் பாதுகாப்புப் பேரவை, 214 கீழை உத்தர வீதி, திருவரங்கம்'' என்ற முகவரிக்கு தங்களால் இயன்ற உதவியை அனுப்பி வைத்திட வேண்டுகிறேன்.

***

# ஹரிதாஸரின் இருசமய விளக்கம்

*இதழ் 145இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

## 7ஆவது தேகநிலை வைதிகத் தத்துவப் பரிச்சேதம்

**25. மருவிய தசவா யுக்களின் கூட்டம்**
**வளர்பிரா ணமயமாம் அந்தக்**
**கரணமாம் கூட்டம் மனோமய மிகுசங்**
**கற்பமே விக்கியா னமயம்**
**உரைசெயும் இந்த நான்கையும் கடந்திட்(டு)**
**ஓங்குஞா னச்சொரூ பத்தின்**
**பருணிதம் தானே விரவுநூல் வல்லோர்**
**பகர்ந்தா னந்தமா னமயம்.**

(இ.பொ.) உடலில் ஒன்றி நிற்கும் பத்து வாயுக்களின் கூட்டத்தில் வளர்வது பிராணமயமாகும். அந்தக்கரணம் என்னும் கூட்டம் மனோமயமாகும். இப்படிச் செய்வோம் என்னும் சங்கற்பம் விஜ்ஞானமயம். இங்ஙனம் சொல்லுகின்ற இந்நான்கையும் கடந்து சிறந்து விளங்கும் ஞானசொரூபத்தினால் விளைவது ஆனந்தமாகும் என வேதநூல் வல்லோர் கூறுவர்;

**26. துய்க்குதல் பான மோகமே மூப்புத்**
**துயர்மர ணஞ்சடு ரமியாம்**
**மிக்கசாக் கிரமே சொப்பனம் சுழுத்தி**
**விரவிய மூவகை அவத்தை**
**தொக்கலும் புதிரம் தசைநிண மேதை**
**சுக்கிலம் சத்ததா துக்கள்**
**தக்கவாம் இராகம் துவேடம் எண்வகை**
**யாய்த்தழைக் குமங்க வைதமைச் சாற்றில்.**

(இ.பொ.) பான முதலியவற்றைத் துய்த்தல், மோக மடைதல், மூப்புத்துயரம் மரணம் என்பன ஆறு அவஸ்தைகள்.

சாக்கிர தசை, சொப்பன தசை, சுஷுப்தி என்னும் மூர்ச்சை நிலை என்ற மூன்றும் மனிதர்க்குத் தோன்றும் அவஸ்தைகளாம். தோல், எலும்பு, இரத்தம், தசை, கொழுப்பு, நரம்பு, சுக்கிலம் என்பன ஏழு தாதுக்களாகும். சடூர்மி-ஆறு விகாரங்கள். சத்த தாதுக்கள்- ஸப்த தாதுக்கள். வடமொழித் தொடர்.

**27. விரித்திடும் இராகம் மாயையாம் துவேடம்**
**வெகுளிசிக் கென்றிட லோபம்**
**கருத்துறு போகம் மெய்யறி யாமை**
**களிப்பது வேமத மாகும்**
**உரைத்தமாச் சரியம் மிகுபொறா மையதா**
**ஒப்பெனக்(கு) ஆரென எண்ணி**
**இருப்பதாங் காரம் கருவமே இடமாம்**
**இங்ஙனம் இயற்கையாய் நிகழும்.**

(இ.பொ.) இங்ஙனம் மனித சரீரத்தில் நிகழ்வதை விரித்துச் சொல்லக் கூடியதாகிய வேட்கை, மாயை என்னும் அறிவின்மை, துவேஷம் என்னும் பகையுணர்ச்சி, சினம், சிக்கனம் என்னும் லோபம். மெய்யை அறியாதிருத்தல் என்னும் மோகம். அர்த்தமற்ற மகிழ்ச்சி மதம் எனப்படுவது, பொறாமைப்படுவது மாச்சரியமாம். எனக்கு ஒப்பு ஒருவருமில்லை என்றிருப்பது அகங்காரம், கருவமும் இதுவேயாம்.

**28. பத்திசே ரத்தி யான்மிகம் ஆதி**
**பவுதிகம் ஆதிதெய் விகமென்(று)**
**ஒத்திடும் தாபத் திரையதே கந்தான்**
**உண்மையால் தூலசூக் குமமாய்**
**வித்தரித் துரைக்கும் இங்கிதில் தூலம்**
**மிகுவதைம் பூதமும் புலனும்**
**சத்ததா துவும்நீ நாடியும் கோடி**
**சதசகத் திரவுரோ மமுமாம்.**

(இ.பொ.) மக்களுக்குத் தொடர்ந்துவரும் ஆத்யாத்மிகம்[1], ஆதி பௌதிகம்[2], ஆதிதெய்வீகம்[3] என்பன தாபத்ரயங்களாம். ஸ்தூல சூக்ஷமம் என்பவை சரீர வேறுபாடுகளாம். இவற்றை விரித்து ரைத்தால் ஐந்து பூதம், ஐம்பொறிகள், ஐந்து புலன்கள், ஐவகை வியாபக வாயு, எழுவகைத் தாதுக்கள், நூறாயிரங்கோடி ரோமம்

என்ற இவற்றாலாயது ஸ்தூல சரீரம்[4] என்பதாம்; 1. ஆதியாத்மிகம் என்பது தலைவலி ஜுரம் போன்ற நோய்களால் அவதிப்படும் தன்னால் வரும் துன்பமாம். 2. ஆதிபௌதிகம் என்பது, பாம்பு, தேள், சிங்கம், புலி, கரடி, பிசாசம், திருடர் போன்ற பிறவற்றால் வரும் துன்பங்களாம். 3. ஆதிதெய்வீகம் என்பது, இடி, மின்னல், புயல், மழை, வெள்ளம் போன்றவற்றால் நிகழும் துன்பங்களாம். ஸ்தூல சரீரம்- பருவுடல்.

**29. மிக்கசத்(து) ஆதி விடயபஞ் சகமும்**
**வியாபக வாயுபஞ் சகமும்**
**தக்கஅந் தக்கர ணச்சதுட் டயமும்**
**சாற்றிய சூக்கும சரீரம்**
**இக்கிர மத்தால் மருவிய பிண்டத்(து)**
**இலங்கிய மண்டலம் மூன்றும்**
**தொக்கஆ தாரம் ஆறுமக் கமலத்**
**துலங்குசீ தளதளம் பலவும்**

(இ.பொ.) மிக்க சத்துவ முதலான ஐந்து விஷயங்களும், சரீரத்தில் வியாபித்துள்ள ஐந்து வாயுக்களோடு, அந்தக் கரணம் நான்கினாலயது சூக்ஷ்ம சரீரம். அக்கினி, சந்திரன், சூரியன் என்ற மூன்று மண்டலங்களும், அவற்றில் தொக்கியிருக்கும் ஆறு ஆதார ங்களும் அவற்றுக்கேற்ற இடமுதலானவைகளும். சூக்ம சரீரம்- (24-தத்துவங்களின் சாரமான) நுண் உடல். அந்தக் கரணம்-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு வழிகளில் செயல்படும் உட்கருவிகளாம்.

**30. அவ்விடத்(து) அதிதே வதைகளும் அதனுக்(கு)**
**அமைந்த அக்கரங் களும்அடைவே**
**மெய்வழி அந்தண் சமாதிரி கையுநீண்**
**மிக்கவெங் குணத்திரி கையுமே**
**இவ்வகை யுரைக்கில் பரந்திடும் அதெலாம்**
**இருக்கவும் மெய்யுறை சீவன்**
**கைவரச் செய்த வினைகளுக் குரித்தாய்க்**
**காட்டிய கதிதனை அடையும்.**

(இ.பொ.) மேற்குறிப்பிட்ட ஆறு ஆதாரங்களுக்கும் அதிஷ் டானமான (உரியவைகளான) தெய்வங்களும் அவற்றைச்

சொல்லும் அக்ஷரங்களும்-எழுத்துக்களும், சமாதி நிலைகளும், குணங்களின் திரிபுமாகிய இவற்றை விரித்துரைக்கில் மிகப் பெருகும். இவை ஒருபுறமிருக்க சீவன்-ஆத்மா, தான் செய்த வினை களுக்குரிய தான கதியை அடையும். கதிகள்-என்பன, ஜீவன் தான் செய்த வினைக்கேற்ற கர்பகதி, யாம்ய கதி, தூமகதி, அர்ச்சிராதி கதி என்னும் கதிகளை அடைந்து இன்ப துன்பத்தை அநுபவிக்கும்.

## 8ஆவது அர்ச்சிராதிப் பரிச்சேதம்

1. **முகுந்தன தருளால் விளங்கிய சீவன்**
**முத்தனாம் ஆத்துமா வுடலை**
**இகந்திடுங் காலங்கு றுகில்வாக்(கு) ஆதி**
**இந்திரி யங்களே எல்லாம்**
**பகர்ந்திடும் மனத்துள் ஒடுங்கிஅம் மனமும்**
**பயின்றிடும் பிராணனில் ஒடுங்கித்**
**தொகும்பிரா ணனும்நீ(டு) ஒளியிலே பொருந்திச்**
**சூக்குமச ரீரத்தை மேவி.**

(இ.பொ.) ஒப்புயர்வற்ற முகுந்தனாம் ஸ்ரீமந் நாராயணன் திருவருளால் முக்தனாகிய ஜீவாத்மா, இவ்வுடலை விடும் காலம் குறுகிய போது, கண், மூக்கு, வாய் முதலான பத்துப் பொறிகளும் மனத்தில் ஒடுங்கிவிடும் அம்மனமும் பிராணனில் ஒடுங்கி, பிராணனும் ஒளிமிக்க ஆன்மாவில் சேர்ந்து சூக்ஷ்ம-நுண்ணிய சரீரத்தை யடையும்; இங்கு வாக்கை மாத்திரம் சொன்னது, ஏனைய ஒன்பது இந்திரியங்களும் உபலக்கணம். அதுபோன்றே, பிராணனை மாத்திரம் குறிப்பிட்டது மற்றைய உதாந, சமாந, வியாந, அபாந ஆகியவற்றையுங் கொள்க. இதனை பஞ்சப்ராணன்கள் என்பர்.

2. **சூரியகிரணத் தால்வருந் தியபேர்**
**சோலைபுக் காறிய படிபோல்**
**ஏரமர் இதய கமல பீடத்தில்**
**இருந்தநா ரணன்தனை அடைந்து**
**பாரினில் என்றும் துவங்கொழுந் திடத்தா**
**பத்திரை யங்களைத் தணிந்து**
**சீரிய மூல மந்திர தியானம்**
**சீவன மாகியே தேறி.**

(தொடரும்)

# எறும்பியப்பாவின் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

***இதழ் 145இன் தொடர்ச்சி. விளக்கவுரை: புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜ தாஸர்.***

***சென்ற இதழ் மூலத்தின் தொடர்ச்சி.***

ஆஸுரக்ருத்யங்களாகையாலே, பகவல் லீலார்த்தமான அவித்யாகார்யங்களாயிருக்கும். இனி, நிவ்ருத்தி ரூப தர்மத் யாகத்துக்கு அபேக்ஷிதமென்றதற்குப் பரிஹாரம் முன்பு சொன்னோமே யாகிலும் மேலும் சொல்லுகிறேன். எங்கேனும் ஓரிடத்திலேயானாலும் ஒருவ ரானாலும் தர்மத்யாகத்துக்கு நிஷித்த ப்ரவ்ருத்திகள் அபேக்ஷித மென்று சொல்லிற்றில்லையே. ப்ரபத்தியநுஷ்டாந விசதீகரண ஸ்தலங்களிலே;

---

**விளக்கவுரை: எவ்வாறெனின், சன்மத்துக்குக் குற்றமும் அதனுக்குப் பரிகாரமும் ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார், ''பழுதிலா ஒழுகலாற்று'' என்னும் பாசுரத்திலே சாதிய பிமாநம் வருவதற்கு ஹேது, அந்தணர்மரபில் நெடுகி வருகின்ற வமிசாவழியில் பிறந்ததனால் நாம் குற்றமற்ற வரானோம்; மறைநூல்களை அதிகரித்தோம்; அவற்றுக்குப் பொருள் சொல்லவல்லோம் என்கிற உயர்குலபிறப்பால் வந்த கல்வியாலும் தொழிலாலும் செருக்கடைந்தமைக்குப் பரிகாரம், ''இழிகுலத்தவர்களேலும் எம்மடியார்களாகில் தொழுமினீர் கொடுமின் கொள்மின்'' என்று சாதியபிமாநம் இல்லாதவர்களான தம்மைத் தாழ்த்திக் கொள்கின்ற பிறவியில் பிறந்த சிறந்த ஸ்ரீவைஷ்ணவரைப் பின்பற்றுதலே உங்களுக்குச் சிறப்பென்று ஆழ்வார் தெளிய அருளிச் செய்திருந்தும், அதனை மேற்கொண்டு சாதியால்வந்த செருக்கைப் போக்கிக் கொள்ளமல், சிறுபகுதியான ஒரு உலோகத் துண்டிற்காகப் பெரிய மணிமாடங்களை எரிப் பாரைப்போலே, அகங்காரத்தைப் போக்கிக் கொள்கிறோம் என்று கெட்டவொழுக்கத்தை மேற்கொண்டு ஆந்ம**

**இயல்புக்குத் தகாததான விஷயங்களில் ஈடுபாடு கொள்ளுதல். பகவான் அருளாலே பிறக்கக்கூடிய உயர்சாதியால் வரும் அகங்காரம் இல்லாதன்மையை அடையும்பொருட்டு மாற்றான் மனைவியை ஏற்றல், உண்ணத் தகாதையுண்டல். அருந்தாவற்றை அருந்தல் ஆகிய கெட்டவொழுக்கத்தாலே போக்கிவிடலாம் என்று மயங்கி, கைங்கரியத்திற்கு எதிர்தட்டான தன்முயற்சிகள் ஒன்றையும் பொறுக்காத பகவானுக்கு மிகவும் வசப்பட்ட (பரதந்த்ர) ஸ்வரூபத்துக்கும் சேராதவைகளுமாய், உபாய உபேய விரோதிகளுமான பிறரைத் துன்புறுத்தல், பிறன்மனைவியைக் கைப்பற்றுதல் அருந்தாவற்றை யருந்துதல், உண்ணத்தகாதப் பொருள் களை யுண்ணுதல் (ஆதிசப்தத்தாலே பிணச்சோறு மணச் சோறு விலைச்சோறு ஆகியவற்றையுங்கொள்க.) ஆகியவை அசுரர்கள் செயலாகையாலே இவையெல்லாம் பகவானின் விளையாட்டிற்கேற்ற அறிவிலாற் செயலாக விருக்கும். இனி, செயல் தவிர்தலுக்கு வடிவமாயிருக்கும் தருமத்தியாகத்திற்கு வேண்டும் என்பதற்குப் பரிகாரம் முன்னே சொன்னோமே யாகிலும் மேலும் சொல்கிறோம். எங்கேனும் ஓரிடத்திலேயும் நம்பூருவர்கள் ஒருவராகிலும் தருமத்தியாகத்திற்குக் கெட்ட வொழுக்கங்கள் பிரபந்நனுக்குத் தேவையென்று கூற வில்லையல்லவா. பிரபத்தி அநுட்டாநத்தைவிரிவாகக் கூறுமிடங்களில்.**

மூலம்:

(233) ''உபாயாபாய நிர்முக்தா மத்ய மாம்ஸ்திதி மாஸ்திதா'' (பாரதம்) என்று, உபாயாபாய நிர்முக்தையாய் மத்யஸ்தையாய் நின்றதென்றும், (234) ''உபாயாபாய ஸம்யோகே நிஷ்டயாஹீயதே நயா'' (லக்ஷ்மிதந்.17.92) என்று தொடங்கி, உபாய அபாய ஸம்யோகத்தில் ஸித்தோபாய நிஷ்டை நழுவுமென்றும், அதுக்கு ப்ராயஶ்சித்தம் பண்ணவேணுமென்றும் சொல்லுகிறதொழிய அபாயமான அக்ருத்ய கரணம் ப$_4$க$_3$வதிஷ்டமென்றும் இது, ப்ரபத்திக்கபேக்ஷிதமென்றும், ப்ரபந்நனுக்குவஶ்யகரணீய மென்றும் சொன்னதில்லாமையாலே ஸாமாந்ய விசேஷ ஶாஸ்த்ர விபாகமற, ஸகல ஶாஸ்த்ர விருத்தமுமாய் சிஷ்ட கர்ஹிதமுமாய் பகவதநிஷ்டமுமாய், (235) ''ஆஶாபாஶ ஶதைர்$_3$பத்த காமக்ரோத$_4$ பராயணா: ஈஹந்தே காமபோகார்த்தம் அந்யாயேநார்த்த ஸஞ்சயாந்'' (கீதா.16.12) என்றும்,

(236) ''அநேகசித்தவிப்ராந்தா: மோஹஜால ஸமாவ்ருதா:- ப்ரஸக்தா: காமபோகஷு பதந்திநரகேஸுசௌ'' (கீதா.16-16) என்றும், சொல்லு கிறபடியே காமக்ரோத பராயணராய், இது பரமார்த்தமென்று மாயாமோஹி தராய் திரிந்தார்களாகில் பகவந் நிரஹபாத்ரராய் போவார்களாகையாலே சப்த ஶக்தியைக் காட்டிலும் தத்வ்யதிரிக்தமான ப்ரவ்ருத்திரூப தர்மங்களுக்கே த்யாஜ்யத்வம் அங்கீகரிக்க வேணுமென்ன, காட்டிலும் பரிக்ஹரிக்கிறதென்? என்ன, பாதகமுண்டானால், பரிக்ஹரிக்க வேணுமிறே. திருமந்த்ரத்தில் நாரபதத்தாலே, (237) ''ப்ராஹ்ம்ய மண்டம் ததந்தஸ்தா: லோகாஶ்ச ஸசராசரா: -ஏவம் அண்டாந் யநந்தாதி தத்ஸர்வம் நாரமுச்யதே'' (   ) என்று,

**விளக்கம்**

**(233).''உபாயமான தருமங்களிலிருந்தும் அபாயத்தை விளைவிக்கும் அதருமங்களிலிருந்தும் விடுபட்டவனாய் நடுவான நிலையில் நன்றாக நின்றவன்'' எனக்கூறுகிறபடி, உபாய அபாயங்களில் நின்று விடுபடுபட்டு நடுவில் நிற்ப தென்றும், (234).''வேறு உபாயமாகிய அபாய சம்பந்தம் ஏற்பட்டால் பிரபத்தி நிட்டை நழுவும்'' என்று தொடங்கி, (வேறு) உபாயமாகிய அபாயத்தின் தொடர்பு ஏற்படின் சித்தோபாய (இறைவனே உபாயம் என்னும்) நிட்டை நழுவி விடும் என்றும் அதற்குக் கழுவாய் செய்ய வேண்டும் என்று கூறுகிறதேயன்றி அபாயமான செய்யத்தகாத கெட்டசெயல் பகவானுக்கு விருப்பமென்றும், இது பிரபத்திக்குத் தேவை யென்றும், பிரபந்ந அதிகாரிக்கு இன்றியமையாததென்றும் மேற்கண்ட சான்றுகளிற் கூறாமையாலே பொதுவான சாத்திரம், சிறப்பான சாத்திரம் என்னும் வேறுபாடன்றிக்கே எல்லாச் சாத்திரங்களுக்கும் விரோதமாய், சான்றோர்களாலும் பகவானாலும் வெறுக்கத் தக்கதாய், (235) ''ஆசையென்னும் நூற்றுக்கணக்கான கயிறுகளால் கட்டப்பட்டவர்களாய் சிற்றின்பத்திலும் கோபத்திலும் ஊன்றி நிற்பர்களாய் அந்த இன்பத்தை அனுபவிப்பதற்காக தவறான வழியில் பொருட் குவியல்களை விரும்பித் தேடுகின்றனர்'' என்னும் (236) ''பல நினைவுகளாலே அலைக்கழிக்கப்படுகின்றவர்களாய், அறிவின்மையாகிற பல மயக்கங்களாற் சூழற்பட்டவர் களாய், புலன் இன்பங்களில் மிகவும் ஈடுபட்டவர்களாய், (இடையில் மரணமடைந்து) அசுத்தமான நரகத்தில்**

**விழுகின்றனர்'' என இறைவனே கூறுகிறபடி, சிற்றின்பத்திலும் (அது கிடைக்காவிட்டால்) கோபத்திலும் ஊன்றினவர்களாகவும், அவையே மேலான பொருள்கள் என்று அறிவின்மையால் கலங்கியவர்களாகவும் வாழ்ந்தார்களாகில், பகவான் தண்டனைக்கு ஆளாவாராகையாலே, இவ்விடத்தில் எல்லாதருமங்களையும் விடு என்றவற்றால் விபரீதப் பொருள் தொனிக்கிற சப்த சக்தியைக் காட்டிலும் அதற்கு வேறுபட்டதான மனிதனால் செயல்படும் வடிவாயிருக்கிற தருமங்களுக்கே தியாகத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ன, காட்டிலும் என்று அதனை தவிர்ப்பித்தல் எதற்காக? என்ன, ஆந்ம இயல்புக்கு விரோத முண்டானால் அதனை நீக்குதல் வேண்டுமல்லவா? (237) இயங்கும் பொருளான உயிர் பொருள்களும் இயக்கம் பெறா அறிவிலாப் பொருள்களும் ஆகியவற்றைக் கொண்ட உலகங்கள் அந்த பிரம்மாண்டத்திலுள்ன; இப்படிப்பட்ட அண்டங்களோ பலவாகவுள்ளன; அவையெல்லாம் நாரம் என்ற சொல்லாலே சொல்லப் படுகின்றன என்று;**

மூலம்:

பகவத்ஸ்வரூப வ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களையும் காட்டா நிற்கச் செய்தேயும், தத்புருஷ ஸமாஸத்தில் உபாயோபேய பாவங்களைச் சொல்லுமளவில் அசேதநங்களுக்கு அநபேக்ஷதங்களாகையாலே அவற்றைப் பரிஹரித்து சேதநருக்கே சொல்லுமாபோலேயும், பஹுவ்ரிஹி ஸமாஸத்திலே ஆத்மா ச்ரதோஷமும் அநவஸ்தையும் வருமென்று குணங்களை விட்டு தத்வ்யதிரிக்த நாரங்களுக்கே அந்தர்யாமித்வம் சொன்னாப்போலேயும், ஸ்வரூபோபாய வ்ருத்தத்வாதி பஹுதோஷமுண்டாகையாலே நிவ்ருத்தி ரூப தர்ம வ்யதிரிக்த ப்ரவ்ருத்தி ரூப தர்மத் த்யாகங்கொள்ள வேணும் என்ன, ஆனால் ஸாகல்யத்துக்கு ஸங்கோசம் வரும் என்னில் ஸாகல்ய ஸங்கோசம் வாராதபடி எல்லாம் ஸவாஸநத்யாகம் பண்ணப்புக்கால் தர்மசப்தத்தாலே அவதார ரஹஸ்யஜ்ஞானம், புருஷோத்தம வித்யை, தேசவாஸம், திருநாம ஸங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை முதலானவையெல்லாம் சொல்லுகையாலே, இவையெல்லாம் ஸவாஸத்யாகம் பண்ணவேண்டிய வருமிறே. (தொடரும்)

# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 145இன் தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

**வாதஆ வாது பே$_4$ஷஜம் சம்பு**
**மயோபு$_3$ நோஹ்ருதே$_3$ ப்ரண ஆயுகும்ஷி தாரிஷத்।**
**உதவாத பிதாஸி ந உத ப்$_4$ராதோத ந: ஸக$_2$ா**
**ஸ நோ ஜீவாதவே க்ருதி$_4$ ॥**
**யத$_3$தே$_3$ா வாததே க்$_3$ருஹே$_3$ம் ருதஸ்ய நிதி$_4$ர்ஹித: ।**
**ததோ நோ தே$_3$ஹி ஜீவஸே ॥**

ரிக். 10-186-1,2,3.

இதன் பொருள்: ''வாதன் எங்களது இதயங்களை செல்வத்தாலும் சந்தோஷத்தாலும் நிரப்பி, அவனது சுகம்தரும் மருந்தை எங்கள்மீது வீசுவானாக! எங்களின் வாழ்நாளை அவன் நீட்டிக் கட்டும். வாதநே நீ எங்கள் தந்தை; நீ எங்களின் சகோதரனும் நண்பனும் ஆவாய். நாங்கள் வாழ வலிமையளிப்பாயாக. வாதநே உன் இருப்பிடத்திலிருக்கும் அம்ருதத்தால் எங்களை வாழ வைக்கவும்''.

இங்கு வாயுவை தந்தை, சகோதரன், நண்பன் என்ற உறவு முறையில் அழைப்பதால், தேவனை உறவு முறையிலும் அணுகலாம் என்ற முறை வேத ஸம்மதம் என்பது தெளிவாகின்றது.

பரமாத்மாவுக்குரிய இலக்கணங்கள் எதுவும் வாயுவின் விஷயத்தில் சொல்லப்படாததால் வாயு பரமாத்மாவல்லன் என்பதும், அவனும் படைக்கப்பட்டவனே என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

வாயு, மருத் என்ற இரு சொற்களும் செல்வது என்ற பொருளில் ஒன்றுபடுவதால் இருவரும் ஒருவரே என்று கொள்வதில் தவறில்லை.

வாயுவுக்குரிய ஸூக்தத்திலேயே மருத்துக்களின் இலக்கணத்தைக் காட்டும் ஒரு மந்திரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

**வாதஸ்ய நு மஹிமாநம் ரத$_2$ஸ்ய**
**ருஜந்நேதி ஸ்தநயந்நஸ்ய கே$_4$ாஷ:।**
**தி$_3$ விஸ்ப்ருக்$_3$யாத்ய ருணாநி க்ருண்வந்நுதோ**
**ஏதி ப்ருதி$_2$வ்யா ரேணுமஸ்யந்॥** . ரிக்-10.168-1.

இதன் பொருள்: ''வாயுதேவனுடைய ரதத்தின் பெருமையும் சக்தியும் எப்படிப்பட்டதெனில், இடிமுழக்கம் போன்ற சப்தத்தை யுடைய அது பயங்கரமான சக்தியோடு எங்கும் மோதிப் பரவு கின்றது. வானைத் தொடுமளவிற்கு உயரக் கிளம்பி திக்குகளை சிவப்பாக்கி பூமியின் புழுதிகளை எங்கும் பரப்புகின்றது.''

ஒரு பெரும் சூறைக்காற்றின் அல்லது புயல்காற்றின் லட்சணம் இந்த மந்திரத்தில் சொல்லப்படுகின்றது. இதே கருத்தை மருத்துக்களின் ஸூக்தங்களிலும் காணலாம்.

ஆகவே மருத்துக்களும் வாயுவும் வேறு அல்லர் என்பது இதனால் தெளிவாகின்றது. இவர்களை வேறுபடுத்திப் பார்க்கும் அம்ஸம் என்னவென்றால், மிதமாக, இதமாக, உயிர்களின் வாழ்வுக்கு அநுகூலமாக உள்ள காற்றை வாயு என்றும் பலமிக்க சூறைக் காற்றை, புயலை மருத் என்றும் சொல்லலாம். அதன்படி, மருத்துக் களின் இன்னொரு வடிவம்தான் வாயு என்பதும் வாயுவின் இன்னொரு வடிவம்தான் மருத்துக்கள் என்பதும் தெளிவாகின்றது.

இனி மருத்துக்களின் தந்தையான ருத்ரனைப் பற்றிப் பார்ப் போம். ருத்ரனைப் பற்றிய மந்திரங்கள் மற்ற சில தேவதைகளின் ஸூக்தங்களில் ஓரிரு இடங்களில் வந்திருந்தாலும் ருத்ரனுக் கென்று தனியாக ரிக் வேதத்தில் மூன்று ஸூக்தங்களே உள்ளன. ருத்ரனும் மத்யஸ்தான தேவதையாகவே சொல்லப்படுகிறான்.

ருத்ரன் என்ற சொல்லுக்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கிறது நிருக்தசாஸ்த்ரம்.

**ருத்$_3$ரோ ரௌதீதி ஸத:। ரோரூயமாணோ த்$_3$ரவதீதிவா।**
**ரோத$_3$யதேர்வா। யத்$_3$ருத$_3$த் தத்$_3$ருத்$_3$ரஸ்ய ருத்$_3$ரத்வம்**
**இதி காட$_2$கம்। யத$_3$ரோ தீ$_3$த் தத்$_3$ருத்$_3$ரஸ்ய ருத்$_3$ரத்வம்**
**இதி ஹாரித்$_3$ரவிகம்।.** யாஸ்க நிருக்தம். 10-5.

இதன் பொருள்: ''ருத்ர'' என்பதற்கு அழுகிறான் அல்லது ஓடுகிறான் அல்லது சத்தம் போடுகிறான் அல்லது பிறரை அழ வைக்கிறான் என்று பொருள். சப்தம் செய்வதால் இந்தப் பெயர் வந்த

தென்று காடகம் சொல்கிறது. அழுவதால் இப்பெயர் வந்ததென்று 'ஹாரித்ரவிகம்' என்ற நூல் கூறுகிறது.

அழுவது, அழவைப்பது, சப்தம் செய்து கொண்டு ஓடுவது- இந்தக் குணங்கள் உள்ளவனே ருத்ரன் என்று அழைக்கப்படுகிறான் என்பதை நாம் நிருக்தத்தின் மூலம் அறிகிறோம்.

ருத்ரன் மருத்துக்களின் தந்தை என்பதால், பெருங்காற்றின் தந்தையான இவனும் பெருங்காற்றின் தன்மை கொண்டவன் என்பது புலப்படுகின்றது. பெருங்காற்று பெரும் ஒலியை எழுப்பிக் கொண்டு ஓடுவதாலும், அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் அழுவ தாலும் (அதாவது ருத்ரன் பிறரை அழ வைப்பவன் என்றபடி) மருத்துக்களின் தந்தைக்கு ருத்ரன் என்ற பெயர் ஏற்பட்டது.

பெரும்பாலும் மக்கள் ருத்ரனிடம் கொண்ட பயத்தால் அவனைப் போற்றித் துதிப்பதாகவே ருத்ரனுக்குரிய மந்திரங்களில் காணமுடிகிறது. சில உதாரணங்கள் கீழே.

**மாநோ மஹாந்தமுதமாநோ அர்ப$_4$கம்மாந**
**உ க்ஷந்தமுத மாந உக்ஷிதம்!**
**மாநே வதீ$_4$: பிதரம் மோத மாதரம்**
**மாந: ப்ரியாஸ்தந்வோ ருத்$_3$ர ரீரிஷ:!!**

ரிக். 1-114-7.

இதன் பொருள்: ருத்ரனே, எங்கள் மத்தியில் உள்ள பெரிய வனை, சிறியவனை, வளரும் பாலனை, வளர்ந்த மனிதனை உபத்ரவம் செய்யாதே,; எங்கள் நடுவிலிருக்கும் தந்தையைக் கொல் லாதே; இங்கு தாயைக் கொல்லாதே; எங்களின் ப்ரிய சரீரங்களைக் கொல்லாதே;

**மாநஸ் தோகே தநயே மாந ஆயோ மாநோ**
**கே$_3$ாஷு மாநோ அஶ்வேஷு ரீரிஷ:**
**வீரான் மாநோ ருத்$_3$ர ப$_4$ாமிதோ**
**வதீ$_4$ர்ஹவிஷ்மந்த: ஸத$_3$மித்த்வா ஹவாமஹே**

ரிக்-1-114-8.

இதன் பொருள்: ''எங்களின் வாரிசுகளையும், பசுக்களையும், குதிரைகளையும், ஜீவராசிகளையும் துன்புறுத்தாதே; ருத்ரனே! உன் கோபத்தால் எங்களின் வீரர்களைக் கொல்லாதே; உனக்கு அவியளித்து உன்னை எப்போதும் அழைக்கிறோம்''.

**ஆரே தே கே$_3$க்$_4$நமுத பூருஷக்$_3$நம்**
**க்ஷயத்$_3$வீராய ஸும்நமஸ்மே மேதே அஸ்து**

ரிக்-1-114-10.

இதன் பொருள்: ஓ! வீரர்தலைவனே! மனிதரைக் கொல்வதும், பசுக்களைக் கொல்வதுமான உனது ஆயுதம் விலகியிருக்கட்டும்; உன்னால் எங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படட்டும்.

**பரிணோ ஹேநீ ருத்$_3$ரஸ்ய வ்ருஜ்யா:**
**பரித்வேஷஸ்ய து$_3$ர்மதிர் மஹீக$_3$ாத்।**
**அவ ஸ்தி$_2$ரா மக$_4$வத்$_3$ப்$_4$யஸ்த நுஷ்வ**
**மீட்$_4$ வஸ்தோகாய தநயாய ம்ருள।**

ரிக்-2-33-14.

இதன் பொருள்: ''ருத்ரனின் ஆயுதம் எங்களைக் கொல்லாமல் விலகிப் போகட்டும். அந்த பயங்கரனின் மகத்தான கோபம் எங்களை விலக்கட்டும். வர்ஷிப்பவனே! உனது வலிமையான வில்லை அவியளிக்கும் எங்களிடமிருந்து விலக்கவும். எங்களின் பிள்ளைகளுக்கும் பேரன்களுக்கும் அருள் புரியவும்''.

**ஏவா ப$_3$ப்$_4$ரோ வ்ருஷப$_4$ சேகிதாந**
**யத$_2$ா தே$_3$வ ந ஹ்ருணீஷே ந ஹம்ஸி।**

ரிக்-2-33-15.

இதன் பொருள்: ஓ! சிவந்த காளையே! தேவனே! எங்கள் மீது கோபிக்காமலும், எங்களைக் கொல்லாமலுமிருந்து உன் தன்மையைப் புலப்படுத்தவும்.

**யாதே தி$_3$த்$_3$யுத$_3$வஸ்ருஷ்டா தி$_3$வஸ்பரி**
**க்ஷ்மயா சரதி பரி ஸா வ்ருணக்து ந:।**
**ஸஹஸ்ரம் தே ஸ்வபிவாத பே$_4$ஷஜா**
**மா நஸ்தோகேஷுதநயேஷு ரீரிஷ: ॥**

ரிக். 7-46-3.

இதன் பொருள்: ஓ! ருத்ரனே! தேவலோகத்திலிருந்து கீழ் நோக்கி செலுத்தப்பட்டு பூலோகத்தில் சஞ்சரிக்கும் உனது ஆயுதம் என்னை விலக்கிவிடட்டும். நம்பத்தகுந்த சொல் உள்ளவனே! ஆயிரக் கணக்கான மருத்துகள் உள்ளவன் நீ. எங்களது பிள்ளைகளையும் பேரன்களையும் துன்புறுத்தாதே. (தொடரும்)

# மாறன் பாப்பாவினம்

**இதழ் 145இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.**

(இதனுள் நான்கு அந்தாதித் தொடையும் வந்தமையான் அந்தாதித் தொடை.)

**அடியும் சீரும் அசையும் எழுத்தும்**
**முடிவு முதலாகச் செய்யுள் மொழியின்**
**அந்தாதித் தொடைஎன்று அறிதல் வேண்டும்**

என்ற நூற்பாவின்படி இப்பாடலின் முதலடியின் முடிவு பொருள். அது இரண்டாமடியின் முதலாக வந்தது. இது அசைக்கு எடுத்துக்காட்டு. இரண்டாம் அடியின் முடிவு உளதே. அது மூன்றாம் அடியின் முதலாக வந்தது. இது சீர்க்கு எடுத்துக்காட்டு. மூன்றாம் அடியின் முடிவு ஓடை. இது நான்காம் அடியின் முதலாக வந்தது. இதுவும் சீர்க்கு எடுத்துக்காட்டு.

நான்காம் அடி முழுவதும் ஐந்தாம் அடியாக வந்துள்ளது. இது அடிக்கு எடுத்துக்காட்டு. ஐந்தாம் அடியின் முடிவு உரை. (செய). இது ஆறாம் அடியின் முதலாக வந்தது. இதுவும் அசைக்கு எடுத்துக்காட்டு. ஆறாம் அடியின் முடிவு (குறுகு)பு. இஃது ஏழாம் அடியின் முதலாக வந்தது. இஃது எழுத்துக்கு எடுத்துக்காட்டு. இவ்வாறே எழுத்து, அசை, சீர், அடிகள் அந்தாதியாக வந்தமை காண்க. விழுமிய-சிறந்த. முதற்பொருள்-முதன்மையான பொருள். பொருளுரை-மெய்ப்பொருள். மற்றுளதே-வேறுஉண்டோ. இமிர்தல்- இசைத்தல். ஓடை-நீர்நிலை. ஓடை-யானையின் நெற்றிப் பட்டம். மால்வரை- யானை. உரைவிசைத்து-மிக விசையாக. ஒல்லை- விரைந்து. குறுகுபு-அணுகி. புனிற்றா-அண்மையில் ஈன்ற பசு. செகத்த-தொலைத்த. அரங்கத்து அமுது-நம்பெருமாள். முதல்-பரம் பொருள். சுரர்-தேவர்கள்.

**சுரர் நாவு, திருவரங்கத் தமுதினை யன்றி வேறு ஒரு முதலினைத் துதிப்பதும் உள்ளதோ?**

என்று கூட்டிப் பொருள் காண்க.

திருமாலையன்றி வேறு தெய்வத்தைத் தேவர்கள் துதிக்க மாட்டார் என்பது திரண்ட கருத்து.

**திடனே திடனே திடனே திடனே**
**இறைதிரு அரங்கன் என்பது**
**மறைமுதல் அரிஎன வாழ்த்தியது உறினே. (59)**

(இஃது ஓரடி முழுதும் ஒரு சொல்லேயாய்த் தொடுத்தமை யால் இரட்டைத் தொடை.) ஒருசீர் அடிமுழுதும் வருவது இரட்டை என்பது இலக்கணம். அதன்படி முதலடியில் திடனே என்ற ஒரு சீரே அந்த அடி முழுவதும் மடக்கி வந்தமையால் இஃது இரட்டைத் தொடை.

இறை-பரம்பொருள். மறை-வேதம். உறின்-நினைப்பின். திடன்-உறுதி.

**மாறனை ஏத்தார் விழுதீ நரகில்**
**சுடுநெறி இனியார் செல்வர்**
**விடலைநீ கங்குல் ஆறிஏ குதியே. (60)**

(இது மோனை முதலாய முழுதும் ஒவ்வாது வந்த செந் தொடை. நேரிசையாசிரிப்பா.)

''செந்தொடை ஒவ்வாத் திறத்தன ஆகும்'' என்பது இலக்கணம். இதில் எதுகை மோனை முதலிய எத்தொடையும் இல்லாமையால், இது செந்தொடையானது. நரகில்-நரகைக் காட்டிலும். சுடுநெறி-சுடுகின்ற பாலைவழி. யார் செல்வர்-யாரும் செல்லார். விடலை-தலைவன். கங்குல் ஆறி ஏகுதி- பகலில் தங்கி இரவில் செல்வாயாக.

**இரவினில் இருள்கடி முழுமதி வதனம்**
**இதுசிறு பிறைநுதல். இவைமுரி புருவவில்**
**இனமணி நிரைஎன அணிநகை இலகியது.**
**இணைவிழி இருகயல் இணைபணி மொழிநறை**

இளமுலை மரைமுகை. இடுகுஇடை இலை, ஆல்
இலைவயிறு, இமிழ்வளை களம் எனும் இருநிலம்
இமையவர் இறைவனொடு இரதிமன் இருடிகள்
மனமருள் தகைமட வரல்எனும் அமுதினொடு
அளிமுரல் மதுமகிழ் அணிவர முனிவரை
அளவிய நலன்இவண் அமைதலும்
அவண்எனை எதிர்உரை யினன்அனு பமனே.(61)

இதனுள் இணை மோனை முதலிய விகற்பம் ஏழும் வந்தமை காண்க.)

**முதலடி இணைமோனை**
**இரண்டாமடி பொழிப்பு**
**மூன்றாமடி ஒரூஉ**
**நான்காமடி கூழை**
**ஐந்தாமடி மேற்கதுவாய்**
**ஆறாமடி கீழ்க்கதுவாய்**
**ஏழாமடி முற்று**

அடிதோறும் மோனை வந்தமை அடிமோனை. இருள்கடி-இருளைக் கடிகின்ற. வதனம்-முகம். நுதல்- நெற்றி மணிநிரை-முத்து வரிசை. நகை-பற்கள். இணை விழி- இருகண். கயலிணை-இருகயல் மீன்கள். பணிமொழி-பணியச் செய்யும் மொழி. நறை-தேன். மரைமுகை-தாமரை மொட்டு. இடுகு இடை-சுருங்கிய இடை. வளை-சங்கு. களம்-கழுத்து. இமையவர் இறைவன்-இந்திரன். இரதிமன்- மன்மதன். இருடி கள்-முனிவர்கள். மனம் மருள்தகை-மனமானது மருளும் தகைமையுடைய. மடவரல்-பெண். அளி-வண்டு. முரலுதல்-இசைத்தல். மகிழ்- மகிழமலர். அனுபமன்- உவமையில்லாதவன். வர முனிவர்- நம்மாழ்வார். அளவிய- கலந்த. (சேர்ந்த)

அறமுதல் அரிஎனும் அவனே பரனே
அணுவினுள் அவனே செகம்உணர் பரனே
மனனே கரிசொல வருபுயல் பரனே
அமுதரு ளினனே அவனே பரனே
நிலனே வானே நிரைமுதல் பரனே

**வலனே தரிதிகி ரியனே பரனே**
**அயனே சிவனே பயனே பரனே**
**இன்னணம் அமைதரல் இறைஅரங் கேசனைப்**
**பொன்னடி பணிபவர் புகுபதி**
**பன்னருஞ் சிறப்பிற் பரந்தா மமதே. 62.**

(இதனுள் இணை இயைபு முதலாயின எழுவிகற்பமும் வந்தமை காண்க.)

ஒன்றுமுதல் ஏழடிகாறும் முறையே இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று, இயைபுகள் வந்து உள்ளன. அடிதோறும் இயைபு வந்தமையால் அடியியைபும் காண்க.

மனனே-மனமே. கரி-யானை. புயல்-மேகம் போன்றவனே. வலனே-வலப்பக்கம். திகிரி-சக்கரம். பயம்-பால். பயன்-பாற் கடலினன்; பயன் தருபவன் என்று கொள்ளலாம் பதி -இடம். பரந் தாமம்-ஸ்ரீவைகுந்தம்.

**முற்குணன் உற்பவ மாதலின் முழுமுதல்**
**பொற்கம லத்திரு முற்ற முயங்கிய**
**அற்புதன் நாரணன் ஆம்என உற்றபின்**
**அற்றது பற்றெனில் உற்றது வீடுஉயிர்**
**செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே**
**பற்றிலன் முற்றில் அடங்குஎன நற்றமிழ்**
**கற்றவன் மற்றிரு பற்றறு கொற்றவன்**
**உத்தம ஞானமுத் திரைக்கையும் முகமும்**
**பத்திமை யால்தெரி சிப்பவர்**
**நித்தர்வந் தெதிர்கொள முத்தர் ஆ குவரே! 63.**

(இஃது இணை எதுகை முதலாய விகற்பம் ஏழும் வந்த நேரிசை ஆசிரியப்பா.)

முற்குணம்-சத்துவம். உற்பவம்-உலககாரணன். கமலம்-தாமரை. திரு-திருமகள். முற்ற-முழுவதும். பற்றுஇலன்-அன்பி னையே இல்லமாகக் கொண்டவன் மற்றுஇருபற்று-அகப்பற்று புறப் பற்று. கொற்றவன்-நம்மாழ்வார். (தொடரும்)

# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 145இன் தொடர்ச்சி. கட்டுரையாசியரியர்: அ.கிருஷ்ணமாசார்யர்

தன் எண்ணம் முற்றுப் பெற்றதைத் தன் நெஞ்சுடன் கூறி உவந்தான் தலைவன். இக்கூட்டுறவிற்குத் தெய்வஅருளே காரணம் என்பது தலைவன் கருத்து. பின்பு தலைவியினிடம் சென்று கலந்தான். அத்தோற்றம் வாவியில் மலர்ந்த தாமரையின் அகவிதழில், அரச அன்னம் சேர்ந்ததெனக் காணப்பட்டது. அப்போது மலர்ந்த செந்தாமரையும் அவள் முகத்திற்கு ஒப்பா காதென அவன் நா தலைவியைப் புகழ்ந்தது. இறுதியில் ஆயக் கூட்டத்தைச் சென்றடைய தலைவியை அன்புடன் விடுத்தான்.

**தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்**
**றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே**

என்னும் அகப்பொருள் விளக்கம் களவியல் சூத்திர விதியால்(18) இடந்தலைப்பாடு மூவகைப்படும். இதன் துறை களாவை.

**34) தந்த தெய்வந் தருமெனச் சேறல்:** தந்த தெய்வம் தருமெனச் சேறல் என்பது, முன் இயற்கைப் புணர்ச்சியில் அவளைத் தந்த விதி இன்னும் அவ்விடத்திற் சென்றால் தருமெனச் சேறல்.

**35) முந்துறக் காண்டல்:** முந்துறக் காண்டல் என்பது முந்து போலக் காண்டல்.

**36) முயங்கல்:** முயங்கல் என்பது புணர்தல். **(தழுவல்)**

**37) புகழ்தல்:** புகழ்தல் என்பது தலைவன் தலைவியைப் புகழ்ந்து கூறல்.

**38) ஆயத்துய்த்தல்:** ஆயத்துய்த்தல் என்பது, ஆயக் கூட்டத்துத்தலைவியைச் செலுத்தல்.

**இடந்தலைப்பாடு முற்றிற்று. இரண்டாம்நாள் இடந்தலைப் பாட்டிற் கூடினாரென்று உணர்க.**

**பாங்கற் கூட்டம்:** அஃதாவது மூன்றாம் நாள் பாங்கனாற் கூடுங் கூட்டம். இது,

**சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை**
**நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்**
**றாங்கெழு வகைத்தே பாங்கற்கூட்டம்**

என்னும் அகப்பொருள் விளக்க களவியல் சூத்திர (20) விதியாற் பாங்கற் கூட்டம் எழுவகையினை யுடைத்து என்பது.

**இக்காதல் நோய் பாங்கனாலன்றி நீங்காதெனக் கருதிய தலைவன், பாங்கனை அணைந்து அவன் கூட்டத் தலைவியைக் கூடுதல்.**

பாங்கனாலன்றித் தன் குறை நீங்காதென்றுணர்ந்த தலைவன் தன் உயிர்த் தோழனை அடைந்தான். தலைவனின் மனத் தளர்ச்சியும், தோள் மெலிவும் பாங்கனுக்குத் தன் நெஞ்சும், அறிவும் சென்று மயங்கும் பெண்மணியின் தெளிவைக் கூறினன். ''கல்வியறிவிற்றுறை போய நீ, ஒரு மறவர் பெண்ணுக்காக இங்ஙனம் மயங்கல் அறிவுடைமையோ!'' எனப் பாங்கன் தலைவனை இடித்துரைத்தான். ''அவள் பண்பமைந்த அழகு உன் கண்ணிற் பட்டிலது, அங்ஙனமாயின் உன்னிலும் பெருந்தகையாளரும் கலங்காமலிருத்தற்கு முடியாது'', எனத் தலைவன் அவனுக்கு எதிர்மொழிப் பகர்ந்தான். பாங்கனின் பல வீரச் சொற்கள் தலைவனை இழிவிற்குள்ளாகின. தலைவியின் செவ்வரி படர்ந்த கண்கள் அவன் நிறையைக் கொள்ளை கொண்டமையின் பின்னும் ஆற்றாமை அவனுக்கு மேலிட்டது. தலைவன் ஆற்றாமைக்குப் பாங்கனின் மனம் பெரிதும் வருந்திற்று. வஞ்சனையுடைய பெண்களின் மாட்டு நீ அன்பு செலுத்தல் தக்கதன்று, எனப் பாங்கன் கூறிய அறவுரைகள் பலவும், தலைவனுக்குச் சிறிதும் பயனளித்தில. ஆதலின் ''அந்தோ இனி என் செய்வேன்! கடல் நீரே கொதிக்கின்

எந்நீரைக் கொண்டு ஆற்றுவது, அதைப் போல் கலைவல்ல இவனே இங்ஙனம் மயங்கின் நாம் என் செயலாம். இவர்களைச் சேர்த்து வைத்தலே நம் கடமை, இன்றேல் இவன் இறந்து படுவன்'', என எண்ணித் தலைவியையும் இடத்தையும் அவன் இயல்பையும் தலைவனால் உணர்ந்து அவன் நோக்கிச் சென்றான்.

தலைவன் குறிப்பித்த இடம் பாங்கன் கண்ணிற்குப் புலப் பட்டது. நம் அண்ணலின் கலையறிவாகிற, நீரைப் பருகிநின்ற மேக மன்ன கூந்தலுடையாள் இன்று இங்கு வருவளோ! என்ற ஐயத்துடன் அங்கு உற்று நோக்கினான். முழுமதி முகத்தையும், கயற் கண்ணையும் வாய்ந்த மங்கையுருவம் ஒன்று அவனுக்குத் தோன்றிற்று. அவ்வனிதையின் ஒப்பற்ற பேரழகு அவன் மனத்தையும் கண்களையும் ஒருங்கே கவர்ந்தது. ''அழகே திரண்ட தெனக் காணும் இம்மங்கையின் கண்ணாகிய வலையில் பிணிப் புற்ற நம் தலைவன் வருந்தாது என் செய்வான்! அப்பிணிப்பிலேயே சிக்குண்டு இவண் இருந்துவிடாமல் மனத்திட்பத்துடன் நம்மிடம் வந்து நாம் இடித்துரைத்ததையும் தாங்கிக் கலங்காமலிருந்தது அவன் அறிவின் மாட்சியே! இவ்வுலகில் இவனே திண்ணியன், கலை வல்லோன். எங்ஙனமேனும் நம்தலைவனின் மெலிவை இவள் தன் அருட்பார்வையினால் தணிப்பள்'' எனத் தீர்மானித்துத் தலைவனிடம் சென்றான். தலைவன் நிறையைக் கொள்ளை கொண்ட வஞ்சிக் கொடியன்ன ஒருத்தி அவன் குறிப்பித்த இடத்தில் தனியே நிற்றலை தலைவனுக்கு உணர்த்தினான்.

நம் தலைவன் தோழியர் முன்னிலையில் வந்து விடுவனோ அன்றி ஆற்றாமையினால் இறந்துபடுவனோ என்னும் நாணத்தினா லும், அச்சத்தினாலும் மெலிந்து நின்ற தலைவியின் அழகுருவம் பாங்கனால் தூண்டப்பட்டு அங்குச் சென்ற தலைமகனுக்குக் காணப்பட்டது. மேகத்தை நோக்கி நிற்கும் சாதகப்பிள்ளையும், மயிலையும் ஒப்ப நிற்கும் அத்தலைவியைத் தலைவன் நெருங்கி அவளைக் கூடி மகிழ்ந்தான். பலபடியாக அவளைப் புகழ்ந்தான். ''நீ இனி இங்கு வருங்கால் உன் தோழியுடன் வருதல் நலம். உன் மாட்டுள்ள வேட்கையே இவ்வாறுப் புகலும்படி என்னைத் தூண்டிற்று'' என செப்பித் தலைவிக்கு அழகிய முல்லை மாலை யொன்றைச் சூட்டித் தோழியர் கூட்டத்திற்குப் போக விடுத்தான்.

**இவற்றை வெளிப்படுத்தும் துறைகள்:**

**39) தலைவன் பாங்கனைச் சார்தல்:** தலைவன் பாங்கனைச் சார்தல் என்பது தலைவன் இவ்வேட்கை நோய் பாங்கனாலன்றித் தீராதென்றெண்ணிப் பாங்கனைச் சார்தல்.

**40) பாங்கன் தலைவனை உற்றது வினாதல்:** பாங்கன் தலைவனை உற்றது வினாதல் என்பது, பாங்கன் தலைவனது உள்ளமும் தோளும் வாடிய வேறுபாட்டைக் கண்டு நினக்கு இவ்வேறுபாடுற்ற காரணம் என்னவென்று வினாதல்.

**41) தலைவன் உற்றதுரைத்தல்:** தலைவன் உற்ற துரைத்தல் என்பது இவ்வாறு வினாவிய பாங்கற்குத் தலைவன் தனக்குற்ற வேறுபாட்டின் காரணத்தைக் கூறல்.

**42) கற்றறிபாங்கன் கழறல்: (கண்டித்துக் கூறல்)** கற்றறிபாங்கன் கழறல் என்பது, வேதாகம புராணம் யாவுங் கற்றறிந்த பார்ப்பனப் பாங்கன் இடித்துக் கூறல். இடித்துக் கூறல்-உறுதிச்சொல் உரைத்தல்.

**43) கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்:** கிழவோன் கழற்றெதிர் மறுத்தல் என்பது பாங்கன் கூறிய கட்டுரையைத் தலைவன் மறுத்துக் கூறல்.

**44) கிழவோற் பழித்தல்: (பாங்கன் தலைவனைப் பழித்தல்)** கிழவோற் பழித்தல் என்பது அவ்வாறு கூறிய தலைவனைப் பாங்கன் பழித்துக் கூறல்.

**45) கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல்:** கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல் என்பது தலைவன் நீ பழிக்கின்ற என்னுள்ளம் தேறுதற்கு வேட்கை என்னால் தாங்க முடியாதென்று கூறுதல்.

**46) பாங்கன் தன்மனத் தழுங்கல்:** (இரங்கல்) பாங்கன் தன்மனத் தழுங்கல் என்பது, அதுகேட்ட பாங்கன் எம்பெருமான் (தலைவன்) ஆற்றானாய் இவ்வாறு கூறினால் யான் அதற்குத் தான் என் சொல்வேன் என்று தன்னுள்ளே யிரங்குதல்.

**பாங்கன் தலைவனோடழுங்கல்: (இரங்கல்)**

பேரின்பத்திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இத்தன்மைய னாதல் தகாது என்று, சூதின்மேற் பகை நெருங்குங் கொங்கை யினை யுடையாள் காரணமாக, இங்குக் கூறும் என் சொல்லெல்லாம் நின் காதுக்குக்கல்லின்மேல் அறைகின்ற மெல்லிய மூங்கிலின் முளை போலுமாயின; யான் மேற் சொல்லுமாறு யாது? கடல் வெப்பமுறின் அவ்வெப்பமாற அக்கடல்மேல் விளாவுதற்குப் பாரிடத்துஒரு தண்ணீருண்டோ என்றவாறு.

**47) எவ்விடத் தெவ்வியற்றென்றல்:** எவ்விடத் தெவ்வியற் றென்றல் என்பது, எம்பெருமான் (தலைவன்) இவ்வாறு கூறியும் ஆற்றானாயினன் அதனால் தலைவியைக் கூடாதொழியின் இறந்து படுமென்று தேறி, தலைவனை நோக்கி நின்னாற் காணப்பட்ட உரு எவ்விடத்து எவ்வியலையுடைதென்று வினாவுதல்.

**48) அவன்அஃது இவ்விடத் திவ்வியற்றென்றல்:** அவன் அஃது இவ்விடத் திவ்வியற்றென்றல் என்பது, தலைவன் என்னாற் காணப்பட்ட உரு இவ்விடத்து இவ்வியலையுடையது என்று பாங்கற்குக் கூறல்.

**49) பாங்கன் இறைவனைத் தேற்றல்:** பாங்கன் இறை வனைத் தேற்றல் என்பது இவ்வாறு வருந்தாதொழிக, நீ சொன்ன குறியிடத்துச் சென்று தலைவியைக்கண்டு யான் வருகின்றேன் என்று தேற்றுதல். (இறைவன், எம்பெருமான் போன்ற சொற்கள் தலைவனைக் குறிக்கும்.)

**50) குறிவயிற் சேறல்:** குறிவயிற் சேறல் என்பது தலைவன் கூறிய குறியிடத்துத் தலைவியைக் காணப் பாங்கன் போதல்.

**இறைவியைக் (தலைவியைக்) காண்டல்:**

வண்டு பொருந்திய மாலையையுடைய எம் இறைவன் சொன்ன இடமாகிய தண் புனம் இதுவே; கருமையாகிய புயலே மணம் பொருந்திய அளகபாரமாயிருக்கின்றது; கார்காலத்து மயிலே

இயலாயிருக்கின்றது. (சாயல்) மானே விழியாயிருக்கின்றது. நிறைமதியே முகமாயிருக்கின்றது. ஆதலால் அச்சேயிழையாள் தான் இவளே என்றவாறு.

**51) பாங்கன் தலைவனை இகழ்ந்ததற் கிரங்கல்:** இகழ்ந்ததற்கு இரங்கல் என்பது, தலைவி பேரழகைக் கண்டு பாங்கன் காணா முன்னம் எம்பெருமானை (தலைவனை) அறிவின்றி இகழ்ந்தனன் என்று இரங்கிக் கூறல்.

**52) பாங்கன் தலைவனை வியத்தல்:** தலைவனை வியத்தல் என்பது பாங்கன் தலைவி கண்வலையிற் சிக்கி அத்தடையோடுந் தலைவன் நம்மிடத்து வந்தது வியப்பென்று அதிசயித்துக் கூறல்.

**53) பாங்கன் தலைவியை வியத்தல்:** தலைவியை வியத்தல் என்பது தலைவியைப் பாங்கன் வியந்து கூறல்.

**54) தலைவன்றனக்குத் தலைவி நிலை கூறல்:** தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறல் என்பது பாங்கன் தலைவி குறியிடத்துத் தனித்து நிற்கின்ற நிலையைக் கண்டு வந்து தலைவனுக்குக் கூறல். (குறியிடத்து நிற்றலைக் கூறல்)

**55)தலைவன் சேறல்:** தலைவன் சேறல் என்பது, பாங்கன் சொற்படி தலைவன் குறியிடத்துப் போதல்.

நெஞ்சமே இந்தச் சோலையிடத்துத் தனியே என் வரவை நோக்கிப் பாகையுந் தேனையும் போன்ற மொழியார் நின்ற முறைமை, மேகத்தை நோக்கி யிரங்குஞ் சாதகப்புள்ளையும் மயிலையும் ஒக்கும் என்றவாறு.

**56) கலவியின் மகிழ்தல்:** கலவியின் மகிழ்தல் என்பது, புணர்ச்சியின் மகிழ்தல்.

**57) புகழ்தல்:** புகழ்தல் என்பது புகழ்ந்து கூறல்.

**58) பாங்கியொடு வருகெனப் பகர்தல்:** (பாங்கி துணை யாக) பாங்கியொடு வருகெனப் பகர்தல் என்பது இனி நீ வருங்கால் நின் உயிர்ப் பாங்கியொடு வருக எனக் கூறல்.

**59) பாங்கிற் கூட்டம்:** பாங்கிற் கூட்டம் என்பது தலைவன் தலைவியை ஆயத்துச் செலுத்துதல்.

என்னுள்ளே நிலையாய் நிற்கின்ற இளங்கொடி போல்வாய். நின் பக்கம் அகலாத மின் பிணங்கும் நுண்ணிய இடையராகிய ஆயக்கூட்டத்துடன் நீ போய்ப் பொருந்துக, என மாலை சூட்டித் தலைவியை விடுத்தான் என்றவாறு.

இவற்றுள் முன்னைய மூன்றும் சார்தல், கேட்டல், சாற்றல் என்னும் மூன்றற்குரிய; 'பாங்கன் கழறல்' முதல் 'கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்' ஈறாகக் கூறிய நான்கும் எதிர்மறைக்குரிய; 'பாங்கன் தன் மனத்தழுங்கல்' முதல் 'தலைவன் தனக்குத் தலைவி நிலை கூறல்' ஈறாகக் கூறிய பதினொன்றும் நேர்தற்குரிய; 'தலைவன் சேறல்' முதல் 'புகழ்தல்' ஈறாகக்கூறிய நான்கும் கூடற்குரிய; 'தலைவன் தலைவியைப் பாங்கியோடு வருகெனப் பகர்தலும்' 'தலைவன் தலைவியைப் பாங்கிற் கூட்டலும்' ஆகிய இரண்டும் பாங்கிற் கூட்டற்குரிய எனக் கொள்க.

**பாங்கற்கூட்டம் முற்றிற்று.**

பாங்கிமதியுடன்பாடு

**தன்னை நோக்கி வந்த தலைவியைக் கண்ட தோழி அவள் வேறுபாட்டை அறிந்து ஆண்மகன் கூட்டுறவி னாலேயே இஃது இவளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடுமென்பதை எண்ணிச் சிறிது ஆராய்ந்து தன் மதியை அவ்வாராய்ச்சியுடன் உடன்படுத்திப் பார்த்தல்.**

தலைவனைப் பிரிந்து சென்ற தலைவி, தன் பாங்கியருடன் கலந்து வழக்கம்போல் தினைப்புனத்தைக் காவல் செய்தாள். தலைவியின் வேறுபாடு அவள் உயிர்த்தோழிக்கு ஐயத்தை விளை வித்தது. அதன் காரணத்தைத் தோழி தன் மதியினால் ஆராயத் தொடங்கினாள். தலைவி பல்வகை விளையாடல்களையும் இனிய திண்பண்டங்களையும் வெறுத்தனள். தோழி பூசாத சாந்தின் மணம் அவள் மீது வீசிற்று. கண் சிவந்தும், உதடு வெளுத்தும் தோன்றின. எப்போதும் தொழும், பிறைச் சந்திரனையும் அன்று தொழுதிலள்.

இவற்றால் தலைவியின் இயல்பு தோழிக்குப் புலனாயிற்று. இவற்றின் காரணத்தை அறிய தோழியின் மனம் விழைந்தது. அதை யறிந்த தலைவி தான் அழகிய சுனை ஒன்றில் நெடுநேரம் ஆடியதன் பயனே இஃதெனத் தோழிக்கு விடையிறுத்தனள். இவ்வார்த்தைத் தோழிக்கு நகைப்பை விளைவித்தது.

ஆதலின் ‘‘உன் இதழின் செம்மையையும், கண்ணின் கருமையையும் பெற்றுக் கொண்ட அச்சுனை அவற்றிற்குப் பதிலாக இம்முல்லைமாலையை உனக்குச் சூட்டி அனுப்பிய நன்றியே நன்றி! அங்ஙனமாயின் யானும் அச்சுனையில் ஆடிக் காண்கின்றேன்’’ என்று விகடமாகப் பேசினாள். அன்றியும் ‘‘உன்னை யொத்த தெய்வப்பெண் ஒருத்தி சிறிதுநேரத்திற்குமுன் சுனையாடச் சென்றனள். நாம் இங்கு இருப்பின் அவள் இத்தகைய பண்புகளுடன் திரும்பி வருகின் றனளா என்பதைக் காணலாம்’’ எனக் கூறி தோழி நகைத்தனள். இவ்வார்த்தைகள் தலைவிக்கு நாணத்தை யுண்டாக்கின.

பின்னும் ‘‘உதிரத்தால் சிவந்த கொம்புகளை உடைய யானை யொன்றை வீரன் ஒருவன் தன் கைவேலால் குத்தினான்’’ எனத் தோழி தலைவி நடுங்குமாறு பொய்யுரைகள் சில கூறினாள். அங்ஙனம் எய்தவன் நம் தலைவன் தானோ எனத் தலைவிக்கு நடுக்கம் உண்டாயிற்று. அந்நடுக்கமே தலைவியின் களவைப் பளிங்கென நன்கு விளக்கியது. அதனால் தோழி உண்மையை உணர்ந்தாள்.

**மூன்றாம் நாள் செய்கை முடிந்தது.**

இவர்கள் இவ்வாறிருப்ப, தலைவியின் பிரிவு தலைவனைப் பெரிதும் வருத்திற்று. கடலிலுள்ள மணியைப் பெற விரும்பு வோர் மரக்கலத்தைத் துணையாக அடைதல் போன்று, அணங்காகிய தலைவியைப் பெறச் சில தழைகளை கையில் ஏந்தி உயிர்த் தோழியை அடைந்து இரத்தலே தகுதியென தலைவன் தீர்மானித் தான். ஆதலின், அவன் முதலில் பாங்கியிடஞ் சென்று உம் ஊர் யாது? உம் பேர் என்ன? என மிக்க பணிவுடன் வினவினான். அவற்றிற்கு விடை கிடைத்திலது. (தொடரும்)



திருக்கே
நம்பி

# திருக்கோட்டியூர் நம்பி வைபவம்

**கட்டுரையாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

திருக்கோட்டியூர் நம்பி அவதரித்து இற்றைக்கு 1024 ஆண்டுகள் ஆகின்றன. வைகாசி ரோஹிணி நக்ஷத்ரத்தில் அவதரித்த திருக்கோட்டியூர்நம்பி என்றழைக்கப்படும் குருகேசர் இராமாநுசர்மீது அளவுகடந்த அன்பு கொண்டவராக விளங்கியவர். எப்போதெல்லாம் அவர் இராமானுசரைக் காணவேண்டும் என்று எண்ணம் கொண்டாரோ அப்போதெல்லாம் ''நான் கோயிலுக்குச் சென்று வருகிறேன்'' என்று இல்லத்தாரிடம் விடை கொள்வாராம். திருவரங்கத்தில் சேரன் மடமே அவருடைய இருப்பிடமாகும். ஒவ்வொரு முறையும் திருக்கோட்டியூர் நம்பி திருக்கோட்டியூருக்கு விடை கொள்ளும்போது இராமாநுசர் காவிரியின் கரையிலுள்ள மாராச்சிபுரம் என்ற ஊர்வரைச்சென்று அங்கு அவரை பாதுகாப்பாக பல்லக்கில் அமரவைத்து திருக்கோட்டியூருக்கு அனுப்பி வைப்பா ராம். இதுபற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகள் இந்தக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

*ஆளவந்தார் அவதரித்துப் பதினோரு வருடங்கள் கழிந்தபின் (கி.பி. 987) ஸர்வஜித் வருஷத்திலே வைகாசி ரோகிணியில், காச்யப கோத்ரம் ருக்ஸாகையில் பெரியாழ் வாருக்குப் பரம ஆப்தரான செல்வ நம்பியின் வம்சத்திலே ஸ்ரீபுண்டரீகர் என்னும் நித்யஸூரியின் அம்சமாய், பூர்வசிக, ஸ்ரீவைஷ்ணவப்ராஹ்மண குலத்திலே குருகேசர்* ***(திருக்குருகைப்பிரான்)*** *என்னும் திருநாமம் உடையவராய் அவதரித்தவர் திருக்கோட்டியூர் நம்பி. நாதமுனிகளிடமிருந்து உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிகளின் மூலம் கிடைத்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை ஆளவந்தார் தம் சரமதசையிலே இவரிடம் கொடுத்து, அது வந்த வழியையும் கூறி, ரஹஸ்யார்த்தங்கள்*

அனைத்தையும் ஸ்ரீராமாநுஜர்க்கு உபதேசி க்கும்படியும் நம் தர்சனத்தை அவர் திருநாமத்தாலே விளங்க வைக்கும்படியும் நியமித்துச் சென்றார்.

**எம்பெருமானார் தர்சனம்**

அதன்படியே எதிர்காலத்தை நன்குணர்ந்தவரான திருக்கோட்டியூர் நம்பி-ஆசார்யனிடம் பலதடவை ப்ரார்த் தித்து அதன்மூலம் ஞானத்தை பெறும் தன்மை தம்முடன் முடிவு பெற்று, எம்பெருமானார் தொடங்கி ஸம்சாரிகள் படும் துன்பம் கண்டு அதைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் தாமே சென்று அவனுக்கு நல்வார்த்தைகளைக் கூறும் ஆசார்ய பரம்பரை வளரவேணும் என்னும் திருவுள்ளத்தாலே ஸ்ரீராமாநுஜரைப் பதினெட்டுமுறை திருக்கோட்டியூருக்கு நடக்கச் செய்து, வேறு எவர்க்கும் உபதேசிக்கக் கூடாது என்ற சூளுணர்வு பெற்றுக் கொண்டு அவருக்கு திருமந்த் ரார்த்தத்தின் ஆழ்பொருளையும், சரமச்லோகத்தின் நுண்பொரு ளையும் உபதேசித்தருளினார்.

ஸ்ரீராமாநுஜர் தம் காரேய் கருணையினாலே ஆசார்ய நியமனத்தையும் மீறி நமக்கு நரகம் வந்தாலும் வரட்டும்; பலர் உய்வடைந்தால் போதும் என்னும் திருவுள்ளத்துடன் பலர்க்குத் திருமந்த்ரார்த்தத்தின் ஆழ்பொருளை விரித்துரைத் ததைக் கண்டு ‘எம்பெருமானாரே!‘ என்று ஸ்ரீராமாநுஜரை அணைத்துக் கொண்டு ‘எம்பெருமானார் தர்சனம்‘ என்று எம்பெருமானார் திருநாமத்தாலே தர்சனம் விளங்கும்படி அருள்புரிந்து, அவருக்குத் தாமே சரம ச்லோகார்த்தத்தை உபதேசித்து, அதில் விருப்பம் கொண்டோர்க்கு உபதேசிக் கும்படி நியமித்தருளினார். திருமாலை யாண்டானை எம் பெருமானாருக்குத் திருவாய்மொழி காலக்ஷேபம் சொல்லும் படி நியமித்தவரும் இவரே.

**இராமாநுசன் திருமேனியில் பரிவு கொண்ட கிடாம்பி ஆச்சான்**

அக்காலத்தில், உடையவரும் கோயில் ஸ்தானத் துறைக்கு ஆசாரங்களைக் கற்பித்து ஸ்தானத்துறையை நெருக்கிக்கொண்டு போக; அவ்வளவிலே ஸ்தானத்துறைக்கெல்லாம் ப்ரதானரான

உத்தமநம்பி ஸம்பந்திகளிலே ஒருவர் உடையவர் மாதுகரத்துக்கு எழுந்தருளுகிற க்ருஹஸ்தரான ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருமாளி கையில் நூற்றைம்பது பொன் செலவழித்து அவருக்கு விஷம் கலந்த அன்னத்தை இடும் படி ஏற்பாடு செய்திட;

அந்த ஸ்ரீவைஷ்ணவரும் தன் அகமுடையாளை விஷம் கலந்த அன்னத்தை பிக்ஷையாக ப்ரஸாதிக்கும்படி தூண்டி னார்; அவள் உடையவருடைய பெருமையெல்லாம் அறிந்த வளாகையால் மாட்டேன் என்று மறுத்துவிட, அவளுடைய பர்த்தாவும் அவளை நிர்பந்தித்ததால் அந்தப் பெண் பிள்ளையும் மாதுகரத்தை மறைத்து ஸமர்ப்பித்துக் கண்ணும் கண்ணீருமாய்த் திருவடிகளிலே தண்டனிட்டு அச்சத்துடன் நின்றாள். உடையவரும் குறிப்பினால் அறிந்து கொண்டு விஷங்கலந்த அந்நத்தை ஸாகரகாமிநியான **(கடலரசன் ஆகிய காதலனை நோக்கி ஓடும் காதலியான காவிரி)** திருக்காவிரியில் கரைத்து விட்டு மடத்திற்கு எழுந்தருளி ஒரு மாதம் உண்ணாமல் உபவாஸமாக இருந்தார்.

அதைத் திருக்கோட்டியூர் நம்பி கேள்விப்பட்டு அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கு எழுந்தருளினார்; அவ்வாறு எழுந் தருளியபோது மத்யாஹ்நத்தில் உச்சி வேளையில் தென் திருக்காவிரியில் எழுந்தருளி வரும்போது; உடையவரும் நம்பி எழுந்தருளுகிற செய்தி கேட்டுத் தாமும் ஸ்ரீபாதத்து முதலிகளுமாக எதிரே எழுந்தருளித் திருவடி களிலே தண்டன் ஸமர்ப்பித்துக் கொண்டு கிடக்க; நம்பியும் உடையவரை எழுந்திருக்கச் சொல்லா மலிருக்க; கிடாம்பி யாச்சான் நம்பியைப் பார்த்து, ''இதென்ன சிஷ்யாசார்ய க்ரமம்? ஒரு கருமுகை மாலையை வெய்யிலிலே போடுவார்களோ? சோழியா! ஸந்யாசியைக் கொல்லப் பார்க்கிறாயோ?'' என்று கூறிக் கொண்டு தாமே உடையவரைப் பரிந்து எடுத்துக்கொள்ள; நம்பியும் ''வாரீர்! உம்மைக் காணும் தேடுகிறோம். திரு மேனிக்குப் பரிவாரை அறிய வேணும் என்ற எண்ணத்தில் அல்லவோ நாம் உடையவரை எழுந்திருக்கச் சொல்லாம லிருந்தோம்! திருமேனிக்குப் பரிவரான நீர் இன்று தொடங்கி தளிகை பண்ணி ஏக மாதுகரமாக ஸமர்ப்பியும்'' என்று

அருளிச் செய்து அங்கிருந்து மீண்டு ஊருக்குத் திரும்பினார். கிடாம்பி யாச்சானும் நம்பி அருளிச் செய்தபடியே தப்பாமல் உடையவருக்கு உகப்பாக அந்தக் கைங்கர்யம் பண்ணிக் கொண்டு எழுந்தருளி யிருந்தார்.

## திருமாலையாண்டானை திருவாய்மொழியின் ஆழ்பொருளை கூறிடும் என்று நியமித்திட்ட திருக் கோட்டியூர் நம்பி

திருக்கோட்டியூர் நம்பி ஒரு திருநாளுக்கெழுந்தருளிய போது திருமாலையாண்டானை அழைத்துக் கொண்டு எம்பெருமானார் மடமே எழுந்தருள, அவரும் தண்டன் ஸமர்ப்பிக்க, அவரைப் பார்த்தருளி, நீர் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய் மொழிக்கு அர்த்தம் கேளும் என்று இராமாநுசரைத் திருமாலையாண்டான் திருக்கையிலே காட்டிக் கொடுத்து தாம் மீண்டும் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார். திருமாலை யாண்டான் இராமாநுசருக்கு திருவாய்மொழியின் அர்த்தங்களை எடுத்துரைத்து வருகை யில் அவ்வப்போது இராமாநுசர் ஆழ்வாரின் சொற்றொடர் களுக்கு சிறப்புப் பொருளுரைக்கத் தொடங்கினார். திரு மாலையாண்டான் இவ்வாறு இராமாநுசர் சிறப்புப் பொருளு ரைப்பதை விரும்பவில்லை. இராமாநுசர் கூறிய உரை விளக்கங்களை விச்வாமித்ர சிருஷ்டி என்று கேலிகலந்த வார்த்தைகளால் அழைக்கலானார். இராமாநுசருக்கு திருவாய் மொழியின் பொருளுரைப்பதையும் நிறுத்திவிட்டார்.

## திருவாய்மொழி காலக்ஷேபம் நின்றுபோனது ஏன்?

இதையறிந்த திருக்கோட்டியூர் நம்பி திருவரங்கத் துக்கு எழுந்தருளித் திருமாலையாண்டானிடம், திருவாய் மொழி வ்யாக்யாநம் நடத்தாமல் தவிருவானென்? என்று கேட்டருள, 'ஆளவந்தார் அருளிச் செய்ய அடியேன் கேட்ட அர்த்தமொழிய இவர் சில விச்வாமித்ர ஸ்ருஷ்டி பண்ணி தம்முடைய எண்ண அலைகளில் தோன்றும் பொருளை சொல்லுகையாலே தவிர்ந்தேன்' என்ன, அவர் சொன்ன அர்த்தம் ஏதென்ன; ***(அறியாக்காலத்துள்ளே)*** என்கிற பாட்டை, உபகார ஸ்ம்ருதியாகவேணுமென்று சொன்னார் என்ன,

‘அதுவும் ஆள வந்தாரருளிச் செய்ய நான் கேட்டேன்‘ என்று நம்பி மறுமொழி கூறினார். ‘ஸாந்தீபன் பக்கலிலே, க்ருஷ்ணன் அத்யயநம் பண்ணினாற் போலேகாணும் உம்முடைய பக்கலிலே எம்பெரு மானார் திருவாய்மொழி கேட்கிறது; ஆளவந்தார் திருவுள்ளத் திலுண்டான அர்த்த மொழிய இவருக்கு ப்ரகாசி யாதென்றிரும்; நீர் இவருக்கு தெரியாதவற்றை தெரிவிப்பதாக எண்ணவேண்டாம் என்று அருளிச் செய்தருளினார். ***(வார்த்தாமாலை-173)***

### மாராச்சிபுரம் எங்கே உள்ளது?

திருக்கோட்டியூர் நம்பி அவ்வப்போது தம் குடும்பத்தாரிடம் ‘ஊர்புக்குவருகிறேன்‘ ***(ஊருக்குப் போய் விட்டு வருகிறேன்)*** என்று கூறி விடை கொள்வாராம். திருக் கோட்டியூர் நம்பி இவ்வாறு கூறினால் திருவரங்கத்திற்குச் சென்று வருகிறார் என்று பொருள் கொள்ள வேண்டும். இதிலிருந்து இராமாநுசர் இருக்குமிடமே தனக்கு விருப்ப மான ஊர் என்பதை திருக்கோட்டியூர் நம்பி வெளிப்படுத்தி னார். இவ்வாறு எழுந்தருளும் திருக்கோட்டியூர் நம்பி சில நாட்கள் தங்கி மீண்டும் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளும் போது தென்திருக்காவிரியின் வடகரை ஓரமாகச் சென்று மாராச்சிபுரம் என்னும் ஊரை அடைவார். அங்கு படகுத் துறையில் காவிரியின் தென்கரைக்குச் சென்று அங்கு அவரை பல்லக்கில் அமர்த்தி திருக்கோட்டியூர் செல்வதற்கான ஏற்பாடுகளை இராமாநுசர் செய்துவிட்டு திருவங்கத்துக்கு மீண்டு வருவார்.

அவ்வாறு ஒருமுறை மாராச்சிபுரத்திற்குச் சென்றி ருந்தபோது ‘எனக்கு தஞ்சமாக ***(உய்வு பெறுவதற்காக எப்போதும் நினைத்திருக்கும்படியாக)*** ஏதேனும் ஒன்றை அருளிச் செய்ய வேண்டும் என்று திருக்கோட்டியூர் நம்பி யைக் கேட்டார் இராமாநுசர். அப்போது அவர் ‘ஆளவந்தார் நீராடு வதற்காக ஆற்றில் இறங்கி முழுகும்போது ஆமை மணையை கவிழ்த்து போலே தெரிகின்ற அவருடைய முதுகுப்புறத்தை, அவருடைய சொல்லும் நோக்கும் மாறிய பின் அதாவது அவர் திருநாட்டுக்கு எழுந்தருளிய பிறகு எனக்குத் தஞ்சமாகக் கொண்டிருப்பேன். நீரும் அதையே

*தஞ்சமாக நினைத்திரும் என்று அருளிச் செய்தார். இதனால் ஆளவந்தாருடைய ஆத்ம குணங்களிலும் தேஹ குணங்களி லும் அவருடைய சிஷ்யர்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது வெளிப்படுகிறது.* ***(திருவிருத்தம்-10)***

***(குறிப்பு: எம்பெருமானார் காலத்தில் மதுரைக்குச் செல்லும் பெருவழி மாராச்சிபுரத்திலிருந்து மணப்பாறை வழியாக அமைந்திருக்க வேண்டும். தற்போதய 'டாக்ஸி ஸ்டாண்ட்' போலே பல்லக்குடன் பல்லக்குத் தூக்கிகளும், குதிரை பூட்டிய வண்டிகளும் தயார் நிலையில் உள்ள மாராச்சிபுரத்திற்கு மதுரை மற்றும் திருக்கோட்டியூருக்கு செல்வோர் செல்ல வேண்டியிருந்தது. திருக்கோட்டியூர் நம்பியை வழியனுப்பி வைப்பதற்காக மாராச்சிபுரம் வரை சென்று அவர் எவ்வித இடர்பாடுகளையும் எதிர்கொள்ளாது திருக்கோட்டியூர் சென்று சேர்வதற்கான ஏற்பாட்டினை ஒவ்வொரு முறையும் இராமாநுசர் செய்து வந்தார் என்பது இந்த நிகழ்ச்சி மூலம் பெறப்படுகிறது. திருச்சி கரூர் நெடுஞ் சாலையில் குளித்தலை என்னும் ஊருக்கு மேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது திம்மாச்சிபுரம் என்னும் ஊர். திருமா ராச்சிபுரம் என்னும் சொல் இடைக்குறையாகி திம்மாச்சிபுரமாயிற்று. இந்தத் திம்மாச்சிபுரம் காவிரியின் தென் கரையில் அமைந்துள்ள ஊர்.)***

இந்தக் கருத்திற்கு அறன் சேர்க்கும் வகையில் கூரத்தாழ் வானின் வாழ்க்கை வரலாற்றில் காணப்படும் சில குறிப்புகள் அமைந்துள்ளன. பெரியதிருமொழி 8-1 ''சிலையிலங்கு'' பிரவேசத்திலும், திருவாய்மொழி 5-3-7 ஈட்டுப் பேருரை யிலும் இராசேந்திர சோழனில் ஆழ்வான் தொடர்பான நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த ராஜேந்திர சோழன் என்பது குளித்தலைக்கு அண்மையில் அமைந்துள்ளது. மாராச்சிபுரத்தி லிருந்து ராஜேந்திரசோழன் வழியாக, மணப்பாறை, துவரங்குறிச்சி ஆகிய ஊர்களைக் கடந்து திருக்கோட்டியூரைச் சென்றடைய முடியும். திருக்கோட்டியூர் நம்பியிடத்து எம்பெருமானார் சென்ற போதெல்லாம் ஆழ்வானும் உடன்சென்றார் என்பது குருபரம்பரை நூல்கள் தெரிவிக்கின்றன. 1000 ஆண்டுகளுக்கு முன்பு

அமைந்திருந்த பெருஞ்சாலைகளைப் பற்றிய சில தடயங்கள் தற்போது கிடைக்கின்றன. மதுரை, திருக்கோட்டி யூர் ஆகிய ஊர்களுக்கு செல்வதற்கு குதிரை பூட்டப்பட்ட வண்டிகளும், பல்லக்கு தூக்கிகளும் மாராச்சிபுரத்தில்தான் இருந்து வந்தனர்.




A) மாராச்சிபுரம் B) திருக்கோட்டியூர்

## உச்சி வெயிலிலும் உபதேசம்

உச்சிவெயில் என்று பாராது கூரத்தாழ்வான் இருக்கும் இடம் சென்று ரகஸ்யார்த்த உபதேசித்த இராமாநுசர் திருக்கோட்டியூர் நம்பி திருவரங்கத்திற்கு எழுந்தருளும் போதெல்லாம் இராமாநுசருக்கு ரகஸ்யார்த்தங்களை அவ்வப் போது உபதேசித்திடுவார். ஒருமுறை திருவுள்ளத்தில் உகப்போடு இராமாநுசரை அழைத்துக் கொண்டு திருவரங் கம் பெரியகோயிலில் அமைந்திருந்த ஏதோ ஒரு மண்டபத் திற்குச் சென்றார்.

திருக்கோட்டியூர் நம்பி, தாம் ரகஸ்யார்த்தங்களை உபதேசித்திடும்போது அவரையும் கேட்கும் நபரையும் தவிர வேறு யாரும் அங்கே இருக்கக்கூடாது என்ற எண்ணம் கொண்டவர். இவர் சென்றடைந்த மண்டபத்தில் யாரோ ஒருவன் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். இதைக் கண்ட திருக்கோட்டியூர் நம்பி 'யாம் உமக்கு இந்த ரகஸ்யார்த்தத்தை இன்னொரு முறை திருவரங்கத்திற்கு வரும்போது சொல்லுகிறோம்' என்று திருக் கோட்டியூருக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். திருக்கோட்டியூர் நம்பி தாமே வலிய வந்து ரஹஸ்யார்த்தத்தைச் சொல்ல வந்தபோது அதைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போயிற்றே என்று மன வருத்தம் கொண்டார் இராமாநுசர்.

பின்பொருநாள் தாம் முன்பு சொன்னபடியே இராமா நுசருக்கு ரஹஸ்யார்த்தங்கள் சிலவற்றை உபதேசித்து அருளினார் திருக்கோட்டியூர் நம்பி. இதைப் பெற்றுக் கொண்ட இராமாநுசர் உச்சிவெயில் என்று பாராது கையில் திரிதண்டத்துடன் கூரத்தாழ்வான் திருமாளிகைக்குச் சென்று அங்கே அவர் பிக்ஷை வாங்கிய அன்னத்தை உண்டு கொண்டிருந்த கூரத்தாழ்வான் பக்கலிலே சென்று அவர் உணவை உட்கொண்டிருக்கிறார் என்பதையும் கணிசியாது 'கூரத்தாழ்வானே இது திருக்கோட்டியூர் நம்பி சொன்ன ரஹஸ் யார்த்தம் நீர் இழந்து போகலாது' என்று சொல்லி அப்போதே அவருக்கு உபதேசித்தருளினார்.

'மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள்' என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடியே மின்னலைப் போன்று தோன்றிய வுடனே மறைகின்ற நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையில் அடுத்த கணம் அடியேன் இல்லாமலும் போகலாம், நீர் இல்லாமலும் போகலாம். ஆகவே இந்த வினாடியே இதை நான் உபதேசிக்க, நீர் கேட்டு உய்வடையும் என்று இராமாநுசர் திருக்கோட்டியூர் நம்பி தமக்கு உபதேசித்த ரஹஸ்யார்த்தத்தை கூரத்தாழ் வானுக்கு உபதேசித்தார். ***(திருவிருத்தம் 99ஆம் பாட்டிற்கான பெரிய வாச்சான்பிள்ளை உரை)***

✱✱✱

# செந்திறத்த தமிழோசை

*இதழ் 145இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார் யர்*

இன்கவிபாடும் ஆழ்வார்களின் தீந்தமிழ்ப் பாசுரங்களுக்கு நம்பூர்வர்கள் விரிவான உரை வரைந்து வளப்பம் சேர்த்துள்ளனர். நம்பூருவர்கள் அனைவரும் ஸம்க்ருத, தமிழ், இலக்கிய, இலக்கணங் களை நன்கு பயின்றவர்கள். தமிழ் இலக்கண மரியாதைகளை அது தொடர்பான இலக்கண நூல்களையும் தம் உரைகளில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளனர். ஆழ்வார்களின் பாசுரங்களில் உட்பொதிந்து கிடக்கும் கருத்துக்களை உரையாசிரியர்களின் விளக்கங்கள் கொண்டு தான் நாம் உள்ளத்தில் கொள்ளமுடியும்.

மற்றைய எந்த மொழி இலக்கணங்களிலும் காணக் கிடைக்காத சிறப்பு, தமிழ் இலக்கணத்தில் மட்டும்தான் அமைந்து உள்ளது. அதுவே பொருளதிகாரக் கோட்பாடாகும். மனிதர்களின் உணர்வுகளுக்கு இலக்கணம் அமைத்ததொரு மொழி தமிழ் மொழியேயாகும். இதன்விளைவாகத்தான் ஆழ்வார்கள் பாசுரங் களில் தலைமகள், தோழி, தாயார் போன்ற நிலைகளில் பாசுரங்கள் காணப்படுகின்றன. பொருளதிகாரக் கோட்பாடுகள் 7, 8ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியுற்ற நிலையில் துறை இலக் கணங்கள் வகுக்கப்பட்டன. தேர்வழிதூறல், இருள் வியந்துரைத்தல், ஏறுகோள் கூறி வரைவு கடாதல், செவிலி இரங்குதல், தலைவி தார்பெற்று மகிழ்தல், தலைவி அன்னங்களையும், வண்டா ணங்களையும் தூது விடுத்தல், தூது செல்லாத மேகங்களைக் குறித்து தலைவி இரங்குதல், நற்றாய் தலைமகள் சென்ற சுரத்தருமை கூறி இரங்குதல், தலைவனது உரு வெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்குக் கூறுதல், வாடைக்கு வருந்துதல், இருளுக்கு ஆற்றாது தலைவி இரங்குதல், கட்டுவிச்சி கூறுதல், தலைமகள் இளமைக்கு செவிலி இரங்குதல், தலைவன் பாங்கனுக்குக் கழற்றெ திர் மறுத்தல், மாலைக்கு இரங்குதல், தலைவி இரவின் நெடுமைக்கு

இரங்குதல், வெறி விலக்கு, அன்றிலின் குரலுக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சி கண்டு தோழி இரங்குதல், தலைவி அறத்தொடு நிற்றல், வேந்தற்கு உற்றுழிப் பிரிவில் தலைவனைக் குறித்து தலைவி இரங்குதல் போன்ற துறை இலக்கணங்களில் பாடல்கள் அமைந்ததோடு மட்டுமல்லாமல் அவற்றிற்கு விரிவான விளக்கங்களை இலக்கண நூல்களின் துணைகொண்டு நம் உரையாசிரியர்கள் வகுத்துள்ளனர்.

நம்பூருவர்களின் உரை வளத்தில் சிறந்ததொரு பகுதி இலக்கண நூல்களின் அடிப்படையில் அவர்கள் வரைந்த உரைப் பகுதியாகும்.

## தொல்காப்பிய பொருளதிகாரம் காட்டும் அகம், புறம் பற்றிய மாண்புகள்

தொல்காப்பிய பொருளதிகாரம் அகம், புறம் என்ற இரண்டு பொருளையும் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. இது தமிழுக்கே சிறப்பாக உள்ள பொருளிலக்கணம் என்று பேசப் பெறுவது. எழுத்தின் இலக்கணம் எழுத்ததிகாரத்தில் உணர்த்தப் பட்டது. சொல்லின் இலக்கணம் சொல்லதிகாரத்தில் சொல்லப் பட்டது. எஞ்சிய யாப்பும், அணியும் ஆகிய இரண்டின் இலக்கணம் பொருளதிகாரத்தில் பேசப்படுகின்றது. ''சொல்லான் உணரப் படுவது பொருள் ஆதலின் சொல்லின் பின்பொருள் உணர்த்தப் பட்டது. இப்பொருளும் முதல், கரு, உரி என மூவகைப்படும்'' என்பர் இளம்பூரணர். (தொல்காப்பியம்-பொருளதிகாரம்- இளம் பூரணர் ) எழுத்தும் சொல்லும் யாப்பும் அணியும் என நான்கும் தன்னை நோக்கி நிற்பதால்தான் அவற்றுள் ஒன்றையும் நோக்காது நிற்றலால் பொருளிலக்கணம் மற்றை நான்கினும் சிறப்புடைத்து; என்பர் அறிஞர்கள். இலக்கியத்திற்கு உயிர் போன்றது பொருள். இறையனார் அகப்பொருள் உரை பொருள திகாரத்தின் சிறப்புக் குறித்து உரைப்பது பின்வருமாறு:-

''எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம் எனச் சொல்லாநிற்ப. மதுரை ஆலவாயில் அழல் நிறக்கடவுள் சிந்திப்பான்; ''என்னை, பாவம்! அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று; அதுதானும் ஞானத்திடையதாகலான்; யாம்

அதனைத் தீர்க்கற் பாலம்'', என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்''. (இறையனாரகப் பொருள் உரை சூ.1 உரை)

இப்பொருளதிகாரத்துக் கூறப்பெற்ற பொருள்கள் ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. ''இது தமிழர் தம் அறிவுக் கருவூலம்; தமிழக வாழ்க்கை நெறிகாட்டி; மக்களை மாக்களின்றும் பிரித்து இருள் தீர்ந்த கண்ணராகச் செய்யும் காளாமணி விளக்கு; ஒழுக்க உறையுள்; விழுப்பெரு முழுமணி: தமிழர் நாகரிகம், போர், படை, குடி, செல்வம், காதல் வாழ்வு, அன்புமுறை, நாடு, நகர்வளம், பிறயாவும் சுரந்து சுரந்து அறிவு வேட்கை ஆற்றும் வற்றாத ஊற்று; இஃது நடுவு பிறழ்ந்ததாகாது; உண்மை; வெறும் புகழ்ச்சியன்று'' என்று தொல்காப்பியப் பொருளதிகாரம் பதிப்பாசிரியர்கள் பாராட்டு கின்றனர்.

''அகம் புறம் என்னும் இருதிணை வரவு அமைந்த பொருளி லக்கியம் இன்றும் அறிவுலகிற்குப் புதியது; தமிழ்மொழி ஒன்றின் கண்ணேதான் காணப்படுவது என்று பன்மொழி யறிஞர்கள் செவ்வனம் மொழிகுவர்'' என்று அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

அகம் என்றால் யாது? உள்ளத்தின்கண் நிகழ்வதே அகம்; புறத்தார்க்குப் புலனாகாதது. புறம் என்பது வெளியே புலனாகும் நிலை. காதலுணர்வைப் பழந்தமிழ் மக்கள் அகம் என்று குறித்தனர். போர்முறை, ஆடல், பாடல், ஆட்சி முதலிய அனைத்தும் புறம் எனப்பட்டன.

திணை என்றால் ஒழுக்கம்; நிலம் என்பதும் திணை என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. ஒழுக்கமே திணை என்பது உயர் தமிழ்ப் புலவோர் கண்ட உண்மை. அகத்திற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் இனியது; அகத்திணை இன்னதென உணர்ந்திட ஏற்றது.

'ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விரு வரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்த தெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் 'அதனை அகம்' என்றார்''

(தொல்காப்பியம்-பொருளதிகாரம்-அகத்திணையியல் நூற்பா 1 உரைப்பகுதி) இந்த அகத்திணையொழுக்கத்தை ஏழு வகைகள் ஆக்குவர் தொல்காப்பியர். அந்த ஏழுவகைகளாவன; (1) கைக்கிளை (2) முல்லை (3) குறிஞ்சி (4) பாலை (5) மருதம் (6) நெய்தல் (7) பெருந்திணை. இடையில் உள்ள ஐந்தும் 'அன்பின் ஐந்திணை' எனப்படும்; கைக்கிளை என்பது 'ஒருதலைக்காமம்;' பெருந்திணை என்பதோ 'பொருந்தாக்காமம்'. களவியலில் தொல் காப்பியர் களவொழுக்கம் உணர்த்துகின்றார். களவு என்பதற்கு உரையாசிரியர்களால் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கப் படுகிறது.

''பிணி மூப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய், உருவும் திருவும் பருவமும் கலனும் கணமும் (கோள்நிலைப் பொருத்தம்) அன்பும் முதலிய வற்றால் ஒப்புமையுடையவராய்த் தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றி (அச்சம் கொள்ளாது) ஊழ்வகையால் தாமே எதிர்ப்பட்டுக் கூடுவது''.

**''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக்கூட்டம் காணுங்காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே''**

(தொல்காப்பியப் பொருளதிகாரம் களவியல் நூற்பா-1)

என்ற களவொழுக்கத்தின் இயல்பைத் தெரிவிக்கின்றார் தொல்காப்பியர். தலைவனும் தலைவியும் ஊழ் கூட்டக்காணும் நிலையே 'இயற்கைப் புணர்ச்சி' எனப்படும். இயற்கையாகவே கூடிய கூட்டம் என்பது இதன் பொருள். தலைவியைக் கண்டு தலைவன் ஐயுறவு கொள்ளும் நிலை உண்டு.

இயற்கைப் புணர்ச்சியில் தலைமகளின் மெய்ப்பாடுகள்; (களவியல் நூற்பா-9) (1) வேட்கை- ஒருவரை ஒருவர் அடைய வேண்டும் என்ற உள்ள நிகழ்ச்சி. (2) ஒரு தலை உள்ளுதல்- இடைவிடாது நினைத்தலாம். (3) மெலிதல்- உணவு இல்லாமை யால் தோன்றும் உடல் மெலிவு. (4) ஆக்கம் செப்பல்- 'இரவில்

நானும் துயில் அறியேனே' என்பது போன்று உறங்காமையும், பின் நடப்பவற்றையும் கூறுதல். (5) நாணு வரை இறத்தல்-நாணம் நீங்குதல். (6) நோக்குவ எல்லாம் அவையே போறல்- காண்பன வெல்லாம் அன்புடையார் உருவாகவே காணுதல். (7) மறத்தல்-பித்தாதல். (8) மயக்கம்-மோகித்தல். (9) சாக்காடு- இறத்தற்கும் நினைவு கொள்ளுதல்.

அகத்திணையியலில் இன்பவொழுக்கத்தின் பொது இயல்புகள் விரிவாகப் பேசப்படுதலின் இது முதற்கண் பொருளதிகாரத்தில் பேசப்படுகின்றது. கைக்கிளை, பெருந்திணை நீங்கிய இடைக்கண் ஐந்து திணைகளும் தமக்கென நிலம் உடையன என்று வரையறைப்படுத்துவர் தொல்காப்பியர்.

**''நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே''**

(அகத்திணைஇயல் நூற்பா-2)

திணைகளின் பொருள்களை, (1) முதல் (2) கரு (3) உரி என்று மூவகைப்படுத்துகின்றார். (அகத்திணை இயல் நூற்பா-3) முதற்பொருள் நிலமும், பொழுதும் என்று இருவகைப்படும். (அகத்திணை இயல் நூற்பா-4) நிலம், கடவுளுடன் சார்த்திப் பின்வரும் நூற்பாவில் (அகத்திணை இயல் நூற்பா-5) அழகுறப் பேசப்பட்டுள்ளது.

**''மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம், நெய்தல் எனச்**
**சொல்லிய முறையான் சொல்லவும் படுமே''**

இந்நிலத்துக்குரிய மக்கள் நிலைகள் மேல்வரும் நூற்பாக்களால் பேசப்படுகின்றன. அதன்பின் இன்பத்தை மேம்படுத்தும் பிரிவு வகைகள் பேசப்படும். தொல்காப்பியர் கூறும் பிரிவுகள் பின்வருவன :

**''ஓதல் பகையே தூது இவை பிரிவே''**

(அகத்திணை இயல் நூற்பா-27)

ஓதற்பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதிற் பிரிவு, பொருள் வயிற் பிரிவு, தேவர் பிரிவு, காவற் பிரிவு என்று அறுவகைப்படும் என்பர். இளங்காதலர்களின் தூய அன்பு உள்ளத்தில் ஆழமறியப் பெருந்துணை புரிவது ‘பிரிவு’ என்ற உரிப்பொருளே.

பாலை ஒழுக்கமாகிய பிரிவு களவு, கற்புக்காலங்களில் நிகழும் பொது ஒழுக்கம். இப்பாலை நிலம் குறித்துச் சங்க இலக்கியங்களில் நிரம்பப் பாடல்கள் உள்ளன. தொல்காப்பியர் கூறும் பிரிவு பற்றிய செய்திகள் அக்காலச் சமுதாய இயல்பு காணப் பெருந்துணை புரிகின்றன.

(1) ஓதற் பிரிவாவது: நூல்களைக் கற்றற்காகப் பிரிவது.

(2) தூதிற் பிரிவாவது: இரு பெரும் வேந்தரை சந்து (சமாதானம்) செய்வதற்காகப் பிரிவது. இவ்விரண்டு பிரிவுகளும் ‘உயர்ந்தோர்க்’குரியன என்பர் தொல்காப்பியர்.

(3) பகைவயிற் பிரிவாவது: மாற்றுவேந்தரோடு போர் கருதிப் பிரிவது. இப்பிரிவு இருவகைப்படும். அவையாவன :- அரசன் தலைமகனாகத் தானே செல்லுதலாகிய பகைதணி வினைப்பிரிவும், அரசனோடு பொருந்தி ஏனைய அரசர் தலைவராக உள்ளபோது செல்லுதலாகிய வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவும் என இருவகைப்படும்.

(4) தேவர் பிரிவாவது : முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களிலும் மேவிய சிறப்பை உடைய தேவரது பூசை, விழா முதலாயின செய்தற் பொருட்டுப் பிரியும் பிரிவு. இது நால்வருக்கும் உரிய பிரிவு ஆகும் என்பர்.

(5) காவற் பிரிவாவது: மக்கள் முறைமையினின்றும் தவறியவழி அறத்தை நிலைநிறுத்தல் காரணமாகப் பிரியும் பிரிவாம். ‘மன்னர் பாங்கின் பின்னோர்க்கு’ இது உரியது என்பர் தொல்காப்பியர்.

(6) பொருள்வயிற் பிரிவாவது : பொருள் தேடுதல் காரணமாகப் பிரியும் பிரிவு. வேந்தனை ஒழிந்த ஏனோர்க்கு உரியது. கடல் கடந்தும் பொருள்வயிற் பிரிதல் உண்டு. தலைவியை

அழைத்துக்கொண்டு கடல் கடந்து செல்லும் பழக்கம் அக்காலத்து இல்லை என்பர்.

களவின்கண், தலைவன் கூற்று நிகழும் இடங்கள், தோழிக்குக் கூற்று நிகழும் இடங்கள், செவிலிக்குக் கூற்று நிகழும் இடங்கள் என்பன விரிவாகப் பேசப்படுகின்றன. பகலின்கண் தலைவன் தலைவியைச் சந்தித்து இன்புறுவதும், இரவின்கண் சந்தித்து இன்புறுவதும் பகற்குறி, இரவுக்குறி என்று பேசப் படுகின்றன.

இனி, களவொழுக்கத்தில் வரைந்துகொள்ளுதல் திருமணம் கொள்ளுதல், உண்டு. அது வெளிப்பட வரைதல், வெளிப்படாமை வரைதல் என்று இரண்டு வகைப்படும் என்பர். (களவியல் நூற்பா-50)

பலரறிய மணந்து கொண்டு தலைவனும் தலைவியும் வாழும் ஒழுக்கம் கற்பொழுக்கமாம். இதன் இயல்புகளைத் தொல்காப்பியர் கற்பியலில் பேசுகின்றார். இதன்கண் கற்பு மணம் யாது என்று விளக்குகின்றார் :

**'' கற்பெனப்படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குறி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே''**

**(கற்பியல் நூற்பா-1)**

கொடுப்போர் இல்லாமலும் கரணம் நிகழ்தல் உண்டு, உடன் போக்கு நிகழும் காலத்து என்பர் அடுத்து. (கற்பியல் நூற்பா-2) திருமணச் சடங்கு விதிகள் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் உயர்ந்தோர்களாற் செய்யப்பட்டன என்பர் தொல்காப்பியர். இதனை 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம்' என்பர் தொல்காப்பியர். (கற்பியல் நூற்பா-4) ''இவ் வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின். முதனூலாசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னர்க் கற்பு நிகழுமாறும் கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்தவாறும் கூறினார்'' என்ற நச்சினார்க்கினியர் உரைப்பகுதி சிந்திக்கத்தக்கது, (தொல்- பொருளதிகாரம்-கற்பியல் நூற்பா-4) கற்பொழுக்கத்தின்

தலைவன், தலைவி, தோழி, காமக்கிழத்தியர், செவிலி, அறிவர் முதலியோர் கூற்றுக்கள் நிகழும் இடங்களை விரிவாகப் பேசு கின்றார். கற்பியலில் நிகழும் பிரிவுகளும் பேசப்படுகின்றன.

பிரிவுகளில் பகைவயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு, ஓதற் பிரிவு, காவற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, வினையாடற் பிரிவு பற்றிப் பேசுகின்றார். ஓதற் பிரிவு ஒரு மூன்று ஆண்டு என்கின்றார். காவற் பிரிவு, பொருள்வயிற் பிரிவுக்கும் காலவரையறை அவ்வாறே. இறுதியாகத் தலைவனும் தலைவியும் தவமிருக்கும் நிலையைப் பேசி முடிக்கின்றார் :

**''காமம் சான்ற கடைக்கோட்காலை**
**ஏமம்சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''**

(கற்பியல் நூற்பா-51)

இல்லறத்தின்கண் நின்ற தலைவனும் தலைவியும் துறவு நெறி தலைப்பட்டு வீடு பேறு எய்தும் நிலையை இவ்வாறு தெளிவாக்கியுள்ளார்.

நற்றாய், தோழி, கண்டோர், தலைமகன் முதலியோர்க்குரிய அகத்திணைப் பேச்சுக்கள் பற்றிக் கூறுவர், இன்பம் முதிரப் பேசுங்கால் கையாளப் பெறும் உவமை, உள்ளுறை யுவமை பற்றிய கூற்றுகளும் இங்கு உண்டு. கைக்கிளை, பெருந்திணை என்ற தாழ்ந்த இன்ப நிலைக்கும் இவையெனக் கூறியுள்ளார். அகத்திணை பற்றிய செய்யுட்களில் இயற்பெயர் கூறக்கூடாது என்பது தொல் காப்பியர் கருத்து. இவ்வாறு, அகத்திணையியல், களவியல், கற்பியல்களில் அகத்திணை வாழ்வியல் முறைகள் தொல் காப்பியரால் தெளிவாகப் பேசப்பட்டுள்ளன. நூற்பாக்களும், அவற்றிற்கமைந்த உரைகாரர் விளக்கங்களும் இவ்விளக்கங்களைத் தெளிவாக்குகின்றன.

**ஈட்டின்கண் அமைந்துள்ள அகஇலக்கியக் குறிப்புகள்**

தமிழ் இலக்கணங்களில் பேசப்படும் அகத்திணையியல், களவு, கற்பு காலக் கோட்பாடுகளை நம் உரையாசிரியர்களில்

குறிப்பாக நம்பிள்ளை தமது ஈட்டில் விரிந்த அளவில் குறிப்பிட்டு உள்ளார். முதற்பத்து மூன்று பதிகங்கள் முடிந்த அளவில் நான் காவது பதிகமாக அமைந்துள்ளது ‘‘அஞ்சிறைய மடநாராய்’’ என்று தொடங்கும் பதிகம். நம்பிள்ளையின் உரையாற்றலில் ஈடுபாடு கொண்ட தமிழறிஞர்கள் பலர் அவர் சொற்பொழிவாற்றிடும் போது திருவரங்கத்தில் கூடியிருப்பர். ‘‘நம்பெருமாள் கோஷ்டியோ, நம்பிள்ளை கோஷ்டியோ’’ என்று சொல்லும் அளவிற்கு பலர் கூடி யிருப்பர். இவர்களில் வைணவர்கள் அல்லாத புலவர்களும் உண்டு. அவர்கள் நம்பிள்ளையின் சொல்வன்மையை ஈடுபாடு கொண்டு தவறாது கூடியிருந்து கேட்டு மகிழ்வர். இவ்வாறு புலவர்கள் கூடியிருப்பதை ஈட்டில் பல இடங்களில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளதை நாம் காணலாம்.

அத்தகைய தமிழ்ப்புலவன் ஒருவன் நம்மாழ்வார் அருளிச் செய்த, திருவாய்மொழி உயர்ந்த வேத வேதாந்தக் கருத்துக்களை தன்னுள்ளே கொண்டதாய் அமைந்துள்ளது என்பதால் அவற்றின் பொருளை நம்பிள்ளை வாய் கேட்கவேண்டும் என்று ஆசைப் பட்டோம். ஆனால் அவர் மூன்றாம் பதிகத்தின் முடிவில் ‘‘நாளைமுதல் நம்மாழ்வார் தலைமகள் என்ற நிலையையடைந்து, ஆற்றாமை விஞ்சி, பறவைகளைத் தூதுவிடும் பதிகத்தின் உரை விளக்கத்தைக் கேட்டு மகிழலாம்’’ என்று கூற, அவன் அடுத்த நாள் அஞ்சிறை மடநாராய் பதிகத்திற்கு வருகை தரவில்லை. இந்தத் தமிழ் அறிஞன் ஆழ்வாரின் உள்ளக்கருத்தை அறிந்து கொள்ள வில்லை. திருவாய்மொழிக்கு ‘பகவத் விஷயம்’ அல்லது ‘பகவத் காமம்’ என்ற பொருளை அறிந்திலனே! என்று அவன் இழப்பிற்கு வருந்தித் தம் உரையை நிகழ்த்தியுள்ளார்.

‘‘மேல் மூன்று திருவாய்மொழிகளால், இறைவனுடைய முதன்மையினையும் அவனை வழிபடுந்தன்மையினையும் அவனுடைய எளிமையினையும் அனுபவித்து மகிழ்ந்த வராய்த் தாமான தன்மையில் நின்று பேசினார் ; இத்திருவாய்மொழி, தாமான தன்மை அழிந்து, ஒரு பிராட்டி நிலையை அடைந்தவராய், மகிழ்ச்சியால் கூறும் பாசுரம் போய், ஆற்றமையாலே கூறும் பாசுரமாய்ச் செல்லுகிறது. (ஆற்றாமை-பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள இயலாமை.) ‘ஆற்றாமையாவது, பிறிது எவ்வுணர்வும் இன்றி அவ்வாற்றாமை தானேயாவது, என்பர்

களவியல் உரைகாரர். ‘இது மற்றொரு காரகம்’ இது ‘மகாபாஷ்ய வாக்கியம்’ என்பர் அரும்பதவுரைகாரர். வேற்றுமைகள் வினை கொண்டு முடியின் அதனைக் ‘காரகம்’ என்பர். **இங்கு,**

**‘விளிகுறை இரண்டையும் விட்டவேற் றுமைகள்**
**வினையான் முடியின் காரகம் எனப்பெறும்.**
**குறையும் வினைகொளின் ஒரோவழிக் கூடும்.’**
**(இலக்கணக்கொத்து- 14.)**

இந்த வாக்கியம் மேற்கூறிய மூன்று திருப்பதிகங்கட்கு இத்திருப்பதிகம், நெறியால் வேறுபட்டது என்பதற்கு மேற்கோள். (இதற்கு எடுத்துக்காட்டும் ஐதிஹ்யம் ‘முற்காலத்தில் சிற்றறிஞன் ஒருவன்’ என்று தொடங்கும் வாக்கியம்.)

முற்காலத்தில் சிற்றறிஞன் ஒருவன், ‘பற்று அற்ற பரம ஞானிகளும் போற்றத்தக்கவனாக இருக்கின்றன; உண்மைப் பொருளை உள்ளவாறு கூறுகின்றன,’ என்று இத்திருவாய்மொழி அளவும் பாடங்கேட்டு, இந்தத் திருவாய்மொழி வந்த அளவில், ‘இது காமுகர் வார்த்தையாய் இருந்ததே!’ என்று கைவிட்டுப் போனானாம்; இறைவன் கேட்கத் தக்கவன், நினைக்கத்தக்கவன், தியானம் செய்யத் தக்கவன், பார்க்கத்தக்கவன்’ என்று விதிக்கிற பகவத் காமம் என்று அறிந்திலன், (பிரஹதாரண்யம். 6.5:6. ‘‘அரே! அயமாத்மா ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸி தவ்யோ த்ரஷ்டவ்ய: த்யந்வய:’’) நல்வினை அற்றவன் ஆதலாலே.

மேலும் நம்பிள்ளை பண்டைய தொல்காப்பிய உரை யாசிரியர்கள் குறிப்பிடாத செய்தி ஒன்றினை இந்தப் பதிகத்தின் நுழைவாயிலில் தந்துள்ளார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுக்கு உரிய பூதங்களைக் (அதாவது- இயற்கையின் ஐந்து கூறுகள்-பஞ்ச பூதங்கள்; ஆகாயம், நெருப்பு, வாயு, நீர், நிலம் ஆகியவை) குறிப்பிடுகிறார். அத்துடன் ‘இயற்கைப் புணர்ச்சி’ பற்றிய விளக்கத்தினையும் அளித்துள்ளார்.

**ஈடு:** ‘‘நன்று; அந்தப்புரத்தில் வசிக்கும் இப்பெண்ணிற்குத் தூது விடுகைக்குப் பறவைகள் உளவோ?’ எனின் கூடும் இடம் குறிஞ்சி; அதற்குப் பூதம் ஆகாயம். பிரியும் இடம் பாலை; அதற்குப் பூதம் நெருப்பு. ஊடும் இடம் மருதம்; அதற்குப் பூதம் வாயு.

இரங்கும் இடம் நெய்தல் ; அதற்குப் பூதம் தண்ணீர். இவ்வகையில், பிரிந்தார் இரங்குவது நெய்தல் ஆகையாலே,

***('போக்கெல்லாம் பாலை' புணர்தல் நறுங்குறிஞ்சி:, ஆக்கஞ் சேர் ஊடல் அணிமருதம்;-நோக்குங்கால், இல்இருக்கை முல்லை ; இரங்கல் நற்நெய்தல் சொல்லிருக்கும் ஐம்பால் தொகை என்னும் செய்யுளை ஈண்டு ஒப்பு நோக்குக. )***

பிராட்டி, தானும் தன் தோழிகளுமாக விளையாடும் பூஞ்சோலைக்குப் புறப்பட்டுச் செல்ல, சென்றதும் தோழிமார் பூக்கொய்கையில் கருத்தூன்றினவர்களாய்த் தனித்தனியே பிரிய, தலைவனும் தன்னேராயிரம் பிள்ளைகளும் தானுமாக வேட்டைக்குப் புறப்பட்டு வர, (ஏவுண்ட-அம்பி தைத்த. 'எய்யப்பட்ட' எனலு மாம்.) ஏவுண்ட விலங்கு இவனை இப்பூஞ்சோலையில் தனியே கொண்டு வந்து மூட்டி மறைய, முற்பிறவியிற் செய்த நல்வினைப் பயனால் இருவருக்கும் புணர்ச்சி உண்டாக, ***(இதுவே 'பூத்தருபுணர்ச்சி' என்று அகஇலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றது)*** பின்னர், கூட்டின தெய்வம் பிரிக்கப் பிரிந்து, 'இனி, இரண்டு தலையையும் அழித்தாகிலும் கிட்ட வேண்டும்,' என்னும் ஆற்றாமை பிறந்து, தன் அருகிலுள்ள தோழிகள் 'எம்மின் முன் அவனுக்கு மாய்வர்' என்கிறபடியே தளர்ந்தவர்கள் ஆதலின், கால்நடை தருவார் இல்லாமையாலே, அப்பக்கத்தில் வசிக்கின்ற விலங்குகள் சிலவற்றைப் பார்த்து, 'இவை வார்த்தை சொல்ல மாட்டா,' என்னுமது அறியாதே, 'இவற்றுக்குப் பக்ஷபாதம் உண்டாய் ***(பக்ஷபாதம்-சிலேடை: சிறகு அடித்துச்செல்லுதல்; அன்பு விழுதல். இங்கு, தன் ஆற்றாமை அறிவிக்கலாம்படி தன் பக்கத்தில் சஞ்சரிக்கிற காரணத்தாலே அன்புடையன என்று நினைக்கிறாள்.)*** இருந்தது ஆகையாலே, இவை கடுகப்போய் நங்காரியம் செய்யவல்லன்,' என்று பறப்பதற்குச் சாதனமான பக்ஷபாதமே பற்றாசாக, இராவண மாயையால் வரும் ஐயமும் இல்லாமையாலே கண்ணாலே கண்டவற்றை எல்லாம் தூது விடுகிறாள்.

இவ்விடத்தில் 'சக்கரவர்த்தி திருமகன் திருவவதரித்த பின்பு வானர சாதி வீறு பெற்றாற்போலே காணும், ஆழ்வார்கள் திருவவதரித்துத் திரியக்குச் சாதி வீறு பெற்றபடி' என்று பட்டர் ரஸோக்தியாக அருளிச்செய்வர்.

‘பிரிந்தவன் மீண்டு வருவான் என்று நினைந்து தூது விடுதற்குக் காரணம் யாது? எனின், தன் மேன்மையாலே இத்தலையில் தன்மை பாராதே வந்து கலந்தான்; கலந்த பின்னர் இவளிடத்து உள்ள குற்றங்களைக் கண்டான். கண்டு பிரிந்தான்; பிரிந்த அளவிலே ‘இது அன்றோ இருந்தபடி’ என்று அநாதரித்தான். கண்ட தலைவி, ‘குற்றங்களைப் பார்த்தல் மட்டுமே அன்றிச் செய்தார் செய்த குற்றங்களைப் பொறுத்துக்கோடல்’ என்ற குணவிசேடம் தம் ஒருவருக்கே அடையாளமாக இருப்பது ஒன்று உண்டு; அதனை அறிவிக்க வருவான்’ என்ற அந்த அபராதஸ ஹத்வத்தையே பற்றாசாகக் கொண்டு தூதுவிடுகிறாள்.

இயற்கைப்புணர்ச்சி, பிரிவு போன்ற அக இலக்கியக் கோட் பாடுகள் பக்தி நூல்களில் குறிப்பிடப்படும்போது அவற்றிற்கு என்ன பொருள் என்பதைத் தெளிவுபடுத்துகிறார் நம்பிள்ளை.

**அநாதி காலம் இவ்வாழ்வாரைத் தன்னோடே சேர விடுகைக்குக் காலம் பார்த்து இருந்த இறைவன், இவர்பக்கல் வெறுப்பின்மை உண்டான சமயம் பார்த்து? இவருக்கு மயர்வற மதிநலம் அருளல் ஈண்டுப் புணர்ச்சி எனப்படும். அவன் கொடுத்த அந்த ஞானம் பேற்றோடே தலைக்கட்டப் பெறாமை பிரிவு எனப்படும்.**

**என்செய்ய தாமரைக்கண் பெருமானார்க்கு என் தூதாய்**
**என்செய்யும் உரைத்தக்கால் இனக்குயில்காள்! நீரலிரே**
**முன்செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல்**
**முன்செய்ய முயலாதேன் அகல்வதுவோ விதியினமே!**

**(திருவாய்மொழி 1-4-2)**

இரண்டாம் பாட்டு: சில நாரைகளைத் தூது போகல் வேண்டும் என்று இரந்தாள் மேல்; அங்கு போனால் சொல்லும் பாசுரத்தைக் குயில்களுக்குச் சொல்லுகின்றாள் இங்கு; தொடங் கியது ஒன்று, முடிந்தது ஒன்று என்கிறபடியே வந்து விழுந்தது. இப்படிக் கலங்கலாமோ? எனின், இத்தனையும் கலங்கிற்றி லளாகில் இவள் பிரிந்த பொருளுக்கும், நாட்டார் பிரிந்த பொரு ளுக்கும் வேற்றுமையின்றி ஒழியுமே, இப்படிக் கலங்கப் பண்ணாத அன்று குணங்களால் மேம்பட்ட இறைவனுக்கு நமஸ்காரமா மித்தனை அன்றோ?

**காமுற்ற கையறவோடு எல்லே இராப்பகல்**
**நீமுற்றக் கண்துயிலாய் நெஞ்சுருகி ஏங்குதியால்**
**தீமுற்றத் தென்னிலங்கை ஊட்டினான் தாள்நயந்த**
**யாமுற்றது உற்றாயோ? வாழி! கனைகடலே!**

காமுற்ற கை அறவோடு-ஆசைப்பட்ட பொருள் இழவோடே; ஆசைப்பட்ட பொருள் கையில் கிடையாமையாலே வந்த இழவோடே என்றபடி. கைத்து-பொருள். காமுறுகையும் இழவும் கடலுக்கு இல்லாதிருக்கவும் எடுத்துக்காட்டாய் விளங்குகிற தனக்கு உண்டு ஆகையாலே இதற்கும் உண்டு என்று அநுமித்துச் (அநுமானப் பிரமாணத்தால் அறிதல். அநுமானம்-கருதல் அளவை) சொல்லுகிறாள். (''லோகே த்வந்முக ஸத்ருசம் க்வாபி ந த்ருஷ்டமிதி மயி வததி ராகாத்| ஹரி ஹரி குபிதா ஸாபூதந்யது பக்ராந்தமந்யதாபதிதம்||''-உலகத்தில் உன் முகத்தைப் போன்ற தொரு முகத்தை ஓரிடத்திலும் நான் பார்த்ததில்லை என்று ஆசையால் யான் கூற, கேட்ட அவள் ''அரி அரி என்று கூறிக் கொண்டு, கோபித்தவள் ஆனாள்; ஆதலால் தொடங்கியது ஒன்று, முடிந்தது ஒன்று, தன் நண்பனுக்குச் சொன்னான்'' என்பது, சுலோகத்தின் பொருள். இவ்விடத்தில், 'யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள் யாரினும் யாரினும் என்று' (குறள்-1314) குறளை நோக்குக.)

இத்திருவாய்மொழியில் கலவியும் பிரிவும். பெருமானார்க்கு பிரிகிற போது கண்ணாலே நோக்கி இவளைத் தனக்கே உரிமை யாக்கிப் போனபடி. (இங்கே இச்சொல்லுக்குத் தலைவன் என்பது பொருள்.) அன்றி, தலைவன் தனக்கு இயற்கையில் அமைந்த ஐஶ்வரியத்தோடு இவள் இடத்துள்ள குணங்களாகிய செல்வத்தை யும் உடன்கொண்டு சென்றவனாதலின், இரட்டித்த செல்வத்தினை யுடையவன் என்பாள், பெருமான் என்கிறாள் எனலும் அமையும். 'பெருமான்' என்பதற்குச் 'செல்வத்தாலே பெரியவன்' என்பது பொருள்; அதாவது, இரட்டித்த செல்வத்தையுடையவன் என்பதாம்.)

'இத்திருவாய்மொழியில் கலவியும் பிரிவும்' என்றது, புணர்ச்சியின்றேல் பிரிவு இன்றாதலின், இத்திருவாய்மொழியில் பிரிவினைக் கூறிய போதே புணர்ச்சியும் போதரும். 'ஆயின், பிரிவில் அரையாறுபட்டுச் சிவந்திருத்தலை இவள் அனுபவித் தாளோ?' எனின், பெரிய திருவடி எடுத்துக்கொண்டு செல்லும்

போது பிரிவாற்றாமையாலே புரிந்து புரிந்து நோக்குமே அவன்; அப்போது தண்ணிற் சிவப்பு அரையாறுபட்டிருக்கும்; அதனைக் கண்டு அனுபவித்தாள்.

**4ஆம் பாட்டு.**

என்நீர்மை கண்டுஇரங்கி இதுதகாது என்னாத
என்நீல முகில்வண்ணர்க்கு என் சொல்லியான் சொல்லுகேனோ
நன்னீர்மை இனியவர்கண் தங்காதுஎன் றொருவாய்சொல்
நன்னீல மகன்றில்காள்! நல்குதிரோ நல்கீரோ?

என் நீர்மை கண்டு-என் மென்மைதனைக் கண்டு அருள் செய்து, நாம் பிரியுமது தகாது என்னாதே பொகட்டுப் போனவர்க்கு. பட்டரை ஒரு தமிழ்ப் புலவர் கேட்டு இரங்கி 'என்னாது, கண்டிரங்கி என்னப் பெறுமோ?' என்ன 'அணைத்த கை நெகிழ்த்த அளவிளே வெளுத்தபடி கண்டால் பிரியத் தகாது என்று இருக்க வேண்டாவோ?' என்று அருளிச் செய்தார். கேட்ட புலவர் 'இவ்வாறு நிகழ்வதும் உளதோ?' என்ன, 'புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள் வற்றே பசப்பு'. (திருக்குறள்-1187) 'காதலர் தொடுவுழி தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரத்தலானே' (குறுந்தொகை-399) என்பன போன்ற தமிழ்ப்பாக்களை நீ அறியாயோ? என்று அருளிச் செய்தார்.

இந்தப் பதிகத்தின் மையக்கருத்தை ஸ்ரீமணவாள மாமுனிகள் இந்தத் திருப்பதிகத்திற்கான பொருளை தமது நூற்றந்தாதியில் கீழ்க்கண்டவாறு தந்துள்ளார்.

**அஞ்சிறைய புட்கள் தமை ஆழியானுக்குநீர்**
**எஞ்செயலைச் சொல்லும் என இரந்து-விஞ்ச**
**நலங்கியதும் மாறன்இங்கே நாயகனைத் தேடி**
**மலங்கியதும் பத்தி வளம். (4)**

திருவாய்மொழி 2ஆம் பத்து முதற்பதிகத்தின் நுழை வாயிலில் நம்பிள்ளை மேலும் பல அகத்திணை இயல்கோட்பாடு களைக் குறிப்பிட்டுள்ளார்.

'அஞ்சிறைய மடநாராய்' என்ற திருவாய்மொழியைக் காட்டிலும் இத்திருவாய்மொழியில் ஆற்றாமை கரைபுரண்டிருக்கும்.

அதற்குக் காரணம் என்னை? எனில் ‘பெருநிலம் கடந்த நல்லடிப் போது அயர்ப்பிலன் அலற்றுவன்’ (திருவாய்மொழி 1-3-10) என்று அவதாரத்திலே அநுபவிக்கக் கோலிப் பெறாதது ஆகையாலே ‘அது ஒரு காலத்திலே நிகழ்ந்தது நாம் பிற்பாடரானோம்’ என்று ஆறலாம்; இது அவ்வாறு அன்றி. ‘நம்பியைத் தென்குறுங்குடி நின்ற’ (திருவாய்மொழி 1-10-9) என்று உகந்தருளின நிலத்திலே அனுபவிக்க ஆசைப்பட்டுப் பெறாமையாலே வந்த ஆற்றாமை யாகையாலே இது கனத்திருக்கும். அவதாரத்தில் பிற்பட்டார்க்கும் இழக்க வேண்டாதபடி முகங்கொடுக்கைக்கு நிற்கின்ற இடங் களன்றோ? ‘உகந்தருளின நிலங்கள்’ மற்றும் ‘அஞ்சிறைய மட நாராய்’ என்ற திருவாய்மொழியில் தூது விடுகைக்குத் தரிப்பு உண்டாயிற்று. இத்திருவாய்மொழியில் அங்குத் தூது விட்ட பொருள்களும் நோவுபடுகின்றனவாக அவற்றுக்குமாகத் தாம் நோவு படுகிறார். மேலும் அனுபவிக்கின்ற இவ்வாழ்வாருடைய தன்மை யாலும் இத்திருவாய்மொழியில் ஆற்றாமை கனத்திருக்கும்.

யாங்ஙனம்? எனின் அத்திருவாய்மொழியிலுள்ள ஆற்றாமை ‘‘பத்துடையடியவர்’’ (1-3-1) என்ற திருவாய்மொழிக்கு முன்பு இறைவனை அனுபவித்துப் பிரிந்த அளவாலுள்ள ஆற்றாமையே; ‘அஞ்சிறைய மடநாரைக்குப்’ பின்பு இத்திருவாய் மொழியளவும் அவனுடைய குணங்களை அனுபவித்துப் பிரிந்த பிரிவு ஆகையாலே இத்திருவாய்மொழியில் ஆற்றாமை கனத் திருக்கும். இறைவன் பயிலப்பயில இனியவனாய் இருப்பவன் அன்றோ?

ஆற்றாமைக்குப் போக்கு விட்டுத் தரிக்குமாறு போன்று, இவளும் (பராங்குச நாயகியும்) கண்ணுக்கு இலக்கான பொருள்கள் எல்லாவற்றோடும் கழுத்தைக் கட்டிக் கொண்டு கிடந்து, ‘நீ பட்டதோ நான் பட்டதோ?’ என்று கூப்பிடுகிறாள். மூடி வேவா நின்றதோர் கொள்கலம் மூடித் திறந்தவிடத்து ஆவி எழுந்து முன் நின்ற வெப்பம் நீங்கினாற்போன்று, அச்சொல் சொல்ல, ஆற்றாமை பண்டையின் சிறிது அளவுபடுவதாம் என்னும் களவியல் உரை ஈண்டுச்சிந்தித்தல் தகும்.

**வாயும் திரைஉகளும் கானல் மடநாராய்!**
**ஆயும் அமர்உலகும் துஞ்சிலும்நீ துஞ்சாயால்**

**நோயும் பயலமையும் மீதூர எம்மேபோல்**
**நீயும் திருமாலால் நெஞ்சம்கோட் பட்டாயே?**
**(திருவாய்மொழி 2-1-1)**

பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலேயாகையாலே, கடற்கரைச் சோலையின்கண் இவள் பிரிவால் வருந்தி இரங்குகிற காலத்தில், ஆங்கு இரைதேடுதல் நிமித்தமாகத் தங்கியிருந்த ஒரு நாரை இவள் கண்ணுக்கு இலக்காக, அதன் உடம்பில் வெளுப்பைக் கண்டு, அதுவும் தன்னைப் போன்று பிரிவாற்றாமையாலே, வந்த பசலை நிறத்தோடு இருக்கிறதாகக் கொண்டு, பாவியேன் நான் அகப்பட்ட விஷயத்திலே நீயும் அகப்பட்டு நெஞ்சு பறி யுண்டாயோ? என்கிறாள்.

வாயும் திரை உகளும் கானல் மடநாராய்-பெரிய மலை போல வந்து கிட்டுகிற அலைகள் மேலே தாவிப் போகாநின்றாலும் நினைத்தது கைப்புகுமளவும் சலியாமல் கடற்கரைச் சோலையில் தங்கியிருக்கின்ற நாரையே! பகவானைத் தியானிப்பவர்கள் சலியாமல் இருப்பது போன்று சலியாமல் இருக்கிற நாரையே! என்கிறாள். அதாவது 'அலைகடல் நீர் குழம்ப அகடுஆட ஓடி அகல்வான் உரிஞ்ச முதுகில் மலைகளை மீது கொண்டு வருமீனை மறவாது' (பெரியதிருமொழி 11-4-1) இருப்பார்க்குப் போலியாய் இராநின்றது, அலைகளை மீதுகொண்டு வருமீனை மறவாதி ருக்கின்ற இந்நாரையும் என்றபடி. மீனைக் குறிக்கோளாகக் கொண்டு சலியாமல் நிற்கின்ற நாரையே! என்று கொள்ளாது, சர்வேச்வரன் காப்பவன் என்று இருப்பார், மூவகைத் துன்பங் களாலும் வருகின்ற இடையூறுகட்கு இடையாதே இருக்குமாறு போன்று, மலைகள் போன்ற அலைகள் மேலே தாவிச் சென்றாலும் அதற்குச் சலியாமல் இருக்கின்ற நாரையே என்று கோடலும் ஆம். இனி திரை உகளுதலை மடநாரைக்கு அடைமொழி ஆக்காது, திரை உகளாநின்றுள்ள கானல் (கடற்கரைச் சோலை) என்று திரை உகளுதலைக் கானலுக்கு அடைமொழியாக்கிக் கூறலும் ஒன்று. கிராமணிகள், (கிராமத்தில் தலைமை பெற்றவர்கள்) பிறர்க்குத் துன்பம் செய்துகொண்டே யாகங்களும் பண்ணிப் பவித்திரங்களும் முடிந்திட்டுத் தார்மிகர் என்னும்படி திரிவது போன்று, நாரையும் நினைத்த பெரிய மீன் கைப்புகுமளவும் சிறிய மீன்கள் வந்தாலும் அவற்றில் விருப்பம் அற்று இருத்தலின் மடநாராய் என்கிறாள். மடப்பமாவது பற்றிற்று விடாமை. (தொடரும்)

# திருமங்கையாழ்வார் பாசுரங்களின் விளக்கவுரைகளில் எடுத்தாளப்பட்ட உவமைகள்

**கட்டுரையாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

'உவமை' என்பது 'உபமா' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு எனச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகின்றது. இக்கருத்து ஆய்விற்கு உரியது. ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுக் காண்பது என்பது மனித இயல்பான மன உணர்வு; புலவர்க்கு இயல்பான மன ஊற்று. உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இயல்பாக உள்ள இம்மன உணர்வு தொடர்பான கொள்கைகளைத் தொகுத்து தொல்காப்பியர் உவம யியல் என்று பெயரிட்டுள்ளார்.

சங்கத்தொகை நூல்களில் ஒன்றையொன்று ஒப்பிட்டு நோக்குதல் என்னும் பொருளில் உவமம், உவமை என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே உவமை என்பது வட மொழியிலிருந்து வந்த சொல்லாக இருத்தல் இயலாது; ஒப்புமை என்னும் சொல்லிலிருந்து தோன்றியதாக இருத்தல்வேண்டும். ஒப்புமை-ஒபமை-உபமை-உவமை என்றாகி இருத்தல் கூடும்.

செய்யுள்களில் உவமைகளைப் பல்வேறு நோக்குகளிலும் போக்குகளிலும் சான்றோர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். அவற்றுள் சிலவற்றைப் பின்வருமாறு வரையறுக்கலாம்.

1. ஒரு பாடலில் உள்ள திணை இன்னது என உணர வைத்தல்.

2. பெரும்பாலோர் அறியாத ஒன்றினைத் தெளிவாக அறியுமாறு செய்தல்.

3. உள்ளத்து உணர்ச்சிகளைத் தெளிவாக வெளிப்படுத்தல்.

4. கவிநயம் மிகுவித்தல்.

5. தன் புலமையை, பல்துறை அறிவை வெளிப்படுத்தல்.

6. தன் இயற்கை-அரசியல்-சமய-சமூக ஈடுபாடுகளை வெளிப் படுத்தல்.

7. வரலாற்று உண்மைகளைப் பொதித்து வைத்தல்.

8. அறச் சிந்தனைகள் முதலியனவற்றை மறைமுகமாக வெளிப் படுத்தல்.

உவமம் என்பது உவமை, உவம உருபு, பொதுத் தன்மை, பொருள் என்னும் நான்கு உறுப்புகளைக் கொண்டது. 'பவளம் போல் செந்துவர் வாய்' என்னும் உவமத்தை எடுத்துக் கொள்வோம். இதில், பவளம்-உவமை, போல்-உவம உருபு, செம்மை-பொதுத் தன்மை, வாய்-பொருள். உவம உறுப்புகளுள், உவம உருபு அல்லது பொதுத் தன்மை இடம் பெறாமலேயே உவமம் அமைவதும் உண்டு.

ஓர் உவமத்தில் உவமையும் பொருளும் தவறாமல் இடம் பெறும். சில வேளைகளில் உருவக நிலையில் உவமை மட்டுமே நின்று ஒப்புமைப் பண்புகளை மறைமுகமாக விளக்குவதும் உண்டு.

**உவமப்பாகுபாடு.**

உவமத்தை வினை உவமம், பயன் உவமம், மெய் உவமம், உரு உவமம் என நான்காகப் பாகுபடுத்திக் காண்கின்றார் தொல் காப்பியர். எல்லா வகை உவமங்களும் இந்நான்கினுள்ளேயே அடங்கும் என்பது அவர் துணிவு.

**வினை பயன் மெய்உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமத் தோற்றம்**

(தொல்காப்பியம் பொருளதிகாரம், உவமையியல் நூற்பா-1)

என்பது தொல்காப்பியம். வினை என்பதுள் வினை, வினைக் குறிப்பு ஆகியனவும், பயன் என்பதுள் நன்மை தீமை ஆகியனவும், மெய் என்பதுள் அளவு வடிவு ஆகியனவும், உரு என்பதுள் வண்ணம்

பண்பு ஆகியனவும் அடங்கும் என்பர் உரையாசிரியர். வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு வகை உவமப் பாகுபாடுகளுள் ஒன்று மட்டுமே ஓர் உவமத்தில் வருவது பெரு வழக்கு. ஒரே உவமத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட உவம வகைகள் அருகிய நிலையில் வருவதும் உண்டு. (திருப்பாவை ‘ஆழி மழைக்கண்ணா’ -4 பாசுரத்தில் இந்த நான்கு உவமை வகைகளையும் நாச்சியார் அருளிச் செய்துள்ளார்.)

**உவமை தோன்றுதற்குரிய களன்கள்.**

உவமங்கள் பெரும்பான்மையும் பின்வரும் நான்கு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றுகின்றன. 1. சிறப்பு. 2. நலன். 3. காதல். 4. வலி.

**உவம உருபுகள்.**

வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ உவமையையும் பொருளையும் தொடர்புபடுத்துவதில் பொதுத் தன்மையோடு துணை நிற்கும் உருபுகள் உவம உருபுகள் ஆகும். உவம உருபுகள் விகுதிகளை ஏற்றுப் பல்வேறு வடிவங்களைப் பெற்று வரும்; அந்த வடிவங்கள் வினையெச்சங்களாகவோ, பெயரெச்சங்களாகவோ, வினைமுற்றுகளாகவோ, குறிப்பு வினைகளாகவோ அமைவது உண்டு. சில நேரங்களில் பொருள் அழுத்தம் பெற ஏ, ஆல், உம் போன்ற அசைகளைப் பெற்றும் அமைவதுண்டு.

**உவமையும் பொருளும்**

உவமையும் பொருளும் ஒரு பொதுத் தன்மையால் இணைக்கப்படுகின்றன. அவ்வாறு இணைக்கப்படும்போது பொருளினும் உவமையின் தன்மை உயர்ந்து விளங்கவேண்டும்.

ஒரு பொருளுக்குப் பல உவமைகள் இருப்பினும், அந்த உவமைகள் பலவற்றுள்ளும் எந்த உவமை பொதுத் தன்மையால் மிகச் சிறந்து விளங்குகின்றதோ அதனையே உவமையாக்க வேண்டும். அதாவது, உவம அமைப்பில் உயர்ந்த தன்மையைப் பொதுத்தன்மை ஆக்குங்கால், பொருளின் உயர்ந்த தன்மையினும் உவமையின் தன்மை உயர்ந்ததாகவும் அத்தன்மையைக் கொண்ட

பலவற்றுள்ளும் உவமைக்குக் கொள்ளப்படுவதே உயர்ந்ததாகவும் விளங்கவேண்டும். அதேபோன்று இழிந்த தன்மையைப் பொதுத் தன்மை ஆக்குங்கால், பொருளின் இழிந்த தன்மையினும் உவமையின் இழிநிலைத்தன்மை உயர்ந்ததாகவும் அந்த இழிந்த தன்மையைக் கொண்ட பலவற்றுள்ளும் உவமைக்குக் கொள்ளப் படுவதே மிக இழிந்த தன்மையாகவும் விளங்கவேண்டும் எனத் தொல்காப்பியம் வரையறுக்கின்றது.

**உரைவளம் பெற்ற வைணவம்**

வைணவம் ஸ்ரீமந்நாராயணனைப் பரம்பொருளாகக் கொண்டதால் சிறப்புப் பெற்றது. எம்பெருமானாருடைய செயல் களால் ஏற்றம் பெற்றது. நாலாயிரத்தால் மிகப்பெரிய தோற்றம் பெற்றது. வைணவ ஆசார்யர்களின் உரை வளத்தால் தமிழும், வைணவமும் மணம் பெற்றது.

நாலாயிரத்திற்கு வாய்மொழி உரையாசிரியர்களாக விளங்கி யவர்கள் ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார், திருமாலையாண்டான், இராமானுசர் ஆகியோர். இராமானுசர் காலத்தில்தான் திவ்யப்பிரபந்த உரைகள் ஏட்டில் இடம் பெற்றன. அதன்பிறகு பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, மணவாளமாமுனிகள் ஆகியோர் நாலாயிர திவ்யப்பிரபந்தத்திற்கு உரை கண்டனர். அவை இன்று முழு அளவில் நமக்குக் கிடைத்துள்ளன. ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு இந்த உரையாசிரியர்கள் தம்முடைய விரிவுரை களால் வளமூட்டினர்.

கரும்பினைக் காட்டி, யானையை ஈர்ப்பது போல் எடுத்துக் காட்டுகள் பலவற்றை காட்டி பயில்வோருக்கு இன்பம் பயப்பது பெரியவாச்சான்பிள்ளை, நம்பிள்ளை ஆகியோர் அருளிச் செய்த உரை விளக்கங்களாகும்.

**உவமையின் பயன்பாடு**

உவமையின் மூலமாக எக்கருத்தையும் எளிதில் விளக்க முடியும். ஒரு கருத்தை உவமையின் மூலம் பசமரத்தாணி போல மக்கள் மனத்தில் பதியவைக்க முடியும் என்பதைக் கவிஞர்கள் நன்கறிவார்கள். எனவே, செந்தமிழ்க் கவிஞர்களாகிய ஆழ்வார்கள்

உவமை நயத்தோடு பல கருத்துக்களைத் தமது பாசுரங்களின் வாயிலாக விளக்கியுள்ளனர். அவர்கள் சென்ற வழியில் உரையாசிரியர்களும் உவமையைக் கையாண்டு ஆழ்வார்கள் பாசுரங்களுக்குள் அமைந்துள்ள நுண்ணிய பொருளை வெளிப்படுத்தினர்.

**உவமம்-உவமை இவற்றிடையே அமைந்துள்ள வேறுபாடு**

உவமம், உவமை ஆகிய சொற்கள் வெவ்வேறு பொருளைத் தருவன. உவமம் என்பது உவமிக்கும் பொருளையும், உவமை என்பது அதன் தன்மையையும் குறிப்பன. அவற்றான் விளக்கம் பெறுவது பொருளாகும். உவமத்தை உபமானம் என்றும், பொருளை உபமேயம் என்றும் கூறுவர் வடநூலார். உவமம் என்பது சொல்லப்படும் பொருளை விளக்கம் செய்யக் காட்டாக வருவது; அதனால் விளக்கம் பெறுவது பொருள். இவ்விரண்டற்கும் உரிய பொதுத்தன்மையே உவமை எனப்படும்.

**உவமையும், உருவகமும்**

உவமைக்கும் உருவகத்திற்கும் இடையே சில வேறுபாடுகள் அமைந்துள்ளன. வாய்ப்பவளம், குழற்கொன்றை, கொங்கைக்குரும்பை என இவை வாயாகிய பவளம், குழலாகிய கொன்றை, கொங்கையாகிய குரும்பை என விரிதலின் உருவகம். வாய்பவளம், குழல் கொன்றை, கொங்கை குரும்பை என்னும் இவை பவளம் போன்ற வாய், கொன்றை போன்ற குழல் குரும்பை போன்ற கொங்கை என வருதலின் உவமை. வதனசந்திரன், கரகமலம் போன்றவை வடமொழிச் சந்தி யாகலின் இடையே ஒற்றுமிகா. இவற்றிற்கு வதனம் போன்ற சந்திரன், கரம் போன்ற கமலம் என விபரீத உவமையாயும், வதன மாகிய சந்திரன், கரமாகிய கமலம் என உருவகமாயும் வரும் இடம் நோக்கிப் பொருள் செய்தல் வேண்டும்.

**'இறைச்சி'**

உள்ளுறை உவமம் கருப்பொருளை விளக்கும் போது இறைச்சி என்று அழைப்பதுண்டு. இவ்வாறு இறைச்சிப் பொருளைக் கூறுதல் தோழிக்கும் செவிலிக்கும் உரித்தாகும், எனினும் தோழிக்குப் பொருந்துமிடங்கள் பொதுவாகத் தலைவன் தலைவி செவிலி ஆகியோரும், கற்பின்கண் வாயில்களும் ஆம்.

செவிலிக்குப் பொருந்துமிடங்கள் தலைவி தோழி நற்றாய் ஆகியோரும், உடன்போக்கின்கண் ஆற்றிடைப் பகவர் முதலா னோரும் ஆம். உள்ளுறை உவமம் கருப்பொருளை அடிப்படை யாகக் கொண்டு வரும்; ஏனை உவமம் முதல், கரு, உரிப்பொருள் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு வரும்.

**பெரியதிருமொழி விளக்கவுரைகளில் காணப்படும் உவமைகள்**

**1) ''அடியற்ற மரம் போல''-(பெரியதிருமொழி-9-3-1)**

**தன்னை நைவிக்கிலேன்; வல் வினையேன்; தொழுதும் எழு-**
**பொன்னை நைவிக்கும் அப்பூஞ் செருந்தி மண நீழல்வாய்**
**என்னை நைவித்து, எழில் கொண்டு அகன்ற பெருமான் இடம்**
**புன்னை முத்தம் பொழில் சூழ்ந்து அழகு ஆய புல்லாணியே!**

''மனமே புறப்படு; கொடிய தீவினையைச் செய்த நான் என்னை அழித்துக் கொள்ளும் ஆற்றல் இலேன், பொன்னின் ஒளியைத் தன் ஒளியாலே குறையச் செய்யும், பரப்பு மாறாமல் பூத்த செருந்தியின் நறுமண நிழலிலே என்னை கலவியால் உருகச் செய்து, என் அழகைக் கவர்ந்து பிரிந்த என் தலைவனுடைய இருப்பிடமாகிய, முத்துப்போன்ற பூக்களை உடைய புன்னை மரங் களின் சோலைகளால் சூழப்பட்டு அழகியதாகிய திருப்புல்லாணி என்ற திருத்தலத்தை சென்றடைந்து வழிபடக்கடவோம்''.

பெரியதிருமொழி 9-2ஆம் திருமொழியில் திருமங்கை யாழ்வார் பரகால நாயகியாகிய நிலையை அடைந்து நாகை அழகியார் வடிவழகிலே ஈடுபட்டுப் பதிகம் பாடினார். அதே பரகால நாயகியாகிய தன்மையில் 9-3, 9-4, 9-5 ஆகிய திருமொழிகளில் திருப்புல்லாணி, திருக்குறுங்குடி ஆகிய திவ்யதேசங்களை மங்களா சாஸனம் செய்தருளினார். திருப்புல்லாணிப் பதிகங்களில் அந்த திவ்யதேசம் அமைந்துள்ள நெய்தல் நிலத்திற்குரிய முதல், கரு, உரிப் பொருள்களின் அடிப்படையில் பாடல்கள் அமைந்துள்ளன. நாலுகவிப் பெருமாளான திருமங்கையாழ்வார் தமிழர்களுடைய அக இலக்கிய மரபுகளுக்கு உட்பட்டு இந்தத் திருப்புல்லாணி பதிகங்களில் அமைந்துள்ள பாடல்களில் அருளிச் செய்துள்ள பாங்கினைக் காணலாம்.

முதல் பொருளான நிலம் இங்கு கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய திருப்புல்லாணி.

நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருளான தெய்வம் வருணன். திருப்புல்லாணியில் வருணனே எம்பெருமான் திருவடிகளில் சரணாகதி செய்தவன். உணவு வகைகள், மர வகைகள், புள்ளின வகைகள், தொழில் வகைகள் ஆகியவற்றைக் குறித்துப் பாசுரங்கள் இட்டு அருளியுள்ளார்.

உரிப்பொருளாகிய பிரிந்தார் இரங்குதல் 9-3, 9-4, ஆகிய இரண்டு பதிகங்களிலுமே அமைந்துள்ளது.

பொன்னை நைவிக்கும் அப்பூஞ்செருந்தி- புன்னை மரம், கார் காலத்தில் புன்னைப் பூக்கள் மலரும். இது நெய்தலுக்குரிய பெரும்பொழுது. பறவைகளைக் காண்பது நண்பகலிலே (எற்பாடு- சிறுபொழுது) கருப்பொருள்.

பொன்னை நைவிக்கும் அப்பூஞ்செருந்தி மணநீழல்வாய் என்னை நைவித்து-''என்னைக் கைப்பிடித்து ஏன் தூக்கி அழைக்கிறாய்? அவனே வந்து உன்னைக் கைப்பிடித்துக் கொண்டு போனால் நாம் போகக் கடவோம்'' என்று நெஞ்சு சொல்ல, ''அந் நிலத்திலே என்னைக் கலந்து பிரிய மனவலிமை உடையவன் திரும்பி வருவானோ நாமேதாம் போகவேண்டும்'' என்கிறாள். 'அந்நிலத்தில் கலந்தவனே வாராவிட்டால் நாம் அவனைக் குறித்து ஏன் செல்ல வேண்டும்?' என்று நெஞ்சு கூற, 'அவன் ஒரு பெண் கொடியைத் துன்புறுத்தினால் நாமும் அவனைத் துன்புறச் செய்யலாமோ? நம்மைப் பிரிந்து வரவும் மாட்டாமல் **அடியற்ற மரம் போலத்** தரையிலே எம்பெருமான் படுத்துக் கிடக்கும் நிலையைப் பாராய். அவன் பழி கொண்டவனைப் போலப் படுத்துக் கிடக்கிறான். அவ்விடத்து இயற்கை அது. அவனைக் குறை கூறாதே!' என்கிறாள். திருப்புல்லாணியில் எம்பெருமான் சயனத் திருக்கோலத்தில் சேவை ஸாதிக்கின்றார். அந்த நிலையை அடியற்ற மரம் போலே படுத்துக் கிடக்கிறான் என்ற உவமையைக் கையாண்டுள்ளார் உரையாசிரியர்.

**2) ''அணைக்கு இப்பாற்பட்ட நீர்போல''.**

பெரியதிருமொழி 5-8-5 பாசுர விளக்கவுரையில் இந்த உவமையைக் கையாண்டுள்ளார் பெரியவாச்சான்பிள்ளை.

திருமங்கையாழ்வார் நாவீறு படைத்தவர். தள்ளத்தக்க ஒன்றை விவரிக்கும்போதும், அதில் ஈடுபாடு கொள்ளும் அளவுக்கு தூண்டுதலை ஏற்படுத்தும் சொற்றொடர்களை அவருடைய கவிதைகளில் காணலாம்.

பெரியதிருமொழி 6-3-4 பாசுர உரையில் பெரியவாச்சான் பிள்ளை கீழ்க்கண்டவாறு திருமங்கையாழ்வாருடைய நாவீற்றைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

''விஷயங்களை விட்டு இவ்வருகே போந்த இவர் வீதரா கர்க்கும் (முற்றும் துறந்தவர்க்கும்) ஸ்ப்ருஹை ***(ஆசை) பிறக்கும்படி சொல்லுவானென்?'' என்று பட்டர்க்கு விண்ணப்பஞ் செய்ய, ''முரிக்குக் கிழக்கு என்னும் போதும் இங்ஙனல்லது இராது காண் திருமங்கையாழ்வார் நாவீறு'' என்றருளிச் செய்தார். (முரி= அணை, அதற்குக் கிழக்கு என்பது-அணைக்கு கீழ்ப்பட்ட நீர் பயனற்றதாய் கழிவடை நீர் என்று கூறப்படும். அப்படிப் பயனற்றவைகளை திருமங்கையாழ்வார் தம் திருவாக்காலே கூறும் போதும் இப்படி வர்ணித்தல்லது கூறாமாட்டார். அது அவருடைய நாவன்மையைக் காட்டுகிறது என்பது கருத்து.)*** கிடாம்பியம்மாள் சிறியாண்டான் பெருமாள் பணித்தானாகப் பலகாலும் சொல்லும், ''நான் சொல்லு கிற வாச்ய வாசகங்களே அன்றோ பட்டரும் வ்யவஹரிக்கிறது என்றிருக்க ஒண்ணாது. அங்குத்தைக்கு ஏற்றமுண்டு. முன்னே நின்ற தூணை நான் தூண் என்றவாறே சிராயாய்த் தோற்றும். (பயனற்ற மரத்துண்டு) அவர் சொன்னவாறே தளிரும் முறியுமாய்த் தோற்றும்'' என்று.

**மாகம்மாநிலம்முழுதும்வந்திறைஞ்சும்**
**மலரடிகண்டமாமறையாளன்**
**தோகைமாமயில் அன்னவரின்பம்**
**துற்றிலாமையில், அத்த! இங்கு ஒழிந்து,**
**போகம் நீயெய்திபின்னும் நம்மிடைக்கே**
**போதுவாய்என்றபொன்னருள்எனக்கும்**
**ஆகவேண்டுமென்று அடியிணையடைந்தேன்**
**அணிபொழில்திருவரங்கத்து அம்மானே!**

(தொடரும்)



இராமானுசரும்
கொள்ள

# இராமானுசரும், மேலாண்மைக் கொள்கைகளும்

*இதழ் 145இன் தொடர்ச்சி: ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.*

இவ்வாறாக பத்து கொத்துகளைச் சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏகாங்கிகள் சாத்தாத முதலிகள் வணிகர்கள், பலவகைப் பட்ட கோயில் வேலையாட்கள் மற்றும் பத்து கொத்தைச்சேர்ந்த சூத்ர பரிஜனங்கள் ஆகியோ ருக்கு அவரவர்களுக்கு ஏற்ப புனித கைங்கர்யங்களை கோயிலில் ஆற்ற வாய்ப்பு உடையவரால் நிலை நிறுத்தப் பட்டது. புனித கைங்கர்யங்கள் வழிபாடு நித்ய பக்ஷ மாத வருட மற்றும் பெரிய உத்ஸவங்கள் பாஞ்சராத்ர ஆகமத்தில் உள்ள பாரமேச்வர ஸம்ஹிதையில் விதிக்கப்பட்ட நெறி முறைகள் தப்பாமல் கொண்டாடப்பட்டு வந்தன.

உடையவரால் வரையறுக்கப்பட்ட இந்த நெறிமுறை கள் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்பற்றப்பட்டு வந்தன. 14ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் நடைபெற்ற முகம்மதியர் படையெடுப்பால் இந்த நடைமுறை மிகப் பெரியதொரு சரிவை எதிர்கொண்டது. கோயிலொழுகில் கோயில் பணியாளர்களின் பல்வேறு பணிகள் உடையவர் காலத்துடன் நின்றுவிடவில்லை. பிற்காலத்திலும் அதன் வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறை முகம்மதியர் படையெடுப்பின் பொழுதும் (துலுக்காவணம்) கோயிலின் அமைதியான செயல்பாடுகள் மாற்றங்களுக்கு உள்ளாயின. விஜயநகர தளபதிகள் காலத்தில் உடையவர் வகுத்த நெறி முறைகள் (உடையவரின் திட்டம்) சீரழிந்தது என்று கோயில்ஒழுகு கூறுகிறது. தளபதிகளும் குறுநில மன்னர்களும் கோயில் நிர்வாகத்தை நேரடியாக ஏற்று தம்முடைய விருப்பப்படி பல்வேறு துறைகளுக்கு அதிகாரி களை நியமித்தனர் என்று கோயில் ஒழுகு கூறுகிறது.

உடையவர் கோயில் பரிஜனங்கள் குழுக்களை பத்தாகப் பெருக்கினார்.

**1. திருப்பதியார்:-** பல்வேறு கோயில்களிலிருந்து வந்த யாத்திரிகர்கள். இவர்களுக்கு பழங்காலத்தில் ஸ்ரீரங்கம் கோயிலுடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. ஆனால், இவர்கள் உடையவரை தங்கள் ஆசார்யனாக ஏற்று, தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். இதில் திருப்பாற் கடல்தாஸர், திருக்குருகைப்பிரான் மற்றும் செல்வ நம்பியைப் போன்ற உள்ளூர் நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோருக்கு பணிகள் பிரித்துத் தரப்பட்டன.

**2. திருப்பணி செய்வார்:-** இதில் கொடவர் மற்றும் திருத்தாழ்வரைதாஸர் ஆகியோரின் தலைமுறையைச் சேர்ந்த ஐந்து நபர்கள் இருந்தார்கள். இவர்கள் பெயர்கள்: திருக் குருகூர்தாஸர், நாலுகவிப்பெருமாள் தாஸர், சடகோப தாஸர், திருக்கலிகன்றிதாஸர், மற்றும் ராமாநுஜதாஸர் ஆகியோர். அவரவர் ஆசார்யர்களின் பெயர்களை ஒட்டி, இவர்கள் இப்பெயர்களைப் பெற்றார்கள். உடையவரால் ஆசி வழங்கப்பட்ட இவர்கள், கோயிலில் தம் பணிகளைச் செய்துவந்தனர்.

**3. பாகவத நம்பிமார்:-** இந்தக் குழு புதிதாக ஏற்படுத்தப்பட்டு இதன் அங்கத்தினர்களுக்கு கோயில் ஆராதனங்களையும் உத்ஸவங்கள் நடைபெறுவதையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு தரப்பட்டது.

4. **உள்ளூரார் அல்லது தோதவத்தித்தூய்மறையோர்:** இவர்களுக்கு கொடுவாள் எடுப்பார் என்ற பெயரும் இருந்தது. இவர்கள் ராமாநுஜருடைய சிஷ்யர்கள். இவர்கள் உள்ளூரார் என்றும் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

**5. விண்ணப்பம் செய்வார்:** கோயிலில் திவ்யப்பிரபந்தத்தை இசையுடன் விண்ணப்பிக்கும் நாதமுனி அரையரும் அவருடைய சிஷ்யர்களும் விண்ணப்பம் செய்வார் என்று அழைக்கப்பட்டு வந்தனர்.

**6. திருகரகக் கையார் (புனித நீர் கொண்டுவருபவர்கள்):** திருவரங்க வள்ளலார் மற்றும் தூயமுனிவேழம் ஆகிய சிஷ்யர்கள்

காவிரி ஆற்றிலிருந்து திருமஞ்சனத்திற்காக புனித நீர் கொண்டு வரும் பணியில் அமர்த்தப்பட்டனர்.

**7. ஸ்தானத்தார்:** ஸேனைநாதப்ரம்மராயர், வீரசுந்தர ப்ரம்மராயர், ஜனந்நாதபிரம்மராயர் ஆகிய தழையிடுவார் என்பவர்கள் சில பணிகளில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் ஸ்தானத்தார் எனப்பட்டனர்.

**8. பட்டாள்கொத்து-** இதில் பெரியநம்பி, திருப்பணி செய்வார் ஆழ்வான், கோவிந்தபெருமாள், ஆச்சான், திருவரங்கத்து அமுதனார், பிள்ளான், சிறியாழ்வான், மற்றும் நடாதூர் அம்மாள் ஆகியோர் இருந்தனர். இவர்கள் கர்பக்கிருஹத்திலும் வெளி மண்டபங்களிலும் ஆராதனைகள் நடைபெறும்போதும் முறையே கீழ்க்கண்ட க்ரந்தங்களை அனுஸந்தானம் செய்து வந்தார்கள். ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம், புராணங்கள், இதிஹாஸங்கள், ஸ்ரீரங்க மாஹாத்மியம், நாலாயிர திவ்யப்பிரபந்தம், பூர்வ உத்தர மீமாம்ஸம், ஆச்வலாயனசூத்திரம் மற்றும் ஸ்ரீபாஷ்யம்.

**9.ஆரியபட்டாள்:** கோயில் காவலாளிகளாக நியமிக்கப்பட் டவர்கள்.

**10. தாஸ நம்பிகள்:** புண்டரீக தாஸர்களும் மற்ற சாத்தாத முதலிகளும் சேர்ந்த இந்தக் குழுவினர் நந்தவனங்களைப் பராமரித்தனர். மேலும் எம்பெருமான் ஊர்வலமாகச் செல் கையில் தீப்பந்தம் பிடித்து வந்தனர்.

இவ்வாறாகக் கோயில் பணியாட்கள் பத்துக் கொத்து களாகப் பிரிக்கப்பட்டு அவர்கள் தகுதிக்குத் ஏற்ப கைங்கர் யங்கள் ஏற்படுத்தி வைக்கப்பட்டன. கோவணவர்களின் தலைவராகவும் ஸேனாபதி துரந்தரராகவும் உடையவர் விளங்கி வந்தார். அத்துடன் அனைத்து ஸ்ரீவைஷ்ணவர் களுக்கும் உடையவரே தலைவராய் எழுந்தருளி யிருந்தார். மூலிகை தைலங்களைத் தயார் செய்யும் கருடவாஹன பண்டிதரின் நிரந்தரமான பணிகளைத் திருப்பதியார் பணிகளுடன் சேர்த்தார். இவர்கள் முதல் ஸ்தானத்தில் வைக்கப்பட்டனர். பரம்பரை காரணமாக, கொடவர்கள் இரண்டாவது ஸ்தானத்தில் இருந்தனர். மூன்றாவது இடத்தில் அவரால் நியமிக்கப்பெற்ற பாகவத நம்பிகள் இருந்தனர். இதைப் போலவே பத்துக் கொத்துகளின் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிறகு கோயிலைச் சேராத நான்கு ப்ரம்ம சாரிகளை ஏகாங்கிகளாக நியமித்து பணியில் அமர்த்தினார். கோயில் சின்னம் பொறிக்கப்பட்ட நான்கு தங்க தண்டங்கள், இரண்டு வெள்ளி தண்டங்கள், மற்றும் மேலே சிறிது வளைக்கப்பட்ட இரண்டு மூங்கில் தண்டங்கள், இவற்றை எடுத்துச் செல்ல எட்டு ஸ்ரீவைஷ்ணவ துறவிகள் நியமிக்கப் பட்டனர். வெளியூர்களைச் சேர்ந்த சாத்தாத முதலிகளுக்கு சில நிரந்தரமான பணிகள் தரப்பட்டன. ப்ராமணர் அல்லாத பணியாளர்களும் பத்துக் கொத்துகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களின் பணியும் நிரந்தரமாக்கப் பட்டது. உடையவர் இவ்வாறு கோயில் நிர்வாகத்தை மேற்பார்வை செய்து, திருவரங்கத்தின் பெருமையை எங்கும் ஒளிவீசச் செய்தார்.

**திருமலையில் இராமானுசர் மேற்கொண்ட நிர்வாகச் சீர்திருத் தங்கள்.**

ஸ்ரீராமானுஜர் திருப்பதியில் ஆற்றிய தொண்டுகளை அனந்தார்யா என்னும் அனந்தாழ்வான் வேங்கடாசல இதி ஹாஸ மாலா என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீராமானுஜரின் தாய் மாமனான திருமலைநம்பி அவர்கள், தன் மணமாகாத இரு தங்கை யருடன், தன் ஆசிரியருமான ஆளவந்தாரின் விருப்பப்படி, இறைப் பணி செய்வதற்குத் திருமலையிலேயே தங்கிவிட்டார். ஸ்ரீராமா நுஜருக்கு திருமலையுடனான தொடர்பு, தாய்மாமனான திருமலை நம்பியுடன் தொடங்குகிறது.

திருமலை நம்பிகளுடன் திருப்பதியிலேயே ஒரு வருடம் இருந்து, இராமாயணத்தை முழுமையாகக் கற்று ஸ்ரீரங்கம் திரும்பினார் இராமானுசர். இரண்டாவதாக, ராமானுஜர் திருமலை சென்றது, பல ஆண்டுகள் கழிந்த பின்னரே. திருமலையில் முதன்முதலில் வழிபாட்டு முறைகள் யாவும் வைகானஸ முறைப் படி நடை பெற்று வந்தன. ஆனால், சில நூற்றாண்டு களுக்குப்பின், வழிபாடுகள் சரிவர நடைபெறாமலிருந்தன. ராமானுஜர், 'வேங்க டேச இதிஹாஸ மாலா'வில் குறிப்பிட்டுள்ளபடி வழிபாட்டு முறை களிலும், திருவிழாக்களிலும் மாற்றங்களைக் கொணர்ந்தார். அச்சமயத்தில் திருமலை நம்பியும், இறைப்பணிக்கென்றே அவரால் பயிற்சி அளிக்கப்பட்டவரான அனந்தாழ்வானும் இருந்தனர்.

(தொடரும்)

# ஏகாயன வேதம்

*இதழ் 136இன் தொடர்ச்சி: ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.*

**முனைவர் ப்ரபாகர ஆப்தேயின் ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்**

ப்ரதிஷ்டை மற்றும் அதைச் சார்ந்த சடங்குகளை மேற்கொள்வதற்கு இந்த இரண்டு (பௌஷ்கர, சாத்வத ஸம்ஹிதைகள்) ஸம்ஹிதைகளிலும் வேத மந்திரங்கள் மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளன. மற்றைய க்ரியைகளை மேற்கொள்வதற்கு ஆகமம், அல்லது தாந்திரீகம் சார்ந்த மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

ஜயாக்ய ஸம்ஹிதையில் ஏகாயன வேதத்தைப் பயின்றோர் எவ்வாறு அமர்ந்து அவற்றை ஓதவேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஸ்ரீவைஷ்ணவர்கள் நான்கு திக்குகளிலும் அமர்ந்திருக்க அவர்களுக்குப் பின்னால் ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைஸ்யர்கள் மற்றும் நான்காம் வர்ணத்தவர் அமர்ந்திருக்க ஏகாயன வேதத்தை அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஓதவேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளை ஆராய்வதன் மூலம் கீழ்க்கண்ட குறிப்புகள் பெறப்படுகின்றன.

1) பாஞ்சராத்ர ஆகமத்தில் ப்ரதிஷ்டை, ஸ்நபனம், மற்றும் புண்யாஹவாசனம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு வேத மந்திரங்கள் உபயோகத்தில் கொள்ளப்பட்டன.

2) அதர்வண வேதத்திற்கு அடுத்தநிலையில் ஏகாயன வேதம் கொள்ளப்பட்டு வந்தது.

3) அந்தணர்களில் ஒவ்வொரு வேதத்தைப் பயில்வதற்கு ஒரு சிலர் உரிமை உடைத்தவராக இருப்பதுபோல ஏகாயன வேதம் பயில்வதற்கும் சமூகத்தில் ஒரு சிலரே உரியவராகக் கொள்ளப் பட்டனர்.

4) ஜயாக்ய ஸம்ஹிதையின்படி ஒரு கால கட்டத்தில் அனைத்து அந்தணர்களும் ஏகாயன வேதத்தைப் பயிலலாம், அவற்றைப் பொதுவிடங்களில் ஓதலாம் என்ற நிலைமை ஏற்பட்டது.

5) ரிக்வேதத்தில் பல்வேறு தேவதைகளைப் போற்றும் மந்திரங்கள் அமைந்துள்ள போதிலும் விஷ்ணுவுக்குரிய மந்திரங் களே அந்த வேதத்திலிருந்து ஓதப்பட்டன.

6) ஈச்வர, பாரமேச்வர மற்றும் பாத்ம ஸம்ஹிதைகள் கோயில் நிர்மாணம் மற்றும் ப்ரதிஷ்டை, பற்றிய க்ரியைகளுக்கான மந்திரங்கள் பெருமளவில் ஏகாயன வேதத்திலிருந்தும் சிறு அளவில் மற்றைய வேதங்களிலிருந்தும் எடுத்தாளப்பட்டுள்ளன.

7) ஈச்வர, பாரமேச்வர பாத்ம ஸம்ஹிதைகளில் காணப் படும் குறிப்புகளின்படி திருக்கோயில் ஆகமாசார்யர்களாக ஏகாயன வேதம் அறிந்தோர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்கள் பணிபுரிந்து வந்தனர் என்பதும் பெறப்படுகிறது.

8) ஈச்வர ஸம்ஹிதையில் (18.240-42) ஏகாயன வேதம் ஓதப்படும்போது நான்கு திக்குகளில் ஏகாயன வேதமறிந்த ப்ராஹ் மணர்கள் வாசுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என அழைக்கப்பட்டு வந்தனர். அதற்குரிய இடங்களும் அந்த ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளன. இந்தக் குறிப்பின்படி ஏகாயன வேதம் அறிந்தோரைத் தவிர மற்றையோர் திருக்கோயில் கைங்கர் யங்களில் இரண்டாம் நிலையில் கொள்ளப்பட்டனர் என்பது தெளி வாகிறது.

9) பாத்ம ஸம்ஹிதையில் (IV, 1.5.) காணும் குறிப்பின்படி ஏகாயன வேதம் அறிந்தோர் திருக்கோயில் ஆகமப் பணிகளில் முதன்மை இடத்தைப் பெற்றிருந்தனர் என்று அறியப்படுகிறது. பாரமேச்வர ஸம்ஹிதையில் (15.7) காணும் குறிப்புகளின்படி திருக் கோயில் ப்ரதிஷ்டை ஏகாயன வேத மந்திரங்களோடு மற்றைய வேத மந்திரங்களைக் கொண்டு மேற்கொள்ளப்படவேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

10) ஈச்வர ஸம்ஹிதையை அடுத்து திருவரங்கத்திற்கே

உரித்தான பாரமேச்வர ஸம்ஹிதை ஏகாயன வேதத்திற்கு உயர்ந்த தோர் நிலையினை அளித்துக் கொண்டாடுகிறது. இந்த ஸம்ஹிதையின் அறிமுகப் பகுதியில் ஏகாயன வேதத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பாரமேச்வர ஸம்ஹிதையில் (1.21-32) காணும் குறிப்பின்படி சனக முனிவர் சாண்டியல்யரை அணுகி அவரிடம் இறைவன் இட்ட ஆணைப்படி ஏகாயன வேதத்தை அவருக்கு போதிக்க வந்துள்ளதாகக் கூறினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரமேச்வர ஸம்ஹிதையில் ரஹஸ்யாம்நாயா மற்றும் சாத்வத விதி போன்ற சொற்கள் காணப்படுகின்றன. ஈச்வர ஸம்ஹிதை மற்றும் பாரமேச்வர ஸம்ஹிதை ஆகியவற்றின்படி ஏகாயன மூல வேதம், சாத்வதம், பாகவதம், ரஹஸ்யாம்நாயா ஆகியவை ஏகாயன வேதத்தைக் குறிக்கும் பல சொற்களாகும். இராமானுசர் திருவரங்கம் பெரியகோயிலில் கைங்கர்யங் களைப் பல கொத்துக்களாகப் பிரித்தார். அவற்றில் பாஞ்சராத்ர வேதமறிந்த அர்ச்சகர்களுக்கு 'பாகவத நம்பிமார் கொத்து' என்று பெயரிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது ஏகாயன வேதம் அறிந்தோர் என்பது இதன் பொருளாகும்.

பாரமேச்வர ஸம்ஹிதை மற்றும் ஈச்வர ஸம்ஹிதை ஆகிய வற்றின்படி ஏகாயன வேதமானது பகவான் ஸ்ரீமந்நாராயணனால் க்ருத யுகத்தில் வெளியிடப்பட்டது என்றும், அந்த யுகத்திற்கு பிற்பட்ட யுகங்களில் அந்த வேதம் மறைந்து மீண்டும் வெளிப் பட்டது என்றும் கடைசியில் சாத்வதர்கள் அந்த வேதத்தைப் பேணிப் பாதுகாத்தார்கள் என்றும் அறியப்படுகிறது. ஆகவே ஏகாயன வேதத்திற்கு சாத்வம் என்ற பெயரும் நிலைபெற்றது. ஏகாயன வேதத்தைப் பற்றிய இந்தக் குறிப்புகள் மஹா பாரதம் மோக்ஷதர்ம பர்வம் ஏகாந்தி தர்மத்தில் காணப்படும் குறிப்பு களோடு ஒத்துப் போகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. சாண் டில்யர் மற்றைய வேதங்களைப் பயின்று அவற்றில் பல மந்திரங்கள் பல்வேறு தேவதைகளை ஆராதிக்கும் நிலையைக் கண்டு உள்ளத்தில் கலக்கம் கொண்டு நிற்க, அப்போது அவருக்கு ஏகாயன வேதம் உபதேசிக்கப்பட்டது. வாசுதேவனை அவனுக்கே உரிய மந்திரங்களைக் கொண்டு ஆராதிக்க வேண்டும் என்ற அந்த ரிஷியின் அவா இதனால் முழுமையுற்றது. பாரமேச்வர ஸம்ஹி

தையில் ஏகாயன வேதத்தைப் பற்றிய பல குறிப்புகளில் ஒன்று நாரதரும் மற்றைய ரிஷிகளும் ஏகாயன வேதத்தைப் பயின்றனர் என்பதாகும். ஸ்வேத தீபத்தில் ஏகாயன வேதத்தை முறையாகக் கற்ற முதல் மானிடர் நாரதராவார். அவரிடமிருந்து சனர், சனத், சுஜாதா, சனந்தனர், (சனகர்) சனத்குமாரர், கபிலர், சனாதனர் ஆகியோர் கற்றனர். அவர்கள் அந்த ஏகாயன வேதத்தை மரீசி, அத்ரி, ஆங்கிரஸ, புலஸ்திய, புலாக, க்ரது, வசிஷ்ட, மனு ஆகியோருக்குக் கற்பித்தனர். அவர்கள் மூலவேதத்தின் பல கூறுகளை உள்ளடக்கிய சாத்வத, பௌஷ்கர, ஜயாக்ய ஸம்ஹிதைகளை உருவாக்கினர். பாரமேச்வர ஸம்ஹிதை, தர்ம சாஸ்திரங்கள், தாந்திரீக சாஸ்திரம் மற்றைய சாஸ்திரங்கள் ஆகியவை ஏகாயன வேதத்திலிருந்து தோன்றியவை என்று குறிப்பிடுகிறது.

ஏகாயன வேதம் வாழ்க்கையின் மூன்று புருஷார்த்தங்களாகிய தர்மம், அர்த்தம், காமம் ஆகியவற்றை விவரிக்க வந்த வேதமாகும்.மேலும் நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை உபதேசிப்பதும் ஏகாயன வேதமேயாகும் என்று பாரமேச்வர ஸம்ஹிதை இந்த வேதத்தைப் புகழ்கின்றது (1.66.) ஏகாயன வேதத்தில் அச்வமேத யாகம் போன்ற யாகங்களின் விவரங்கள் கூறப்பட்டுள்ளன. இவையனைத்தும் அச்சுதனுக்கு அர்ப்பணிக்கப் படவேண்டியவை என்றும் அந்த வேதம் கூறுகிறது. பனிரெண்டு அக்ஷரங்களைக் கொண்ட (த்வாசதாக்ஷரி) மந்திரத்தைக் கொண்டு ஸ்ரீமந்நாராயணனின் ஆராதனத்தை மேற்கொள்ள வேண்டும் என்று ஏகாயன வேதம் குறிப்பிடுகிறது. முன்பே குறிப்பிட்டுள்ளபடி வேறு சில க்ரியைகளை மேற்கொள்வதற்கு மற்றைய வேதங்களிலிருந்து மந்திரங்கள் கைக்கொள்ளப்பட்டன.

### ‘ஏகாயன’ என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

பாரமேச்வர ஸம்ஹிதையில் (1.57) காணப்படும் குறிப்பின்படி மோக்ஷத்தை அடைவதற்கு வாசுதேவனை ஆராதிப்பதைத் தவிர வேறு ஒரு பாதையில்லை. அயனம் என்ற சொல் பாதை அல்லது மார்க்கத்தைக் குறிக்கும். இந்த வேதம் ஒன்றே மோக்ஷத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை வெளிப்படுத்தும் சொல்லாக ஏக அயனம் (ஒரே பாதை-அல்லது மார்க்கம்) என்ற சொற்களே ஏகாயனம் என்ற சொல்லாக ஆயிற்று. (தொடரும்)

# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்தகாலச் சுவடுகள்

*இதழ் 145இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.*

## அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிமுறை

பஞ்ச காலங்களில் உணவுப் பங்கீட்டு முறை அமுல் படுத்தப்பட்டது. (தற்போதைய பொது விநியோக முறையை அமுல்படுத்திய முதல் மன்னன் அலாவுதீன் கில்ஜியாவான்.) மக்கள் உடுத்தும் ஆடைகளின் விலை அரசாங்கத்தால் நிர்ண யிக்கப் பட்டது. டெல்லியில் இயங்கி வந்த அனைத்து விற்பனைக் கூடங்களும் 'மாலிக் யாகூப்' என்ற மேலதிகாரியின் கட்டுப்பாட் டிற்குள் கொண்டு வரப்பட்டது. அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் தான் Amir Khusrau and Amir Hasan போன்ற புகழ் பெற்ற புலவர்கள் டெல்லியில் முகாமிட்டிருந்தனர். கட்டடக் கலையில் நுணுக்கங்களை நன்கு அறிந்தவன் அலாவுதீன் கில்ஜி. இவன் ஆட்சி காலத்தில் பூரண மதுவிலக்கு அமுல் படுத்தப்பட்டது. டெல்லி மாநகரத்திலிருந்து சூதாட்டத்தில் ஈடுபட்டுவந்த குடி காரர்களும், மதுவிற்பனை செய்பவர்களும் அடித்து விரட்டப் பட்டனர். ஆயினும் வெளியிடங்களில் இருந்து மதுவகைகள் டெல்லிக்குள் கடத்திக் கொண்டு வரப்பட்டன. அதன் விளைவாக ஒயின் மட்டும் சில குறிப்பிட்ட இடங்களில் அருந்தலாம் என்று தனது ஆணையைத் தளர்த்தினான் அலாவுதீன் கில்ஜி. அவன் ஆட்சி காலத்தில் விபசாரம் ஒழிக்கப்பட்டது.

## முகம்மது பின் துக்ளக்

அலாவுதீன் கில்ஜியின் இறப்பிற்குப் பிறகு படைத் தளபதியான மாலிக்காஃபூர் அவனுடைய மூத்த மகனுக்குப் பட்டம் சூட்டாது இளைய மகனான ஆறே வயது நிரம்பிய Shihab-ud-din Umar என்பானை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தினான். அலாவுதீன் கில்ஜிக்குப் பின் ஆட்சி செய்தவர்கள் அலாவுதீன் கில்ஜியின் பல

திட்டங்களை மாற்றியமைத்தனர். நாட்டில் எங்கும் பஞ்சமும் அடக்குமுறையும், லஞ்சமும் நிறைந்து காணப்பட்டது.இதன் விளைவாக நடந்த புரட்சியில் Ghiyas-ud-din Tughluq (1320-25) துக்ளக் வம்சாவளியை ஏற்படுத்தினான். இந்த வம்சத்தில் வந்த பல மன்னர்கள் கட்டடக்கலையில் ஈடுபட்டவர்களாய் விளங்கி வந்தனர். இவர்கள் காலத்தில்தான் பழைய டெல்லியின் கிழக்கே 8 கிலோமீட்டர் தொலைவில் 'துக்ளாகாபாத்' என்னும் கோட்டை உருவாக்கப்பட்டது. Ghiyas-ud-din Tughluq அவன் மகனாகிய Junakhan என்பவனால் கொல்லப்பட்டான். Junakhan என்பவனே உலூக்கான் என்றும் முகம்மது பின் துக்ளக் என்றும் அழைக்கப் படுபவன். ***(கி.பி. 1323ஆம் ஆண்டு இவன் தெற்கே படையெடுத்து திருவரங்கம், சிதம்பரம், மதுரை போன்ற கோயில் நகரங்களைப் பாழ்படுத்தியதோடு மட்டுமல்லாமல் பல ஹிந்துக் கடவுளர் சிலைகளை உடைத்தான். பொருட்களைக் கொள்ளையடித்தான். கட்டாய மதமாற்றம் செய்தான்.)***

**டெல்லியிலிருந்து தலைநகரம் மாற்றப்பட்டது**

இவன் காலத்தில் டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்குத் தலைநகரம் மாற்றப்பட்டது. இவன் மக்களுக்கு சொல்லொணாத் துன்பங்களைத் தந்தான். இவனுடைய மரணத்திற்குப் பிறகு Firoz Tughlaq (1351-88) டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தான். இவனுடைய மறைவிற்குப் பிறகு துக்ளக் வம்சா வளி அழிவுற்றது. அதன் பிறகு The Sayyid Dynasty, The Lodi Dynasty வம்சத்தைச் சார்ந்த மன்னர்கள் டெல்லியைத் தலைநகர மாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தனர். Lodi வம்ச மன்னனான சிக்கந்தர் (1489-1517) தலைநகரை டெல்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றினான். ஆக்ராவிற்கு அண்மையில் Sikandrabad என்ற புதிய நகரை நிர்மாணித்தான். சிக்கந்தருக்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்த இப்ராஹிம் (1517-26) பல கட்டுப்பாடுகளை விதித்திட பிரபுக்கள் கிளர்ச்சி செய்தனர். அதனால் புரட்சி வெடித்தது.

**மொகலாயப் பேரரசினை நிறுவிய பாபர்**

இப்ராஹிம்மின் படைகளை தைமூர் வம்சத்தவனான Zahir-ud-din Muhammad Babur என்பான் பானிபட்டில் 1526ஆம்

ஆண்டு நடந்த போரில் வெற்றி கொண்டான். இதுவே முதலாம் பானிபட் யுத்தம் என்று வரலாற்று நூல்களில் குறிப்பிடப்படுகிறது. 24-4-1526ஆம் நாள் முகலாய வம்சத்தைத் தோற்றுவித்த Zahir-ud-din Muhammad Babur என்பான் டெல்லியை வந்தடைந்தான்.

பாபர் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை ஆக்ரா நகரிலேயே கழித்து வந்தார். கி.பி.1530ஆம் ஆண்டு பாபர் இறந்தார். ***(பாபர் மசூதி, ராம ஜன்மபூமி என்னும் இரண்டு பூதங்கள் அவ்வப்போது தோன்றிக் கொண்டேயிருக்கும். இதில் அரசியல் ஆதாயம் தேடுவோரே மிகுந்த அளவில் காணப்படுகின்றனர். கோடிக்கணக்கான ரூபாய்கள் விரையமாக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிற்கு ஓர் தலைவலி பாபரால் தோற்றுவிக்கப்பட்டது. பாபர், ஹுமாயூன், ஷாஜகான், அக்பர், ஔரங்கசீப் ஆகியோரைப் பற்றிய செய்திகள் நம் பாடப் புத்தகங்களில் மிகுந்து காணப்படுகின்றன. ஆனால் தென்னிந்தியாவில் மாபெரும் மறுமலர்ச்சியை, பண்பாட்டைத் தோற்றுவித்த விஜயநகர மன்னர்களான வீரகம்பண்ணர், சாளுவ நரசிம்மன், கிருஷ்ண தேவராயர், அச்சுத தேவராயர், தனிக்கோட்டைப் போர், நாயக்க மன்னர்கள் வரலாறு, மராட்டிய மன்னர்கள் வரலாறு போன்றவை நம் பாடப்புத்தகங்களில் இடம் பெறுவதில்லை. இதற்குக் காரணம் 1967ஆம் ஆண்டு தொடங்கி தமிழ்நாட்டின் தலைவிதியை நிர்ணயித்து வரும் திராவிட இயக்கங்களே. கம்யூனிஸ்ட் இயக்கங்கள் இத்தகைய பாடங்களை ஹிந்து தீவிர வெறியர்கள் உட்புகுத்தப் பார்க்கிறார்கள் என்று ஓலமிட்டு வருகின்றனர். திராவிட இயக்கங்கள் இது ஆரியர்கள் சூழ்ச்சி என்ற போலி வாதங்களை முன்வைத்து பாடத்திட்டத்திலிருந்து பல பகுதிகளை நீக்கிவிட்டனர். 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பது போலப் பள்ளிப் பாடப் புத்தகங்களில் புகுத்தப்பட்ட கலைஞர், அவர் மகள் கனிமொழி கவிதைகள் தற்போது நீக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே உண்மையான வரலாற்றை, நாட்டுக்கு உகந்த வரலாற்றைத் தெரிவிக்கும் பாடப் புத்தகங்கள் எதிர்காலங்களில் அச்சிடப்படவேண்டும்.)***

### ஹுமாயூனின் வீழ்ச்சியும், எழுச்சியும்

கி.பி. 1530ஆம் ஆண்டு பாபர் இறந்தபின்பு ஹுமாயூன் அரசுக் கட்டிலில் அமர்ந்தான். அவன் ஆக்ரா, டெல்லி ஆகிய இரு தலைநகரங்களில் உள்ள கோட்டைகளில் வசிக்காது தற்போது

டெல்லியில் ‘Purana Quila’ என்றழைக்கப்படும் இந்திரபிரஸ்தம் இருந்த பகுதியில் புதிதாக ஒருகோட்டையை நிர்மாணித்தான். அவனுக்கும் ஆப்கானிஸ்தானை ஆண்டு வந்த ஷேர்ஷாவிற்கும் போர் மூண்டது. போரில் வெற்றி பெற்ற ஷேர்ஷா பல புதிய கோட்டைகளை நிர்மாணித்ததோடு நிர்வாகச் சீர்திருத்தங்கள் பலவற்றை மேற்கொண்டான். அவனுக்குப் பின் அரசாண்ட அடில்ஷா காலத்தில் ஷேர்ஷா வம்சாவளி வீழ்ச்சியடைந்தது. டெல்லியைக் கடுமையான பஞ்சம் தாக்கியது. மீண்டும் ஹுமாயூன் போரிட்டு முகலாய வம்சத்தை நிலைநாட்டினான். கி.பி. 1556ஆம் ஆண்டு அக்பர் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். அக்பரின் படைகளுக்கும், ஹேமு என்ற இந்து மன்னனுக்கும் பானிபட்டில் 1556ஆம் ஆண்டு போர் நிகழ்ந்தது.



**‘Purana Quila’ கோட்டை**

இந்தப் போரில் அக்பர் வெற்றி பெற்றார். அக்பரின் ஆட்சி காலத்தில் (1556-1605) முகலாய சாம்ராஜ்யம் வடக்கில் ஹிமாலயம் தொடங்கி தெற்கில் நர்மதா நதிவரையிலும், மேற்கில் ஹிந்து குஷ் தொடங்கி கிழக்கில் பிரம்மபுத்திரா வரையிலும் சாம்ராஜ்யம் விரிந்து பரந்திருந்தது. அக்பர் டெல்லியிலிருந்து ஆட்சி செய்யவில்லை. அக்பருக்குப்பிறகு மொகலாய மன்னனாக முடிசூடியவன் ஜஹாங்கீர் (1605-1627). அவனுடைய வாழ்நாளில் பெரும்பாலான

நாட்கள் லாகூரிலேயே தங்கியிருந்தான். அங்கேதான் அவனுடைய சமாதி அமைந்துள்ளது.

**ஔரங்கசீப்பின் ஆட்சியும் நாதிர் ஷாவின் படையெடுப்பும்**

ப்ளேக் நோயினால் டெல்லி மாநகரத்து மக்கள் எட்டு ஆண்டுகளுக்கு துன்பத்தை அடைந்தனர். (கி.பி. 1616-1624) அக்பருக்குப்பிறகு ஆண்ட ஷாஜகான் (1628-1657) ஆட்சி காலத்தில் தான் டெல்லி அதற்குரிய முக்கியத்துவத்தைப் பெற்றது. ஷாஜகான் காலத்தில் தான் இந்தியாவிலேயே மிகப் பெரிய மசூதியான ஜம்மா மசூதி கட்டப் பெற்றது. வரலாற்றில் இடம் பெற்றுள்ள Peacock Throne எனப்படும் சிம்மாசனத்தில் அமர்ந்து டெல்லியில் முடிசூட்டிக் கொண்டான் ஷாஜகான். ஷாஜகானுக்குப் பின்பு அரியணையில் அமர்ந்தவன் ஔரங்கசீப். ஔரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் முகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது. ஔரங்கசீப்பின் மகன்களுக்கு இடையே எழுந்த போராட்டத்தால் சாம்ராஜ்யம் சிதைவுற்றது. டெல்லியும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்நாட்டுக் கலவரம் வெடித்தது. இந்தக் குழப்ப நிலையை தனக்கு சாதகமாக ஆக்கிக் கொண்ட Persia நாட்டு மன்னனான நாதிர் ஷா டெல்லியைக் கைப்பற்றினான். மீண்டும் டெல்லியில் கலவரங்கள் ஆங்காங்கே நிகழ்ந்தன. 1753ஆம் ஆண்டு மார்ச் 17 தொடங்கி நவம்பர் மாதம் இறுதியாக உள்நாட்டுப் போர் நிகழ்ந்தது டெல்லியில். ஜாட் இன மக்கள் இந்த உள் நாட்டுப்போரைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். நாதிர்ஷா வம்சத்து மன்னனான சப்தர்ஜங் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டான். பல ஆண்டுகள் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின் விளைவாக டெல்லி மாநகரை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள மராத்திய, ரோஹில்ல, அப்தாலி வம்சத்து குறுநில மன்னர்கள் முயன்றனர்.

கி.பி. 1757ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் நாள் கடுமையான பூகம்பம் டெல்லியைத் தாக்கியது. மராத்தியப் படைகளை அஹமத் ஷா அப்தாலி பானிபட்டில் நடந்த மூன்றாம் பானிபட் யுத்தத்தில் (14-1-1761) வீழ்ச்சியுறச் செய்தான். இதன் விளைவாக ஷா ஆலம் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். 22-10-1764ஆம் நாள் ஷா ஆலம், மிர்காசிம், நவாப் ஆப் அயோத்தி ஆகிய மூவரும் பிரிட்டிஷ் படைகளுடன் நடந்த பாக்ஸார் போரில் தோல்வியைத் தழுவினர்.

அப்போது ஷாஆலம் பிரிட்டிஷாருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி பீகார், ஒரிஸ்ஸா, மற்றும் வங்காளத்தின் சில பகுதிகள் கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தாரை வார்க்கப்பட்டன. இதற்கு கைமாறாக டெல்லியின் ஆட்சிப் பொறுப்பு ஷா ஆலம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. 1772ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் நாள் டெல்லிக்குள் பிரவேசித்தான் ஷாஆலம். ரம்ஜான் கொண்டாட் டங்களின் இறுதிநாளாகும் அந்த நாள். அதன்பிறகு 11ஆண்டு களுக்கு கழிந்து டெல்லிமீது போர் தொடுத்தனர் மராத்தியப்படை வீரர்கள்.

**கிழக்கிந்தியக் கம்பெனியாரின் பிரித்தாளும் சூழ்ச்சி**

1798ஆம் ஆண்டு Lord Wellesley இந்தியாவின் கவர்ன ஜனரலாகப் பதவியில் அமர்ந்தார். நாட்டில் வேகமாகப் பரவிக் கொண்டிருந்த ப்ரெஞ்ச் நாட்டின் ஆதிக்கத்தை ஒரு கட்டுக்குள் கொண்டுவர எண்ணங்கொண்டார் Lord Wellesley. மராத்தியர் களுக்கும் ஷா ஆலத்திற்கும் நிகழ்ந்த போரில் அவனுக்கு உதவு வதற்காக பிரிட்டிஷ் படைகள் டெல்லிக்குள் நுழைந்தன. 1803ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின்கீழ் டெல்லி மாநகரம் கொண்டு வரப்பட்டது. பல போராட்டங்களுக்குப் பிறகு 1947ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்றபோது டெல்லி மாநகரம் இந்தியாவின் தலைநகரமாகக் கொள்ளப்பட்டது.

மிகப்பெரிய வரலாற்று நிகழ்வுகளுக்கு நிகழ்விடமாக அமைந்திருந்தது டெல்லி. இன்றும் இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பது டெல்லியே. பாண்டவர்கள் காலம் தொடங்கி 20ஆம் நூற்றாண்டின் இறுதிவரை அந்த மாநகரத்தின் வரலாற்றை புத்தகங்கள் மூலம் நான் அறிந்து கொண்டேன். டெல்லியில் எங்கு பார்த்தாலும் மசூதிகளே காணப்படும். 5000 ஆண்டு வரலாற்றை வெளிப்படுத்தும் சில சின்னங்கள் இன்று முழுமையாகவும், பல பாழ்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

**தாஜ்மஹாலைச் சுற்றிப் பார்த்தேன்.**

டெல்லியில் ஒரு வாரகாலம் நான் தங்கியிருந்தேன். தங்கி யிருந்த அந்த வாரத்தின் சனிக்கிழமையன்று தாஜ் எக்ஸ்பிரஸ்ஸில் பயணம் செய்து ஆக்ரா சென்று அக்பர் கோட்டை, தாஜ்மகால்

ஆகியவற்றைக் கண்டுகளித்தேன். டெல்லியைச் சுற்றிப் பார்ப் பதற்கு டிராவல்ஸ் மூலம் ஏற்பாடு செய்திருந்தான் பஞ்சாபகேசன்.

**நான் வாங்கிய முதல் டெரிலின் சட்டை**

டெல்லியில் சூப்பர் பஜார்கள் அப்போதுதான் ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்தன. 1968ஆம் ஆண்டு வரை நான் காட்டன் ஷர்ட் பேன்ட்களையே அணிந்து வந்தேன். சந்தையில் அப்போதுதான் டெர்லின் எனப்படும் செயற்கை இழைநூல்களால் ஆன ஆடைகள் விற்பனைக்கு வரத் தொடங்கியன. பஞ்சினால் நெய்யப்பட்ட ஆடைகளை சலவை செய்து இஸ்திரி செய்தால்தான் அணிந்து கொள்ளமுடியும். ஒருநாள் இஸ்திரி செய்த சட்டையை அடுத்த நாள் அணிந்து கொள்ள முடியாது. அந்த நிலைமையை மாற்றியது Terylene ஆடைகள். ஆடைகளில் உபயோகப்படுத்தப்படும்போது டெர்லின் என்றும் நீர் மற்றும் பானங்களை நிரப்பி விற்பனை செய்யப்படும்போது அவற்றிற்கு PET என்றும் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் Poly Ethylene Terephthalate என்பதே PET என்று வழங்கப்படுகிறது. இவை வேதியியலின்படி 'பாலிமர் செயின்ஸ்'களாகும். Terylene ஆடைகளுக்கு பாலி யெஸ்டர் ஆடைகள் என்ற பெயரும் வழங்கி வருகிறது. இந்த ஆடைகள் பளபளப்புடன் காணப்படும். இந்த ஆடைகளை அணிவதால் தோற்றம் சிறந்து விளங்கும். நம் வாழ்க்கையை உள்ளும் புறமும் வேதியியல் கொள்கைகளே நடத்திச் செல்கின்றன. எந்த மருந்தானாலும் அலோபதி அல்லது ஆயுர்வேதம் வேதியியல் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் தயாரிக்கப்படுகின்றன. இன்று பெரும்பாலானோர் பாலியெஸ்டர் ஆடைகளையே அணிகின்றனர். இந்த மாபெரும் புரட்சி வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளன. 1968ஆம் ஆண்டுதான் டெல்லி போன்ற மாநகரங்களில் பாலியெஸ்டர் ஆடைகள் இந்தியாவில் விற்பனைக்கு வந்தன.

**செகந்திராபாத் நடராஜ் தியேட்டர்**

பயிற்சி முடிந்தபிறகு செகந்திராபாத்திற்குத் திரும்பினேன். ஒருவருடைய இல்லத்தில் மனைவி மக்கள் அவருடன் இல்லை யென்றால் சிறிது காலப் பிரிவு நேரிட்டால் பொழுதைப் போக்குவது

கடினமான செயலாகும். 'ஏன் தாமதமாக வீட்டிற்கு வந்தீர்கள்' என்று கேட்பதற்கு வீட்டில் யாரும் இருக்கமாட்டார்கள். பசித்தால் புகலிடம் தாஜ்மகால் ஹோட்டலே. குறிப்பாக விடுமுறை நாட்களில் செகந்திராபாத் மாநகரில் அமைந்திருந்த புகலிடம் திரையரங்குகளே. செகந்திராபாத்தில் மகாத்மாகாந்தி ரோடு எனப்பெயர் கொண்ட சாலையில் அமைந்துள்ளது நடராஜ் தியேட்டர். விசாகப்பட்டினத்தில் அமைந்துள்ள லீலாமஹால் போலே நடராஜ் தியேட்டர். இங்கு சனி ஞாயிறு ஆகிய நாட் களில் காலை 11மணிக்கு தமிழ்த்திரைப்படங்கள் திரையிடப்படும். செகந்திராபாத் நகரில் வாழும் அனைத்து இனத்தைச் சார்ந்த தமிழ் மக்களையும் குடும்பத்தோடு அங்கு அன்று காணலாம்.

## DeathTakes A Holiday-திரைப்படம்

அங்கு மாலை மற்றும் இரவு நேரங்களில் ஆங்கிலத் திரைப் படங்கள் திரையிடப்படும். நகரில் அமைந்துள்ள 70 mm தியேட்டர்களில் இதுவும் ஒன்று. நெஞ்சை விட்டு அகலா திரைப் படங்களைப் பற்றி இந்தத் தொடரில் நான் குறிப்பிட்டுள்ளேன். அத்தகையதொரு திரைப்படமே நான் 68 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நான் பார்த்து ரசித்த Death Takes A Hoilday என்ற திரைப்படம்.

முதலாம் உலகப்போர் 1914ஆம் ஆண்டு முதல் 1918ஆம் ஆண்டு வரை நடந்தது. அந்தப்போரில் எண்ணற்ற போர் வீரர்கள் செத்து மடிவதைத் தன் கண்களால் பார்க்கிறான் ஒரு இத்தாலிய இராணுவ வீரன். மனிதர்களுக்கு ஏன் இந்த கொடூர தண்டனையைக் கொடுக்க வேண்டும் என சிந்தித்துப் பார்க்கிறான். அவனுக்கு ஒரு விசித்திரமான ஆசை மனதில் தோன்றுகிறது. அதாவது ''மரணம்'' கொஞ்ச நாட்கள் தன் வேலையிலிருந்து ஓய்வு பெற்று, விடு முறையைக் கழிக்கத் திட்டமிட்டால் என்ன நடக்கும் என சிந்திக்கிறான். இதுதான் இத்திரைப்படத்தின் மூலக்கரு.

இத்திரைப்படத்தில் மரணத்தை ஒரு தனி கதாபாத்திரமாக உருவாக்கியிருக்கிறார்கள். இந்தக் கதாபாத்திரத்தை மையமாக வைத்துதான் கதையாசிரியர் ஆர்பார்ட் கேஸெல்லலா என்பவர் 'டெத் டேக்ஸ் எ ஹாலிடே' என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை எழுதினார்.

இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், தன்னைக்கண்டு உலகில் உள்ள அனைத்து மக்களும் ஏன் பயப்படுகிறார்கள் என்று மரணம் என்கிற கதாபாத்திரம் சிந்திக்கின்றது. இதனால் அந்த மரணம், மனிதன் உருவம் எடுத்து ஒரு ராஜாவின் வீட்டில் மூன்று நாட்கள் தங்குவதற்கு திட்டமிடுகிறது. இதனால் மரணம், இறந்து போன ஒரு வாலிபனின் உருவத்தில் வருகிறது. இதுதான் இத்திரைப்படத்தின் ஒரே வரிக்கதை. இத்திரைப்படத்தின் முக்கியக் கதாபாத்திரமான மரணம் என்ற கதாபாத்திரத்திற்காக ஃபிரெட்ரிக் மார்ச் என்ற புகழ் பெற்ற நடிகரைத் தேர்வு செய்தார்கள். ஃபிரெட்ரிக் மார்ச்சின் ஜோடியாக நடித்திருப்பவர் ஈவ்லின் வெனாபிள் என்ற நடிகை.

மரணம் தன்னுடைய விடுமுறையைக் கழிப்பதற்காக ஓர் அரண்மனைக்கு வருகிறது. இந்த உலகத்தில் ஏதோ ஒன்று இருக்கிறது. அதனால்தான் மக்கள் என்னைப் பார்த்து பயப் படுகிறார்கள். அது என்ன என்பதைத் தெரிந்து கொள் வதற் காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன் என்று அந்த அரண் மனையின் சொந்தக்காரனிடம் கூறுகிறது. அதனால் மரணம் மனித உருவத்தில் வேறு ஒரு ராஜாவைப் போல வருகிறது. இந்த ராஜா உண்மையிலேயே இறந்துவிட்டான். அதனால்தான் இவனது உருவத்தில் மரணம் வந்திருக்கிறது.

என்னைப் பற்றிய உண்மையை வெளியே சொல்லக் கூடாது. அப்படி சொன்னால் நான் உங்களது உயிரை எடுத்து விடுவேன் என்று ராஜாவைப் பார்த்து மரணம் கூறுகிறது. மரணம் அரண்மனையில் வந்து காலடி வைத்தபிறகு அனேகப் பிரச்ச னைகள் வருகின்றன. அனைத்தும் தலைகீழாக, அதே நேரம் எதிர் மாறாகவும், ஆச்சரியமாகவும் நடக்கின்றன. முதலில் நடக்கும் நிகழ்ச்சியாக ராஜாவின் மகன் ஒரு விபத்தில் இருந்து ஆச்சரியமாக தப்பித்துவிடுகிறான். இரண்டாவதாக ராஜாவே ஒருநாள் காரில் செல்லும்பொழுது ஒரு பெரிய விபத்து நடக்கிறது. ஆனால் அதில் எந்தவித உயிர்ச்சேதமும் இல்லாமல் அனைவரும் பிழைத்துக் கொள்கிறார்கள். இதன்பிறகு ஒரு இளம்பெண் அதாவது ஒருவனின் காதலி ஒருநாள் அரண்மனைத் தோட்டத்தில் நடந்து செல்லும் பொழுது ஒரு நிழலைப்பார்த்து அதிர்ச்சி அடைந்து மயங்கி

விழுகிறாள். இப்படி அனேக சம்பவங்கள் அரண்மனையில் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்கின்றன.

அன்றிரவு மரணம் ஒரு அழகான வாலிபனான இளவரசன் சிர்கி என்ற உருவத்தில் வருகிறது. அப்பொழுது ராஜா, அந்த அரண்மனையின் வேலைக்காரர்களிடம் இளவரசன் சிர்கியை அறிமுகப்படுத்துகிறார். அப்போது அங்கே வேலை செய்யும் ஒரு வயதான மனிதரான பரோன்கசாரி என்பவரிடம் இளவரசன் சிர்கி உருவத்தில் வரும் மரணம், ''உங்களது வயதைப் பார்க்கும் பொழுது ஏன் அந்த விதி உங்களை என்னிடம் முன்னதாகவே அறிமுகப்படுத்தவில்லை என வருந்துகிறேன்'' என்று நகைச்சுவை யாகக் கூறுகிறது. இந்த சமயத்தில் கதாநாயகி கிரேசியா படிக் கட்டில் நடந்து வருகிறாள். அவனை இளவரசன் சிர்கி (மரணம்) கண் இமைக்காமல் பார்க்கிறது. அவளும் சிர்கியை பார்க்கிறாள். இப்படியே இருவரும் ஒருவரை ஒருவர் கண் இமைக்காமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

அடுத்த நாள் நாளிதழில் வெளியான செய்திகள் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்துகிறது. மிக உயரமான கட்டிடத்திலிருந்து குதித்த ஒரு மனிதனுக்கு ஒரு சிறிய காயம்கூட ஏற்படவில்லை. அடுத்து ஒரு பெரிய வீட்டில் எதிர்பாராதவிதமாக தீ விபத்து நடந்து விடுகிறது. அந்த வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் சாகவில்லை, அனைவரும் பிழைத்திருக்கிறார்கள் என செய்திகள் வருகின்றன.

இப்படியிருக்க இளவரசன் சிர்கி (மரணம்) அல்டா என்ற பெண்ணுடனும் அவளது தோழியான ரோடா என்பவளுடனும் பொங்கும் மகிழ்ச்சியுடன் ஊரைச்சுற்றிப் பார்த்துக் கொண் டிருக்கிறது. ஆனால் இளவரசன் சிர்கி (மரணம்)க்கு இப்படிப்பட்ட வாழ்க்கைப் பிடிக்கவில்லை. வெறுத்து விடுகிறது. அதன் காரணமாக மிகவும் மனச்சோர்வு அடைந்து ஒரு வியாபாரியிடம் தன்னுடைய சோகத்தைச் சொல்லி புலம்புகிறது. அதற்கு அந்த வியாபாரி, ''நீ சோகத்தை விட்டு சந்தோஷமாக இருக்க இந்த உலகத்தில் ஒன்றே ஒன்று இருக்கிறது'' என்கிறான். உடனே இளவரசன் சிர்கி (மரணம்) ''அது என்ன சொல்...'' எனக் கேட்கிறது. அதற்கு அந்த வியாபாரி... ''இந்த உலகத்தில் காதல் என்று ஒன்று

இருக்கிறது. அதை நீ தேடினால் அது உன் வாழ்க்கையையே தலைகீழாக மாற்றிவிடும்.'' என்று கூறுகிறான். ஆனால் இளவரசன் சிர்கி (மரணம்) அதை நம்பவில்லை.

இந்நிலையில் அந்த மரணம் அரண்மனையில் தங்க வேண்டியக் காலக்கெடு முடியப்போகிறது. அன்றுதான் கடைசி நாளாகும். அந்த நாளில் அரண்மனையில் மிகப்பெரிய விருந்து நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது இளவரசன் சிர்கி (மரணம்)யுடன் ஊர் சுற்றிய பெண்ணான அல்டா என்பவள் வந்து சிர்கியிடம் தான் சிர்கியை விரும்புவதாகக் கூறுகிறாள். ஆனால் இளவரசன் சிர்கி (மரணம்) அது முடியாது என மறுத்துவிடுகிறது. அந்த சமயம் அங்கே கிரேசியா அதாவது கதாநாயகி வருகிறாள். அவளும் இளவரவசன் சிர்கி (மரணம்)யும் சேர்ந்து நடன மாடுகிறார்கள். அந்த சந்தர்ப்பத்திலிருந்து இருவரும் காதலிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

இப்பொழுது இளவரசன் சிர்கி (மரணம்)க்கு மீண்டும் தன் உண்மையான நிலைக்குத் திரும்பவேண்டிய நேரம் வந்து விடுகிறது. அப்படி மாறுவதற்கு சில மணித்துளிகளே உள்ளன. இளவரசன் சிர்கி விடைபெற்றுப் புறப்படத் தயாராகிறது. அந்த நேரம் கதாநாயகியான கிரேசியா தானும் வருவதாகக் கூறுகிறாள். சிர்கி அதற்கு மறுக்கிறது. ஆனால் கிரேசி பிடிவாதம் பிடிக்கிறாள். அதன்பின்பு சிர்கி தான் யார் என்பதையும், தன்னுடைய நிலையையும் எடுத்துக் கூறுகிறது. அப்பொழுது மணி கடிகாரத்தில் பனிரெண்டு என முள்கள் இரண்டும் பனிரெண்டில் நிற்கிறது.

இப்பொழுது சிர்கியின் உருவம் சிறிது சிறிதாக மறைந்து மரணத்தின் உண்மையான உருவம் வந்துவிடுகிறது. உடனே மரணம் கிரேசியாவிடம், ''இதுதான் என் உண்மையான தோற்றம்'' என்று கூறுகிறது. ஆனால் கிரேசியாவோ மரணத்திடம், ''எனக்கு இப்போது உன்னிடம் எந்த ஒரு வித்தியாசமும் தோன்றவில்லை. நீ அப்படியேதான் இருக்கிறாய். நான் இப்போதும்கூட உன்னை நேசிக்கிறேன்'' என்று கூறுகிறாள். அதற்கு அந்த மரணம், ''காதல் மரணத்தைவிட பெரியது. அதற்கு நிகர் எதுவும் இல்லை'' எனக் கூறுகிறது. அப்பொழுது இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடிக்கிறார்கள். அடுத்த விநாடியில் இருவரும் மறைந்து விடு

கிறார்கள். மரணம் தன்னுடன் கிரேசியாவையும் அழைத்துச் சென்று விட்டது என்பதுதான் இதற்கு அர்த்தம். இதுதான் இத்திரைப் படத்தின் இறுதிக்காட்சியாகும்.

இத்திரைப்படத்தில் வரும் சம்பவங்கள் இவ்வுலகில் நடக்க முற்றிலும் வாய்ப்பே இல்லை. இது ஒரு நம்பமுடியாத கற்பனைக் கதைதான். ஆனால் இவை எல்லாவற்றையும் மீறி இத்திரைப்படம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

**நிடடவோவில் (Nidadavole) தற்காலிகப் பணி**

1968ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தற்காலிக பணியிட மாற்றமாக ஆந்திராவில் நிடடவோல் என்ற ஊரில் 15நாட்கள் பணிபுரிவதற்காக அனுப்பப்பட்டேன். நிடடவோல் ஒரு சிறு நகரமாகும். விஜயவாடாவிலிருந்து ராஜமகேந்திரபுரம் செல்லும் ரயில் பாதையில் கோதாவரி ஆற்றிற்கு முன்பாக அமைந்துள்ளது. கோதாவரி ஆற்றிலிருந்து பிரியும் பாசனக்கால்வாய் ஒன்று இந்த ஊரின் மத்தியப்பகுதி வழியாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த ஊரில் அரிசி அரைவை ஆலைகள் பல உள்ளன. விஜயவாடா விலிருந்து எலூரு, தாடேபள்ளிக்கூடம் வழியாக நிடடவோல் ரயில் சந்திப்பினை அடையலாம். விஜயவாடாவிலிருந்து குடிவாடா பீமாவரம் வழியாக நிடடவோலைச் சென்றடையலாம். அதனால் நிடடவோல் ரயில்வே சந்திப்பு என்னும் அந்தஸ்த்தைப் பெறுகிறது. நிடடவோலின் மத்தியில் கோட்டை ஒன்று உள்ளது. கீழைச் சாளுக்கியர்கள் இந்தக் கோட்டையைக் கட்டியதாகக் கூறப் படுகிறது. நிடடவோலைச் சுற்றி 108 சிவன் கோயில்கள் இருந்த தாகவும், கி.பி.1323ஆம் ஆண்டு முகம்மது பின் துக்ளக் என்ற உலூக் கானுடைய படையெடுப்பால் பாழ்படுத்தப்பட்டன என்றும் அறியப்படுகிறது. இன்றும் ஆறடி உயரம் கொண்ட லிங்கங்கள் பாழ்பட்ட நிலையில் ஆங்காங்கு காணப்படுகின்றன.

நிடடவோலில் பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்யும் டெப்போ ரயில் நிலையத்திற்கு அண்மையில் அமைந்து இருந்தது. விசாகப்பட்டினம் இந்தியன் ஆயில் எண்ணெய்க்கிடங் கிலிருந்து லாரிகள் மூலமும், ரயில்வே வேகன்கள் மூலமும் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படும். நிடடவோல் de

poவில் பணி புரிவது பளுவான வேலை என்று கூறுவதற்கில்லை. ஊரெங்கும் தென்னைமரச் சோலைகளைக் காணலாம். நிடடவோல் ரயில் சந்திப்பில் உள்ள 'வெஜிடேரியன் ரெப்ரஷ்மென்ட் ஸ்டாலில்' தான் தமிழ்நாட்டு உணவு வகைகள் கிடைக்கும். தங்குவதற்கான விடுதி கடைத்தெருவில் அமைந்திருந்தது. பொழுதுபோக்கு என்பது தெலுங்குத் திரைப்படங்கள் பார்ப்பதே.

1968ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஜேம்ஸ் பாண்ட் பாணிப் படங்கள் தெலுங்கில் வெளிவரத் தொடங்கின. Gooda chari என்ற தெலுங்கு சொல்லுக்கு உளவு பார்ப்பவன் என்று பெயர். ஆந்திராவில் Goodachari 115 என்ற தலைப்பில் அக்காலத்திய நடிகரான கிருஷ்ணா நடித்து, பல படங்கள் வெளிவந்தன. இவையனைத்தும் மசாலாப்படங்கள். நினைக்க முடியாத சாகசங் களையெல்லாம் கதாநாயகன் செய்திடுவான். ஒவ்வொரு படமும் குறைந்தது சுமார் 3 மணிநேரம் ஓடும். சில நாள் பார்த்த படத்தையே பார்த்து பொழுதைக் கழிக்க வேண்டியதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லலை.

### கொவ்வூரும், ராஜமகேந்திரபுரமும்

ஒருநாள் அண்மையிலுள்ள கோதாவரிக்கரை ஊரான கொவ்வூருக்கும், புகழ்பெற்ற ராஜமகேந்திரபுரத்திற்கும் சென்று வந்தேன். கொவ்வூர் என்ற பெயருக்கு 'கோவு ஊரு' என்று பொருள். அதாவது பசுக்கள் கூட்டமாகக் காணப்படும் இடம் என்பது அதன் பொருளாகும். கொவ்வூரின் அக்கரையே ராஜமகேந்திரபுரமாகும். கொவ்வூரையும் ராஜமகேந்திரபுரத்தையும் அப்போது இணைத்து வந்தது சர் ஆர்தர் காட்டன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட ரயில் பாலமே, அல்லது படகில் சவாரி செய்து ராஜமகேந்திர புரத்தை அடையவேண்டும். பல மைல்கள் சுற்றிச் சென்றால் மற்றைய வாகனங்கள் செல்லக்கூடிய பாலத்தின் வழி ராசோல் எனப்படும் ஊரை அடையலாம். அங்கிருந்து ராஜமகேந்திரபுரத்திற்கு வரவேண்டும். கொவ்வூரிலிருந்து மூன்று கிலோமீட்டர் படகு சவாரி செய்து ராஜமகேந்திரபுரத்தை அடையலாம். கொவ்வூரிலிருந்து பத்ராசலம் செல்வதற்குப் பேருந்து வசதியுண்டு.இந்தியாவிலேயே மிகப் பெரிய ரயில்வே பாலமும் அதன்மேலே மற்றைய வாகனங் கள்செல்லும் வசதியும் கொண்ட Rail Cum Roadbridge 30 ஆண்டு

களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டது. கொவ்வூரைச் சுற்றி எங்கும் பசுமையான கிராமங்கள் காணப்படும். கோதாவரியின் கரையில் சரஸ்வதிக்கான கோயில் அமைந்துள்ளது. கொவ்வூரைச் சுற்றி உள்ள கிராமங்களிலும் கோதாவரி ஆற்றிலும் பல திரைப்படக் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன.

கொவ்வூரிலிருந்து கோதாவரியைக் கடந்தால் ராஜமகேந் திரபுரத்தை அடையலாம். இந்தப் பகுதி கிழக்குக் கோதாவரிப் பகுதி என்று வழங்கப்படுகிறது. ஆந்திர தேசத்துப் பண்பாட்டு மையம் என்ற பெயரைப் பெற்றது ராஜமகேந்திரபுரம். இந்த ஊரில் இன்றும் பல வேதவிற்பன்னர்கள் வாழ்ந்து வருகின்றனர். கி.பி. 1022இல் இந்தப் பகுதியை ஆண்டு வந்தவன் ராஜராஜநரேந்திரன் என்பான். இவனுக்கு ராஜமகேந்திரவர்மன் என்ற பெயரும் அமைந்திருந்தது. அதனால் ராஜமகேந்திரபுரம் என்ற பெயர் ஊருக்கு அமைந்தது. இந்தச் சொல் திரிந்து ராஜ்முந்திரி என்ற பெயர் பெற்றது. இந்த ஊரில் பிறந்த நன்னையா என்னும் கவி மகாபாரதத்தை தெலுங்கில் பாடினார். கந்தூரி வீரேசலிங்கம் என்ற சமூக சீர்திருத்தவாதி இந்த ஊரில்தான் பிறந்தார். 'தி ஹிந்து' நாளிதழைத் தொடங்கிய சுப்பாராவ் இந்த ஊரில் பிறந்தவராவார். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கோதாவரி புஷ்கரம் இங்கு நடைபெறும்.

**கண்டிப்பேட்டைக்குச் சுற்றுலா சென்றோம்**

ஹைதராபாத் மூசியாற்றங்கரையில் அமைந்துள்ள ஓர் நகரமாகும். ஊருக்கு அழகு சேர்ப்பதும், ஹைதராபாத் செகந்திரா பாத் நகரைப் பிரிப்பதும் ஹுசேன் சாகர் எனப்படும் ஏரியாகும். இதன் கரையில் அமைந்துள்ள Tank bund ரோடு சென்னையிலுள்ள மெரீனா கடற்கரையைப் போன்று விளங்கும். தேசத் தலைவர் களுடைய சிலைகளை ஏரியின் கரைகளில் காணலாம். சிறு பூங்காக்கள், பல்வகைப்பட்ட மக்கள் அமர்ந்து பொழுது போக்கு வதற்காக போடப்பட்ட சிமென்ட்டினால் ஆன இருக்கைகள் ஆங்காங்கே காணப்படும். 20 கிலோமீட்டர் வண்டியை ஓட்டும் கற்றுக்குட்டிகள்கூட Tank bund ரோடு வந்தவாறே 60, 80 கிலோ மீட்டரில் செல்லத்துடிக்கும் சீரான சாலை இந்த ஏரிக்கரையில் அமைந்துள்ளது. இதன்நீளம் 2.5கிலோமீட்டர். இந்த ஏரியை Ibrahim Quali Qutb Shah (1550-80) என்ற மன்னனுடைய ஆட்சிக்

காலத்தில் 1562ஆம் ஆண்டு Hussain Shah Wali என்பானால் நிர்மாணிக்கப்பட்டது. இதன் பரப்பளவு 12 சதுர கிலோ மீட்டராகும். *(1992ஆம் ஆண்டு இந்த ஏரியின் மத்தியப்பகுதியில் 18 மீட்டர் உயரம் கொண்ட புத்தர்சிலை நிறுவப்பட்டது. இந்தச் சிலையை 1990ஆம் ஆண்டு நிர்மாணிக்க முயன்றபோது இயந்திரக் கோளாறினால் அந்தப் பிரம்மாண்டமான சிலை ஏரியிலே வீழ்ந்து மூழ்கி விட்டது. 2 ஆண்டு களுக்குப் பிறகு அந்தச் சிலை எடுக்கப்பட்டு 1992ஆம் ஆண்டு நிர்மாணம் செய்யப்பட்டது. இந்த ஏரியில் அவ்வப்போது தற்கொலை செய்து கொண்டோர் பிணங்கள் மிதந்து வரும்.)* ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான வண்ணம் தீட்டிய விநாயகர் சிலைகள் இந்த ஏரியில் அமிழ்த்தப்படுகின்றன. இதன் விளைவாக அந்த வண்ணங்களிலிருந்து வெளிப்படும் Mercury and Arsenic போன்ற விஷத்தன்மைகொண்ட உலோகங்கள் வெளிப்பட்டு நீரானது மாசடைந்துள்ளது. இதன் விளைவாக கரைக்கு அப்பா லுள்ள கிராமங்களில் கிணற்று நீர் பெருமளவில் பாழ்பட்டுள்ளது. நகருக்குக் குடிநீர் வழங்குவதற்கென மஞ்ஜீரா என்ற ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரப்பட்டு, விநியோகிக்கப்படுகிறது. ஆனால் பெரும்பகுதி கண்டிப்பேட் ஏரி என்னும் ஏரியில் இருந்து பெறப் படுகிறது. கோல்கொண்டா கோட்டையைத் தாண்டி இந்தக் கண்டிப்பேட்டைக்குச் செல்லவேண்டும்.

மூசியாற்றில் வந்து சேரும் உபரி நீரை பயனுள்ளதாய் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தோடு 1920ஆம் ஆண்டு மிர் காசிம் அலிகான் என்பவர் இந்த ஏரியை நிர்மாணித்தார். 46 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது இந்த ஏரி. ஆண்டு முழுவதும் யாத்ரிகர்கள் இந்த ஏரியைக் கண்டு களிப்பதற் காக வருகை தருகின்றனர்.

**மூத்த மகன் வாசுதேவன் பிறந்தான்**

1968ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் மெட்டுகுடா டெப் போவிலிருந்து திரு. அண்ணாமலை டெப்போ மேனேஜராகப் பணியாற்றி வந்தபோது சுற்றுலா சென்றோம். அன்று முழுவதும் ஏரியில் பொழுதைக் கழித்துவிட்டு இரவு வீட்டிற்கு வந்தபோது மன்னார்குடியிலிருந்து சௌ. ருக்மிணிக்கு மார்கழி உத்திராட நக்ஷத்ரத்தில் (23.12.1968) ஆண் குழந்தை பிறந்துள்ளதாகவும்,

தாயும் சேயும் நலமாக இருக்கின்றனர் என்ற செய்தியும் தந்திமூலம் கிடைக்கப் பெற்றது. மன்னார்குடியில் நடந்த புண்யாகவாசனத் திற்கு என்னால் செல்லமுடியவில்லை. ருக்மிணியையும் குழந்தை வாசுதேவனையும் ஒரு மாதத்திற்குப் பிறகு சென்று பார்த்தேன்.

**நாடெங்கும் அமைதியில்லாத சூழல் உருவாகிக் கொண்டிருந்தது**

தெலுங்கானா கிளர்ச்சியின் விளைவாக நாள்தோறும் செகந் திராபாத், ஹைதராபாத் நகரில் துப்பாக்கிச்சூடுகள் நடைபெற்று வந்தன. எங்கும் அமைதியின்மை காணப்பட்டது. நகரின் பல பகுதி களில் Curfew எனப்படும் ஊரடங்கு உத்திரவு அமுலில் இருந்தது. இதன் விளைவாகச் சில இடங்களுக்குப் பெட்ரோல் டீசல் நிரப்பிய லாரிகள் செல்ல முடியவில்லை. சில நாட்களில் ஒரு இடத்திற்குச் சென்ற எண்ணெய் லாரி எப்போது திரும்பி வரும் என்றே தெரி யாது. வந்தபிறகு இரவு 8 அல்லது 9 மணியானாலும் அவற்றில் பெட்ரோலியப் பொருள்களை நிரப்பி அனுப்ப வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. சில நாட்கள் இரவு உணவு உட்கொள்வதற்குக் கூட இயலாது.

1969ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி பிளவுபட்டது. அமெரிக்க உதவி பெருமளவில் குறைக்கப்பட்டது. குறிப்பாக மேற்கு வங்காளம், ஆந்திரா, ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் நக்ஸ்லைட்டுகள் நாச வேலைகளில் ஈடுபட்டு வந்தனர். உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பல மாதங்களுக்கு வகுப்புகள் நடைபெறவில்லை. வாரங்கல்லில் செயல்பட்டு வந்த காகடீயா பல்கலைக் கழகம் மற்றும் Regional Engineering Colleges மாணவர்கள் பெரும்பாலானோர் நக்ஸ்லைட்டுகளாக உருவாக்கப் பட்டு வந்தனர். மேற்கு வங்காளத்தில் தொழிலாளர் பிரச்சனைகளில் தீர்வு காண்பதற்குத் தொழிலாளர்கள் 'Gherao' என்ற ஒரு புதிய வன் முறையைக் கையாண்டனர். இந்த முறையில் உயர் அதிகாரிகள் அவர்கள் பணி புரியும் அறைகளிலிருந்து பல நாட்கள் அல்லது பல மணி நேரங்கள் வெளியே வரஇயலாது ‘சிறை’ வைக்கப்பட்டனர். மேற்கு வங்காளத்தில் தோன்றிய இந்த 'Gherao' நாடெங்கும் பரவிற்று.

(தொடரும்)